Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
TP - 0212225969
Hotline: 0212229497
(C/2517)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 09 திங்கட்கிழமை (22.04.2013) பக்கங்கள் 20 ஓசை – 204
















# இலங்கை பிரச்சினைத் தீர்விற்கு இந்தியாவுடன் பேசிப் பயனில்லை

## கூட்டமைப்பிற்குக் கூறுகிறது அரசு



(கொழும்பு)

இலங்கை பிரச்சினைக்கான தீர்வு குறித்து இந்தியாவுடன் பேசுவதனால் எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது. அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம், வடக்கு, கிழக்கை ஒன்றிணைத்து இடைக்கால நிர்வாக சபையொன்றை ஏற்படுத்த வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்திருந்தது.

இந்த நிலையிலேயே அரசாங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர், அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கு, கிழக்கை இணைத்து இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்தக்கோரும் கூட்டமைப்பின் கோரிக்கை நியாயமற்றது. இலங்கை பிரச்சினைக்கான தீர்வு குறித்து இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பேசுவதில் எவ்வித பயனுமில்லை. மாறாக அரசாங்கத்துடனேயே கூட்டமைப்பு பேச்சு நடத்தவேண்டும்.

எதிர்வரும் வடமாகாண சபைத் தேர்தல்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும். நாட்டின் உள்விவகாரங்களில் வெளிநாடுகளைத் தலையீடு செய்யக்கோருவது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது என அவர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கில் உருவாக்கப்படும் புதிய ஜனநாயக இயக்கம்

## கூட்டமைப்பின் புதுமுயற்சி

வடக்கில் இராணுவ ஆக்கிரமிப்பு, ஊடக அடக்குமுறைகள் உட்பட அரசாங்கம் மேற்கொண்டு வரும் அராஜகங்களைக் கண்டித்து மாபெரும் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு ஏதுவாக ஜனநாயக இயக்கம் ஒன்றை அமைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், குடியியல் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கியே இந்த இயக்கம் அமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்த இயக்கம் இன்னும் சில தினங்களில் அமைக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டது எனஅரசாங்கம் சர்வதேசத்திற்கு அறிவித்து நான்கு வருடங்கள் நிறைவடைகின்றன. ஆனால், வடக்கில் இராணுவத்தின் நில

19 ஆம் பக்கம் பார்க்க

# நாட்டை பிளவுபடுத்துவதற்கு ஒருபோதும் கோரியதில்லை

## கூறுகிறார் மன்னார் ஆயர்

நாட்டை பிளவுபடுத்த வேண்டுமென தாம் ஒருபோதும் கோரியதில்லை என மன்னார் பேராயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு காத்திரமான தீர்வுத்திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அண்மையில் சில ஊடகங்களில் நாட்டைப் பிளவுபடுத்த கோரியதாக

19 ஆம் பக்கம் பார்க்க


# இலங்கையில் பொதுநலவாய மாநாடு விசேட கூட்டம் லண்டனில்

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமர்வுகளை நடாத்துவது குறித்து லண்டனில் விசேட கூட்டமொன்று நடத்தப்பட உள்ளது. எதிர்வரும் வெள்ளிக்கிழமை லண்டனில் பொதுநலவாய நாடுகள் அமைச்சர்கள் மாநாடு நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் இலங்கையில் அமர்வுகளை நடாத்துவது குறித்த முக்கிய தீர்மானம் எடுக்கப்படும் என குறிப்பிடப்படுகிறது. அமர்வுகளை வேறும் நாட்டில் நடாத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடாத்துவது

19 ஆம் பக்கம் பார்க்க

# இனந்தெரியாத விஷமிகள் கைவரிசை முள்ளியவளையில் 4 வீடுகள் எரிப்பு

முல்லைத்தீவு கரைத்துறைப் பற்றுப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட முள்ளியவளை இரண்டாம் வட்டாரத்தில் அண்மையில் மீள்குடியமர்ந்த மக்களின் நான்கு வீடுகள் நேற்று அதிகாலை 1.00 மணியளவில் இனந்தெரியாதோரால் எரித்து நாசமாககப்பட்டுள்ளன. குறித்த எரிப்புச் சம்பவத்தினால் இரண்டு வீடுகளிலிருந்த உடமைகள் முற்றாக எரிந்து நாசமாகிய அதேவேளை ஏனைய இரண்டு வீடுகளிலும் உடமைகள் எவையும் இல்லாதபோதிலும் வீடுகள் முற்றாக எரிந்து



19 ஆம் பக்கம் பார்க்க

# இணையத்தளங்கள் மூலம் குடும்பத்தினர் விமர்சிப்பு

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இணையத்தளங்களில் எனது குடும்பத்திலுள்ள அனைவரையும் விமர்சிக்கின்றனர். கோத்தாபய, பசிலை விமர்சிக்கின்றனர். அத்துடன் நின்றுவிடாது எனது பிள்ளைகள் மூவரையும் விமர்சிக்கின்றனர் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்திலுள்ள முதலமைச்சர் அலுவலத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச சபை உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடும் போதே இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஊடகங்கள் மூலம் வெளியிடப்படுகின்ற விமர்சனங்களுக்கு அஞ்சாமல் மக்களுக்கு நேர்மையாக சேவையாற்ற வேண்டும். சாதகமான கண்ணோட்டத்துடன்

19 ஆம் பக்கம் பார்க்க

# ஆஸி. செல்ல முயற்சி 80 பேர் யாழில் கைது

சட்ட விரோதமான முறையில் அவுஸ்ரேலியா செல்ல முறபட்ட 80 பேர் யாழ்ப்பாணம் பருததித்துறை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டனர். நேற்று அதிகாலை மீன்பிடிப் படகு ஒன்றின் மூலம் அவர்கள் இவ்வாறு அவுஸ்ரேலியா செல்ல முற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்களில் 38 பேர் ஆண்கள் எனவும், 18 பேர் பெண்கள் என்றும்; ஏனைய 24 பேரும்

19 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கில் நில அபகரிப்புக்கு எதிராக யாழ். செயலகம் முன் போராட்டம்

வடக்கு மாகாணத்தில் இடம்பெற்றுவரும் திட்டமிட்ட நில அபகரிப்பிற்கு எதிராக எதிர்வரும் 24 ஆம் திகதி யாழ். மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது. 24 ஆம் திகதி முற்பகல் 11.00 மணி தொடக்கம் 1.00 மணி வரை இந்தப் போராட்டத்தை வலி. வடக்கு மற்றும் நில ஆக்கிரமிப்பினால் பாதிக்கப்பட்ட மக்

19 ஆம் பக்கம் பார்க்க

# மண்ணின் மகிமைத்திட்டத்தின் மூலம் காணிப் பிணக்குகளுக்கு சிறந்த தீர்வு



கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக வடக்கு, கிழக்கில் காணப்பட்ட யுத்த சூழல் காரணமாக மக்களின் காணிப் பிணக்குகள் தொடர்பில் சீரான எவ்வித நடவடிக்கைகளும் காணப்படவில்லை. எனவே இதனை நிவர்த்தி செய்யும் வகையில் அறிமுகப்ப்டுத்தப்பட்ட மண்ணின மகிமை (பிம்சவிய) திட்டம் இன்று ஒரு சிறந்த திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் ஊற்றுப்புலம கிராமத்தில் மண்ணின் மகிமை திட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அந்த மக்களுக்கான காணி ஆவணம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றவேளை அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் முதல் முறையாக கிளிநொச்சி மாவட்டத்திலேயே மண்ணின் மகிமைத் திட்டத்தின் கீழ் ஊற்றுப்புலம் கிராமத்திற்கான காணி ஆவணங்கள் வழங்கப் படுகிறது. இது ஒரு மகிழ்ச்சியான விடயம்.இதற்காக உழைத்த அனைவருக்கும் மக்கள் சார்பாக எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்த மாவட்டத்தில் மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் அதிகளவு காணிப பிணக்குகளே காணப்படுகிறது. அதிகாரிகள் முதல் அனைத்து தரப்பினர்களும் இந்த காணிப் பிணக்குகளை தீர்ப்பதில் பல்வேறு சிரமங்களை சந்தித்து வருகின்ற இந்த நிலையில்தான் மண்ணின் மகிமை திட்டம் இங்கு நிலவுகின்ற காணிப்பிணக்குகளுக்கு இலகுவாக தீர்வுகளை பெற்றுக்கொடுக்க வழிவகுத்திருக்கிறது.

மண்ணின் மகிமைத் திட்டத்தின் பயனை பாதிக்கப்பட்டுள்ள எமது மக்கள் இன்னும் ஒரு வருடங்களுக்கு முன்னரே பெற்றுக் கொள்ளக் கூடிய நிலை இருந்தது. ஆனால் அது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இந்தத் திட்டத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தமையினால் இந்தத் திட்டத்தின் பயனை மக்கள் பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்படுத்தப்பட்டது. இருப்பினும் அதிலுள்ள சட்டச்சிக்கல்களை தீர்த்து திட்டத்தை நடைமுறைப்படுத்தி அதன் பயனை மக்கள் இன்று பெற்றுக்கொள்ளக்கூடிய நிலை உருவாகியுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள வறிய எமது பிரதேச மக்களுக்கு மண்ணின் மகிமைத் திட்டம் ஒரு வரப்பிரசாதமாகும்.

ஊற்றுப்புலம் கிராமத்தின் அபிவிருத்தி தொடர்பிலும் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிலும் நாம் அதிகம் கவனம் செலுத்தி வருகின்றோம். தற்போதும் கூட இங்குள்ள ஆறு உள்ளக வீதிகள் புனரமைக்க சில திட்டங்களுக்கூடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. முக்கியமாக இந்த கிராம மக்களின் முக்கிய கோரிக்கையான இரண்டு குடியிருப்புக்களையும் இணைக்கும் பாலத்தினை அமைத்தல், அதற்காக 120 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தப்பணியும் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்த இந்நிகழ்வின் போது ஊற்றுப்புலம் கிராமத்தைச் சேர்ந்த 59குடும்பங்களுக்கு முதற் தடவையாக காணி ஆவணம் வழங்கப்பட்டது. அதேவேளை ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் 2012 பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட ஒலி பெருக்கி தொகுதிகள் கையளிக்கப்பட்டதோடு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஊடாக பெறப்பட்ட தறப்பாள் கூடாரங்களும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன்,' பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் சிவகுமார், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் தவநாதன், கிராம அலுவலர் சிவனேசன் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# மஹோற்சவம்

(யாழ்.நிருபர்)

மூளாய் சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம கடந்த வாரம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை இரதோற்சவமும் மறுநாள் 25ஆம் திகதி வியாழக் கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (10)

□ □ □

(யாழ்.நிருபர்)

வண்ணை குளங்கரை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய (நாச்சிமார்கோயில்) வருடாந்த மஹோற சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமைஇரதோற்சவமும் மறுநாள் 25ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (10)

# சமூக விஞ்ஞானப்போட்டியில் பூநகரி மாணவி சாதனை



(முழங்காவில்)

பூநகரி கோட்டத்தைச் சேர்ந்த ஞானிமடம் இ.த.க.பாடசாலையில் தரம் -7 இல் கல்வி பயிலும் மாணவி சதீஸ்கரன் சயந்தா சமூக விஞ்ஞானப்போட்டியில் கோட்ட மட்டத்திலும், கிளிநொச்சி வலய மட்டத்திலும், வடமாகாண மட்டத்திலும் முதலாம் இடத்தைப் பெற்று சகலதரப்பினராலும் பாராட்டுக்களைப்பெற்றுள்ளார்.

இவர் தேசிய மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் மூன்றாம் இடத்தினைப்பெற்றுக்கொண்டமை குறிப்பிட்த்தக்கது. (112)

# - வெளிநாட்டு பணத்திற்கு ஆசைப்பட்டு - முதியோர் இல்லத்திலிருந்தவரை சகோதரி என அழைத்துச் சென்றபெண்

(திருநெல்வேலி)

கைதடி முதியோர் இல்லத்தில் தங்கியிருந்த வயோதிபப் பெண்ஒருவரை அவரது சகோதரி எனக் கூறி அடையாளப் படுத்திய மற்றொரு வயோதிப மாது அவரை அழைத்துச் சென்று இரண்டு நாட்களின் பின்னர் மீண்டும் வயோதிப்ர் இல்லத்திலேயே அவரைக் கூட்டி வந்து விட்டுச் சென்றுள்ளார். இல்ல அத்தியட்சகரிடம் வந்த கரணவாய் தெற்கைச் சேர்ந்த தங்கராசா பார்வதி (வயது-65) என்னும் பெண், தான் இரண்டு நாட்களுக்கு முன்னர் இல்லத்தில் வந்து தங்கியுள்ள வல்லிபுரம் அன்னம்மா (வயது-80) என்பவரின் சகோதரி எனவும் அவரை அழைத்துச் சென்று தன்னுடன் வைத்திருக்கப் போவதாகவும் தெரிவித்துத் தன்னுடன் கூட்டிச்சென்றுள்ளார்.

ஆனால், அவர் தனிமையில் விடப்பட்டிருப்பதையும், ஜீவாதாரத்துக்கு மிகவும் கஷ்டப்படுவதையும் கண்ட ஊரவர்கள் கிராம சேவையாளர் மற்றும் சமூக சேவை உத்தியோகத்தரிடம் அறிவித்ததைத் தொடர்ந்து சகோதரி முறையான பெண் கிராம சேவகரால் அழைக்கப்பட்டு கடுமையாக எச்சரிக்கப்பட்டார். இந் நிலையில் மீண்டும் அப் பெண் கடந்த வெள்ளிக்கிழமை கைதடி வயோதிபர் இல்லத்துக்கு முச்சக்கரவண்டியில் அழைத்து வரப் பட்டார்.

வல்லிபுரம் அன்னம்மாவுக்கு ஒரே ஒரு மகன் எனவும், அவர் வெளிநாட்டில் குடும்பத்துடன் தங்கியிருப்பதாகவும், அவரது பேரப்பிள்ளைகள் இவரைப் பராமரிப்பதற்குப் பணம் அனுப்புவதாகக் கூறியபடியினாலே சகோதரி முறையான பெண் இவரைக் கூட்டிச் சென்றதாகத் தெரிய வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

# அடுத்தமாதம் நடைபெறவுள்ள இளைஞர் நாடாளுமன்ற தேர்தல்

(முழங்காவில்)

இளைஞர் நாடாளுமன்றத்துக்கான 2ஆவது நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 4ஆம் திகதி இலங்கை பூராகவும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்கான வேட்பு மனுக்கள் ஏப்ரல் 20 ஆம் திகதியில் இருந்து 30 ஆம் திகதிவரை பூநகரி பிரதேச செயலகத்தில் பூநகரி பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார் மேற்பார்வையில் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதாக சம்பந்தப்பட்ட அலுவலரால் தெரிவிக்கப்படுகிறது.

இளைஞர் கழக அங்கத்தவர்கள் அனைவரும் இத்தேர்தலில் வாக்களிக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (112)

# மக்கள் வங்கியில் வெற்றிடங்கள் கோரப்படுகிறது விண்ணப்பம்

(யாழ்.நிருபர்)

மக்கள் வங்கி பயிலுநர் ஆங்கில சுருக்கெழுத்தாளர் மற்றும் செயலாளர் உதவியாளர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு சிறந்த திறமைகளையும், தகைமைகளையும் கொண்ட இளம் நபர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகள் க்.பொ.த. சாதாரணதரத்தில் ஒரே அமர்வில் 5 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியும் கணிதம், ஆங்கிலம், சிங்களம், தமிழ் மொழியில் திறமைச்சித்தியும் பெற்றிருத்தல் அவசியமாகும்.

க.பொ.த உயர்தரப்பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

அரச தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றின் மூலம் வழங்கப்படுகின்ற செயலாளர் பயிற்சி (ஆங்கிலமொழிமூலம்) தொடர்பான ஒரு வருட தேசிய சான்றிதழ் பெற்றிருக்கவேண்டும். 25 வயதுக்கும் குறைவான, தகைமையுடைய விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை 12.05.2013 இற்கு முன்னர் பிரதிப் பொது முகாமையாளர், (மனித வளம்) மக்கள் வங்கி தலைமையகம், இல.75 சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு - 02 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (10)





ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் செனரர் ஒரு கூரையின் கீழ் புதிய பொலிவுடன் புதிய சேவையை இன்று, இல 87, பலாலி வீதி கோண்டாவில் என்ற முகவரியில் ஆரம்பிக்கின்றத. இந்த ஆரம்ப நிகழ்வு தொடர்பான பத்திரிகையாளர் மாநாடு நேற்று ரில்கோ ஹோட்டலில் நடைபெற்றன. இதில் கலந்து கொண்ட ஹேலீஸ் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.றிஸ்வி சாகீட் விளக்கமளிப்பதையும், ஹேலீஸ் நிறுவனத்தின் அதிகாரிகளையும் காணலாம்.

(ஆர்.இராஜகுமார்)







யாழ்ப்பாணம் எவர் ஷைன் கல்வி நிலையமும், சிறுவர் உலகமும் இணைந்து நடாத்திய முன்பள்ளிச் சிறார்களின் பேச்சுத்திறன்காண் வைபவத்தில் விருந்தினர்கள் விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதையும், பிரதம விருந்தினர் ஆசிரியர் எம்.கே.மகேஸ்வரன் உரையாற்றுவதையும், பேச்சுப்போட்டியில் முதலிடம் பெற்ற மாணவி உரை நிகழ்த்துவதையும் காணலாம். (137)

# ஆடற்கதை நடனநாடகம் வவுனியாவில் மேடையேற்றம்

(வவுனியா)

வட மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சினால் வருடாந்தம் தயாரித்து மேடையேற்றப்படும் 'ஆடற்கதை' நடன நாடகம் இம் முறை வவுனியா கலைஞர்களின் பங்களிப்புடன் தயாரித்து மேடையேற்றப்படவுள்ளது என வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் தெரிவித்தார்.

கலாபூசணம் வேலானந்தனின் நெறியாள்கையுடன் தயாரிக்கப்படும் இந் நடன நாடகத்தின் தொடக்கவிழாவும், பிரதிகள் கையளிப்பு நிகழ்வும் இன்று திங்கட்கிழமை காலை 11 மணிக்கு வவுனியா கந்தசாமி கோவிலில் இடம்பெறவுள்ளதுடன், கலைஞர்கள் தெரிவும் இடம்பெறவுள்ளதாகவும் கலாசார உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இந் நடன நாடகம் கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் தயாரித்து மேடையேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (160)

# குமிழமுனை கிராமத்திற்கென பேருந்து சேவைகள் எதுவும் இல்லை

## மக்கள் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள குமிழமுனை கிராமத்திற்கென எந்தவொரு பேருந்து சேவைகளும் இடம்பெறுவதில்லை எனவும் இதனால் இக்கிராம மக்கள் தாம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

இக்கிராம மக்கள் மீள்குடியேறி 2 வருடங்கள் கழிந்துள்ள நிலையில் எந்தவொரு பேருநது சேவைகளும் ஏற்படுத்தப்படவில்லை. இதனால் தமது அன்றாட செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாகவும், தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் இக்கிராம மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக இக்கிராமத்தில் பாடசாலை மாணவர்கள், பல்வேறு தொழில்களை மேற்கொளவோர் மற்றும் மருத்துவ சேவைகளைப் பெறுவோர் என பல தரப்பட்ட மக்கள் வாழ்கின்றனர்.

இந்நிலையில் இங்கு அரச, தனியார் பேருந்துகள் எவையும் சேவையில் இல்லாமையால் மர்ணவர்களும், மருத்துவ சேவையைப் பெறும் மக்களும், தொழிலாளர்களும் பெரும் சிரமத்தின் மத்தியில் தனியார் வாகனங்களிலும், துவிச்சக்கர வண்டிகளிலும், நடந்துமாகச் செல்ல வேண்டிய நிலை காணப்படுவதாக மக்கள் தமது கஷ்டத்தைத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கடந்த வருட ஆரம்பத்தில் அரச பேருந்து சேவை ஒன்று இடம்பெற்ற நிலையில் வருமானம் போதாமல் உள்ளதாக 2 மாதத்தில் இச்சேவை நிறுத்தப்பட்டதாகவும், தெரிவிக்கும் மக்கள் இச்சேவைகள் இடம பெற்ற காலப்பகுதியில் தாம் சிரமமின்றி போக்குவரத்தை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, இக்கிராம மக்களின் போக்குவரத்துத் தேவைகளைக் கருத்திற்கொண்டு இக்கிராமத்திற்கென பேருந்து சேவையை ஆரம்பிக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்கிராம மக்க்ள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# அடிதடியில் ஈடுபட்ட இளைஞர்கள் நீதிமன்றில் இன்று ஆஜர்

(வடமராட்சி)

வடமராட்சி பொற்பதி கிராமத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்த இளைஞர்களிடையே நடைபெற்ற போட்டியின் போது அடிதடியில் ஈடுபட்ட இளைஞர்கள் 7 பேரை பருத்தித்துறை பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜாபடுத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இக்கிராமத்திலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே கிரிக்கெட் போட்டியொன்று அணமையில் இடம்பெற்றது. இதில் ஒரு ஆட்டத்தால் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் 8 இளைஞர்களுக்கிடையே சண்டையில் முடிந்தது. காயமடைந்த 8 பேரும் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

இதில் ஒருவர் மேலதிக சிகிசசைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில் குறித்த நபரின வீட்டுக்குச் சென்று ஏனைய 7 பேரும் வீட்டிலிருந்த பொருட்கஷைள உடைத்து ரகளையில் ஈடுபட்டுள்ளதாகவும், 7 பேரையும் பருத்தித்துறை பொலிஸார் இன்று திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (116)

# சுகாதார அலுவலர்களுக்கு வினைத்திறன் பரீட்சை

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை (2013) எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது. இதன் பொருட்டு 2012 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியன்று கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இச்சேவையில் உள்ளவர்கள் நிதி முறைமைகள், நிர்வாகம், திணைக்கள பிரமாணம் (வினாப்பத்திரம் I,II) விசேட வினாப்பத்திரம் போன்ற பரீட்சைக்குத் தோற்றவேண்டும். மேலதிகமான பாடவிதானம், விண்ணப்பிக்கும்முறை போன்ற விபரங்களை 19 ஆம் திகதி ஏப்ரல் வெளியான அரசாங்க வர்த்தகமானியில் பார்வையிடலாம். (105)

# பாடசாலை வீதி புனரமைப்பு சிரமமற்ற போக்குவரத்து

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலைக்கு முன்பாக உள்ள வீதி திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதனால் யாழ். இந்துக் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, இந்து ஆரம்பப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவ மாணவிகள் உட்படப் பல அரச உத்தியோகத்தர்கள், வாகன சாரதிகள் மற்றும் பொது மக்கள் இலகுவாகப் பயணம் செய்யக்கூடிய வசதிகளைப் பெற்றுள்ளார்கள்.

பல மாதங்களாக இவ் வீதி செப்பனிடப்படாமல் இருந்தமையினால் இவ்வீதியால் பயணம் செய்த அனைத்துத் தரப்பினரும் பெரும் இன்னல்களை எதிர்நோக்கி வந்தனர்.

குணடும் குழியுமாகக் காணபபட்ட இவ்வீதியில் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்கக் காணப்பட்டது.

தற்போது இவ்வீதி திருத்தப்பட்டு அழகாகக் காட்சியளிப்பதுடன் போக்குவரத்தும் இலகுபடுத்தப்பட்டுள்ளது. (137)

# பிரதேச பொது நூலகத்தின் புத்தக தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

வலி.தெற்கு பிரதேசசபை சுன்னாகம் பொது நூலகத்தின் உலக புத்தகதின நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் வலி.தெற்கு பிரதேசசபைத் தவிசாளர் தி.பிரகாஷ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிநூலகர் திருமதி கல்பனா சந்திரசேகரம், சிறப்பு விருந்தினர்களாக வலி.தெற்கு பிரதேசசபைச் செயலாளர் திருமதி சு.முருகநேசன், சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவயோகம் செல்வவிநாயகர், வலி.மேற்கு பிரதேச்சபை சுழிபுரம் பொது நூலகர் பா.விஜயகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

உலக புத்தகதின சிறப்பு நிகழ்வுகளாக 'சுவடிகள்' நூல்கள் கொண்ட அலங்காரப் பேழை ஊர்வலம் இலக்கியகர்த்தாக்கள், வாசகர்கள் விருந்தினர்கள் குழு நூலக வாயிலை நோக்கி வரும் நிகழ்வும் நூற் கண்காட்சி நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

கலைநிகழ்வுகள் வரிசையில் உலக புத்தக தினத்தினைச் சிறப்பிக்கும் வகையில் அறிவு மிகு சமுதாயத்தில் புத்தகப் பயன்பாடு அதிகரித்து செல்கின்றதா? அருகிச்செல்கின்றதா? என்னும் தலைப்பில் விவாத அரங்கு இடமபெறவுள்ளது.

இவ்விவாத அரங்கின் நடுவராக சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் சமூகசேவை உத்தியோகத்தரும், எழுத்தாளருமாகிய வே.சிவராஜாவும் ஏனைய பேச்சாளர்களாக ஓய்வு பெற்ற சுன்னாகம் பொதுநூலகத்தின் நூலகரும் எழுத்தாளருமாகிய க.சௌந்தரராஜன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் உதவிப்பதிவாளரும், பேச்சாளருமாகிய இ.சர்வேஸ்வரா, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியரும், எழுத்தாளருமாகிய சைவப்புலவர் பண்டிதர் எஸ்.ரி.குமரன் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியரும், எழுததாளருமாகிய எஸ்.ரி.அருள்குமரன், ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தரும், பேச்சாளருமாகிய ச.ஜங்கரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# யாழ். நீதிமன்றத்திற்கு முன்பாக சைக்கிள் பாதுகாப்பு நிலையம்

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக யாழ். மாநகர சபையினால் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வேலை நாட்களில் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை இயங்கும் இப் பாதுகாப்பு நிலையத்தில் துவிச்சக்கர வண்டிக்கு 5 ரூபாவும், மோட்டார் சைக்கிளுக்கு 10 ரூபாவும் பாதுகாப்புக் கட்டணமாக அறவிடப்படுகின்றது.

இந்நிலையம் அமைக்கப்பட்டதனால் நீதிமன்றத்துக்கு வரும் பொதுமக்கள் தங்கள் மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகளைப் பாதுகாப்பாக விட்டுச் செல்வதற்கு வசதி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (137)

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## இறந்தகாலம் இனியதாக இல்லை!

கரிகாற் பெருவளத்தான் காலம், ராஜராஜ சோழன் காலம், சங்கம் வைத்துக் தமிழ் வளர்த்த பாண்டிய மன்னர்கள் காலம் போன்றவற்றையெல்லாம் தமிழரின் பொற்காலமாக திராவிட இயக்கத்தினர் விதந்தோதும் போது, வரலாற்றில் பொற்காலம் இருந்ததில்லை; வர்க்கப் புரட்சியொன்றின் மூலம் இனிமேல் தான் பொற்காலம் உருவாக வேண்டும் என்று மார்க்சியர்கள் கூறுவதுண்டு.

மார்க்சியர்கள் சொல்வது இருக்கட்டும். நாமும் கொஞ்சம் கடந்த கால வரலாற்றைத் துழாவினால் நிலைமை தெரிந்து விடும். இன்றைய நம் வாழ்வில் நமக்கு எவ்வளவு அதிருப்திகள் விமர்சனங்கள் இருந்தபோதும், வரலாற்றினடியில் பார்த்தால் மனிதர்களாகிய நாம் மனிதத்தன்மையிலும் நாகரிகத்திலும் முன்னேற்றமடைந்துதான் இருக்கிறோம். முன்பிருந்த மனிதர்களைவிட நாம் ஒப்பீட்டளவில் முற்போக்கானவர்கள் என்பதை மறுக்க முடியாது.

மன்னாதி மன்னர் சரித்திர காலத்திற்கெல்லாம் போகத் தேவையில்லை, நமக்கு இரண்டொரு தலைமுறைக்கு முந்தியவர்களின் வாழ்க்கை முறைகள் எப்படியிருந்தன என்று பார்த்தாலே நமது வளர்ச்சி எப்படி நடந்துவருகிறது என்று புரிந்து விடும். உதாரணத்திற்கு, "பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும்" என்ற நூலில் குறிப்பிடப்படும் சில தகவல்களைப் பாருங்கள்:

"மணவாழ்க்கை என்றால் என்ன என்பதைக்கூட அறிய இயலாத பாலகர்களுக்கு, திருமணம் செய்து வைத்தனர். இதனால், பெண் குழந்தைகள் அடைந்த துன்பம் கொஞ்சமல்ல. பெண் குழந்தைகளை இக்கொடுமையிலிருந்து விடுவிக்க, 10 வயது முடியும் முன், அவளுடன், அவள் கணவன், பாலுறவு கொள்ளுதல் கூடாது என்று, 1860ல் சட்டம் கொண்டு வந்தது ஆங்கிலேய அரசாங்கம். இதுவே எவ்வளவு கொடுமை.

இந்தியாவின், முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு, 1871ல் எடுக்கப்பட்டது. அப்பொழுது, கல்வி அறிவு பெற்ற பெண்கள், 0.5 சதவீதமே இருந்தனர். அதாவது, நூற்றுக்கு ஒருவர் கூட இல்லை.

29 கோடி சனத்தொகையில் 14 கோடி பேர் பெண்கள். அதில் இரண்டரை கோடிப் பேர் விதவைகள். குழந்தைத் திருமணங்களால் ஏற்பட்ட கொடுமை! (இதில் வயதான விதவைகளைச் சேர்க்கவில்லை.)

1 வயது விதவை – 579 பேர்.
1–2 வயது விதவை – 492 பேர்.
2–3 வயது விதவை– 1257 பேர்.
3–4 வயது விதவை– 2827 பேர்.
— இப்படிப் போகிறது இந்தக் கணக்கு; எவ்வளவு கேவலம்!

மேலும், கணவனை இழந்த பெண்ணை காப்பாற்றும் பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள, கணவனுடன் அவளையும் உடன்கட்டை ஏற்றினர். உடன்கட்டை ஏறுபவள் தான் உத்தமி என்றொரு கருத்தை, சமூகத்தில் இவர்கள் பரப்பி, அதன் மூலம் இதற்கு பெண்ணை நிர்ப்பந்தப்படுத்தி வைத்திருந்தனர்..."

இப்படித்தான் இன்னும் பல பிற்போக்குத்தனங்களுடன் இருந்திருக்கிறது கடந்த காலம். நம்முடைய நாட்டுத் தமிழ் அரசியல் வரலாறும், மக்களுக்கு இன்னல்களைச் சுமத்தும் உணர்ச்சிகரமான, விவேகமற்ற பிற்போக்குத்தனமான அரசியலாகத்தான் நாட்டின் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே இந்தத் தமிழ்த் தலைமைகளால் நடத்தப்பட்டு வருகிறது.

இவர்களது அறுபது வருடத்திற்கு மேற்பட்ட அரசியலால் தமிழ் மக்களுக்கு ஒரு சிறு நன்மையான தீர்வையும் சாதிக்க முடிந்ததில்லை. மக்களை அழிவுகளை நோக்கித் தள்ளித் தள்ளிக் கொண்டு வந்தனரே தவிர, அவர்களைக் காப்பாற்றும் அரசியலை இவர்கள் கண்டுகொள்ளவில்லை.

இறந்தகாலத் தவறுகளைத் தெரிந்துகொண்டு , அதிலிருந்து வெளியே வந்துதான் நமக்கான ஒளிமிகு வாழ்வை அடைய முடியும். - ஆசிரியர்

# அரசின் கடன் சுமையை அகற்ற அப்பாவி மக்கள் மீது வரிச்சுமை

## அரியம் எம்.பி. ஆவேசம்

(களுவாஞ்சிக்குடி)

உலகம் முழுவதும் அரசு வாங்கும் கடன்களை அடைப்பதற்கு அப்பாவி மக்கள் மீது வரிச்சுமையை அதிகரிப்பது நியாயமா என்று கூட்டமைப்பு எம்.பி.கேள்வி எழுப்பியுள்ளார்.

யுத்தத்தின் வடுக்களைச் சுமந்து வாழும் எமது வட, கிழக்கு மக்கள் மீது அரசாங்கம் பெரும் வரிகளைச் சுமத்தியுள்ளது.

இதன் எதிரொலியாக மின்சாரப் பாவனைக்கும் விலையினை உயர்த்தியுள்ளமை மக்களுக்கு பெரும் சுமையாகும் என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார். களுவாஞ்சிக்குடி நியூ ஒலிபிக் விளையாட்டுக் கழகத்தின் 47ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று முன்தினம் நடைபெற்ற விளையாட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒழுக்கம் சீர்கெட்டுக் கொண்டு வருகின்றது. இவற்றுக்கு அண்மையில் செங்கலடியில் நடந்த இரட்டைக் கொலைச் சம்பவம் சான்றாகும். 16 வயதுடைய பாடசாலை மாணவர்கள் கொலை செய்யும் அளவிற்குத் துணிந்துள்ளார்கள் என்றால் மாணவர்களின் ஒழுக்கம் எந்தளவிற்குச் சென்றுள்ளது. என்பதனை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டம் பல்வேறு துறைகளிலும் சாதனைகளைப் புரிந்த மாவட்டம் எனவே, எமது உறவுகள் தங்களுடைய பிள்ளைகளை ஒழுக்கமிக்கவர்களாக வளர்த்தெடுக்க வேண்டும் குறிப்பாக கல்குடா கல்வி வலயப் பாடசாலைகளில இவ்வொழுக்கக்கேடு மிகவும் அதிகரித்து வருகின்றது.

இதற்கு அப்பகுதியிலுள்ள கல்வித்துறைசார்ந்தவர்கள் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

விளையாட்டுக்களிலும் ஏனைய இதர செயற்பாடுகளிலும் பெண்களையும் இணைத்து சம பங்குடன் செயற்படவேண்டும் இவற்றுக்கு விளையாட்டுக் கழகங்கள் களம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# வடக்கு மாகாண தேர்தல் களத்தில் குதிப்பாரா தயா மாஸ்ரர்?

(கொழும்பு)

வருட இறுதியில் நடக்கவிருக்கும் வடக்கு மாகாண சபைத்தேர்தலில் போட்டியிடுவதற்கு விடுதலைப்புலிகளின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்ரர் தயாராகி வருவதாக தகவல்கள் கசிய ஆரம்பித்துள்ளன.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. என்று அறிவித்தல்கள் வெளியாகியுள்ளன.

தேர்தலில் போட்டியிடுவது குறித்து ஊடகங்கள் கேள்வி எழுப்பிய போதிலும் போட்டியிடப் போவதா இல்லையா என்பதனை தயா மாஸ்டர் இதுவரை உறுதிப்படுத்தவில்லை.

எதிர்வரும் வாரங்களில் இது குறித்து அறிவிக்க உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே விடுதலைப் புலிகளின் முன்னாள் சிரேஷ்ட உறுப்பினர்களான கருணா மற்றும் பிள்ளையான் ஆகியோர், ஆளும் கட்சியின் சார்பில் அரசியலில் களமிறங்கி முக்கிய பதவிகளை வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் மனிதாபிமானப் பணி முழுவீச்சில் குதித்தனர் படையினர்

## சமகாலத்தில் பிரசார யுத்தமும் தீவிரம்

(கொழும்பு)

வடபகுதியில் நிலைகொண்டிருக்கும் பாதுகாப்புப் படையினர் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டு வருகிறனர்.

இது தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு உலகளாவிய பிரசார நடவடிக்கை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கில் உள்ள இராணுவத்தினர் பொதுமக்களைக் கொடுமைப்படுத்தவில்லை என்பதை முழு உலக நாடுகளுக்கும் தெரியப்படுத்துவதற்காக மினனஞ்சல் மூலம் தகவல் அனுபபும் பணிகள் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உலகெங்கிலும் இருக்கும் அரசியல்வாதிகள், அரசாங்க தலைவர்கள், கல்விமான்கள், மாணவர்கள், தொழிலாளர்கள், நீதிபதிகள் உட்பட முக்கிய தலைவர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்துவதற்காக தினமும் ஒரு இலட்சத்து 72 ஆயிரம் மின்னஞசல்கள் அனுப்பப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு உண்மையான காரணம் என்ன?

## விரிகிறது விளக்கம்

(கொழும்பு)

கனியவளக் கூட்டுத்தாபனம் இலங்கை மின்சார சபைக்கு வழங்கும் எரிபொருள்களின் விலைகளை அதிகரித்தமையே மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு காரணம் என்று மின்சக்தித்துறை அமைச்சின் செயலாளர் எம்.எம்.சி.பர்டினான்ட் தெரிவித்துள்ளார். மேலும் மின்சாரக் கட்டணத்தை குறிப்பிட்ட அளவு குறைப்பதற்கே தாம் எதிர்பார்த்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். இதே வேளை மின்சாரக் கட்டணத்தை 2014 ஆம் ஆண்டு ஆரம்பத்திலேயே உயர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது. நீண்டகால முதலீட்டை அரசாங்கம் மேற்கொண்டிருக்கின்றது. உரிய பிரதிபலன் கிடைப்பதற்கு முன்னரே பொதுமக்கள் மீது சுமை இறக்கி வைக்கப்பட்டுள்ளது. அது மிகவும் கண்டனத்திற்குரிய விடயமாகும்.

கனியவளக் கூட்டுத்தாபனம் 6 மாதங்கள் பொறுத்துக்கொள்ள தயாராக இருக்கவில்லை. அதனாலேயே இந்த நெருக்கடி நிலை தோன்றியது. இந்த மாத ஆரம்பத்தில் 65 ரூபாவாக இருந்த உராய்வு எண்ணெய் 90 ரூபாவாக உயர்த்தப்பட்டமையும் சல்பர் அளவு குறைந்த உராய்வு எ்ண்ணெய் 75 ரூபாவிலிருந்து 100 ரூபாவாக அதிகரிக்கப்பட்டமையும் இதற்கான காரணம் என்றும் மின்சக்தித்துறை அமைச்சின் செயலாளர் எம்.எம்.சி.பர்டினான்ட் குறிப்பிட்டார்.

# தமிழ் மக்கள் செல்வது எங்கே? கொழும்பில் நினைவுப்பேருரை


(யாழ்.நிருபர்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் அமரர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் 36ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்பு மாவட்டக் கிளை நடத்தும் தந்தை செல்வா நினைவுப் பேருரை கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் தந்தை செல்வாவின் நினைவு தினமான ஏப்ரல் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் முன்னாள் நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் "இலங்கைத் தமிழர்கள் செல்வது எங்கே" என்ற தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.(10)

சவுக்கு கட்டுரையிலிருந்து

# அத்தனைக்கும் ஆசைப்படாதே...



ஆசையே துன்பத்திற்கு காரணம் என்று சொன்ன உலகின் மூத்த தத்துவ ஞானிக்கு நேர் முரணாக "அத்தனைக்கும் ஆசைப்படு" என்ற வாதத்தை முன்வைத்தார். வழக்கமான ஆன்மீக குருக்கள் ஒரு நீண்ட அங்கியைப் போட்டுக் கொண்டு அருள் வாக்கு கொடுப்பதைப் பார்த்து பழக்கப்பட்ட மக்களுக்கு, ஜீன்ஸ் பான்டும், கூலிங் கிளாஸ்"ம் அணிந்து ஹம்மர் காரிலும், ஹோண்டா பைக்கிலும் வலம் வந்து கொண்டு, தத்துவமும் அருள்வாக்கும் அளிக்கும் சாமியாரைப் பார்க்க வித்தியாசமாக இருந்தது.

மனித இனம் தோன்றிய திலிருந்தே அவனுக்கான தத்துவத்தேடலும் தோன்றியது. புரியாத விஷயங்களை அறிந்து கொண்டே ஆக வேண்டும் என்ற மனிதனின் தீராத தாகம், இந்தத் தத்துவத் தேடலை வளரவைத்தது. இப்படியான தேடல்களின் வெளிப்பாடுகளே மதம். என்னவென்று புரியாத இயற்கையை கடவுளாக வணங்கிக்கொண்டிருந்த மனிதன் புரியாத விஷயங்களுக்கு வசதி யான தத்துவ விளக்கங்களையும் அளிக்கத் தொடங்கினான்.

இந்தத் தத்துவத் தேடல்களுக்கு கிடைத்த விளக்கங்கள், மதமாக வடிவெடுத்தன. தனக்குக் கிடைத்த விளக்கங்களும், விடைகளும் மட்டுமே உண்மை என்பதை மற்றவர்களையும் நம்பவைக்க, அந்த மதங்களை ஒரு முகப்படுத்தி அனைவர் மீதும் திணிக்கத் தொடங்கினான். இப்படி உலகில் மனிதன் இருந்த அத்தனை இடங்களிலும் மதங்கள் தோன்றி, அந்த மதத்தினை மற்றவர்கள் மீது திணிக்கும் போக்கு பரவியது. மதம் அதிகாரத்தின் அடையாளமாக மாறியது. மனிதனும் நாகரீகமும் வளர வளர, மதங்களுக்குள்ளான முரண்பாடுகள் அதிகமாகின. விஞ்ஞான வளர்ச்சியோ மனிதனின் மதங்களையும், அவனின் நம்பிக்கைகளையும் கேள்விக்குள்ளாக்கியது. விஞ்ஞானத்தின் வளர்ச்சி மதங்களுக்கு நடத்திய சோதனைகளில் அனைத்து மதங்களும் தோல்வியைத் தழுவின.

அறிவியலால் மதத்தின் வீச்சை ஒழிக்க முடியாவிட்டாலும், அதன் அஸ்திவாரத்தை ஆட்டம் காணச் செய்ய முடிந்தது. அறிவியலுக்கும், மதத்துக்குமான போராட்டங்களின் விளைவாக உருவானவர்களே ஆன்மீக குருக்கள். அறிவியல் மதத்தின் மீது வைத்த விமர்சனங்களுக்கும், கேள்விகளுக்கும் விடை கிடைக்காத நிலையில், அதற்கான மழுப்பலான பதில்களைச் சொல்லி, விஞ்ஞானமும், ஆன்மீகமும் ஒன்றே... விஞ்ஞானத்தால் கண்டு பிடிக்க முடியாத விஷயங்களையும் விளக்குவதே ஆன்மீகம் என்று புதிய விளக்கம் கொடுத்து, தங்களுக்கென்று ஒரு கூட்டத்தை உருவாக்கினார்கள் ஆன்மீக குருக்கள். தொடக்க காலத்தில் சூரியனையும், மழையையும் விபரம் தெரியாமல் வணங்கிப் பழக்கப்பட்ட மனிதனுக்கு, வணங்குவதற்கென்று ஏதாவதொன்று தேவைப்பட்டுக் கொண்டே இருந்தது. அறிவியல் வளர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட ஐயங்களால் மதத்தின் மீது சந்தேகம் கொண்டிருந்தவர்கள், ஆன்மீக குருக்களிடம் ஐக்கியமானார்கள்.

இந்த ஆன்மீக குருக்களிடையே உள்ள ஒற்றுமை, அவர்களின் பேச்சுத் திறமை மட்டுமே. அற்புதமாக, குட்டிக் கதைகளோடு, உலக சமாதானம், உள்ளூர் அரசியல் வரை வசியப்படுத்தும் வகையில் பேசுவார்கள். பகவத் கீதை, விவிலியம், குரான், என்று மத நூல்களைப் பற்றி விரிவாக விளக்கவுரை அளிப்பார்கள்.

பின்னாளில் உருவான இந்த ஆன்மீக குருக்கள், அதிக வட்டி தரும் சீட்டுக் கம்பெனிகள் விளம்பரப்படுத்தி ஆட்களைப் பிடிப்பது போலவும், பிடிக்கத் தொடங்கினார்கள். இந்த சாமியார்களின் தந்திரத்தை, மல்டி லெவல் மார்க்கெட்டிங் நடத்தும் மோசடி நிறுவனங்களின் தந்திரத்தோடு ஒப்பிடலாம். மல்டி லெவல் மார்க்கெடிங் நடத்தும் பல்வேறு கலந்துரையாடல் நிகழ்ச்சிகளில் நடைபெறுவனவும், தற்காலத்திய ஆன்மீக குருக்களின் யோகா மற்றும் தியான வகுப்புகளில் நடைபெறுவனவும், ஏறக்குறைய ஒரே தந்திரத்தை கடைப்பிடிப்பன. சில ஆண்டுகளுக்கு முன், வீ கேன் என்றொரு நிறுவனம் காந்தப் படுக்கைகளை விற்பனை செய்தது. அந்த நிறுவனத்தில் சேர்ந்து 5500 ரூபா கட்டி உறுப்பினர் ஆனால், காந்தப் படுக்கை ஒன்றை தருவார்கள். அது என்ன படுக்கை என்றால், சாதாரணமான மெத்தையில் நாணய வடிவில் உள்ள சில காந்தங்களை பதித்து தருவார்கள். இப்படி 5500 கட்டி சேர்ந்து விட்டு, நீங்கள் மேலும் சில நபர்களைச் சேர்த்து விட்டீர்கள் என்றால், உங்களுக்கு அவர்கள் கட்டும் பணத்திலிருந்து ஒரு பகுதி வரும், அவர்கள் தங்களுக்குக் கீழே ஆட்களைச் சேர்க்க சேர்க்க, ஒரு பிரமிட் போல நீங்கள் உயரத்துக்கு சென்று கொண்டே இருப்பீர்கள் என்று அறிவிப்பார்கள். இந்த காந்தப்படுக்கை நிறுவனமான வீ கேன் சார்பாக, கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெறும். அந் நிகழ்ச்சியில் சேர்ந்து கொள்ள, ஏற்கனவே சேர்ந்தவர்கள், தங்கள் நண்பர்கள், உறவினர்கள் என்ற ஆடுகளை மஞ்சள் நீர் தெளித்து அழைத்து வருவார்கள். அந்நிகழ்ச்சிகளில், மிக மிக சிறப்பான பேச்சுத்திறன் உடைய பேச்சாளர்கள் அந்தநிறுவனத்தின் அருமை பெருமைகளை எடுத்துரைப்பார்கள். அவர்கள் பேசி முடித்ததும், ஏற்கனவே வெட்டப்பட்ட ஆடுகளை அழைத்துப் பேசவைப்பார்கள். அவ்வாறு மேடைக்கு வந்து பேசும் நபர்கள் பேசுவதைக் கேட்டால், மடியில் இருக்கும் பிள்ளை நழுவி விழுந்து விடும். அப்படி ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டபோது, வந்து பேசிய நபர்களின் பேச்சைக் கேட்க நேர்ந்தது. முதலில் வந்த நபர் "நேற்று வரைக்கும் நான் சைக்கிளில் வந்து கொண்டிருந்தேன்" இன்றைக்கு என்னிடம் இருப்பது ஒரு ஃபோர்ட் ஐகான் கார் தேங்க் யூ வீகேன்... என்றார். அடுத்து வந்த நபர் "எனக்கு வீடு கட்டுவது பல ஆண்டு கனவாக இருந்தது" எப்போது வீ கேனில் சேர்ந்தேனோ, "மறுமாதமே வீட்டுக்கு அட்வான்ஸ் கொடுத்து விட்டு., வீட்டுக் கடன் வாங்கி விட்டேன். இது வீகேன் எனக்கு தொடர்ந்து சம்பாதித்துக் கொடுக்கும் என்ற நம்பிக்கையே... என்றார். இது போல வரிசையாக வந்தவர்கள் புளுகிக் கொண்டே இருந்தார்கள். கூட்டத்துக்கு வந்து, இந்த பொய்களைப் பார்த்துக் கொண்டிருந்த பல ஆடுகள், வெட்டுவதற்கு தங்கள் தலையைக் கொடுக்கும்.

தமிழகத்தைப் பொறுத்தவரை, இப்படிப்பட்ட ஆன்மீக வியாபாரிகளுக்கு களம் அமைத்துக் கொடுத்து, தமிழக மக்களிடையே இந்த ஆன்மீக வியாபாரத்தைப் பிரபலமாக்கி, திருபாய் அம்பானிக்கு ராஜீவ் காந்தி போல, பின்புலமாக இருந்து இயக்கியது தமிழகத்தின் முன்னணி வாரப்பத்திரிகைகளான ஆனந்த விகடன் மற்றும் குமுதம்.

இந்தப் போக்கை தொடக்கி வைத்த முதல் ஊடகம், ஆனந்த விகடனே... சுவாமி சுகபோதானந்தா என்பவர் எழுதிய மனசே ரிலாக்ஸ் ப்ளீஸ். இந்தத் தொடர் மிகப் பெரும் வரவேற்பைப் பெற்று, புத்தகமாக வெளிவந்த ஒரு சில மாதங்களிலேயே விற்றுத் தீர்ந்தது. இந்த தொடரின் வெற்றி குமுதத்தையும் யோசிக்க வைத்தது. ஒரு காலத்தில் ஜெயகாந்தன், சுஜாதா, பிரபஞ்சன் போன்றோரின் தொடர்கதைகளை விளம்பரப்படுத்தி தங்கள் வியாபாரத்தை பெருக்கிக் கொண்ட விகடன் மற்றும் குமுதம் இதழ்கள், தொடர்கதைகளுக்கு வரவேற்பு குறைந்ததை உணர்ந்து ஆன்மீகத் தொடர்களில் கவனம் செலுத்தத் தொடங்கின. விகடனுக்குப் போட்டியாக குமுதம் தன் பங்குக்கு நித்யானந்தாவை வைத்து, "கதவைத் திற காற்று வரட்டும்" என்ற தொடரைத் தொடங்கினார்கள். நித்யானந்தாவின் சுவையான மொழி நடை காரணமாக இத்தொடர் பெரும் வரவேற்பைப் பெற்றது. குமுதம் அதிபர் ஜவஹர் பழனியப்பனோடு நெருக்கமான நித்யானந்தாவுக்காக குமுதம் தன் கதவுகளைத் திறந்தது. இந்தத் தொடர் நித்யானந்தாவை, அண்ணாமலை ரஜினிகாந்த் போன்ற வளர்ச்சியடைய வைத்தது.

நித்யானந்தாவின் தொடர் அடைந்த வளர்ச்சியைக் கண்டதும் விகடன் அடுத்து என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தபோதுதான், கோயம்பத்தூரில், லிங்கம் ஒன்றை நிறுவி வசூல் செய்து கொண்டிருந்த ஜெகதீஷாக இருந்து, பின்னாளில் ஜக்கி வாசுதேவாக மாறிய ஜக்கி விகடனை அணுகுகிறார். விகடனுக்கும் இந்த ஏற்பாடு வசதியாகவே இருக்கிறது. குமுதத்துக்கு போட்டியாக இத்தொடரைத் தொடங்குகிறது விகடன். நித்யானந்தாவைப் போலவோ, ஓஷோ போலவோ, ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி போலவோ, விரிவான அறிவும், வாக்கு சாதுர்யமும், மொழி நடையும் இல்லாதவர் ஜக்கி. இதனால் மற்றவர்களைப் போல, ஜக்கி இத்தொடரை எழுதாமல், ஜக்கியின் பொன்மொழிகளை தொகுத்து தொடராக வெளியிடப்பட்டது. இத்தொடரை தொகுத்தது, சுபா என்ற இரட்டை எழுத்தாளர்கள். இந்தத் தொடருக்காக, ஜக்கி பல கோடி ரூபா மதிப்புள்ள விளம் பரங்களை, விகடன் நிறுவனத்தின் பல்வேறு பத்திரிகைகளுக்கு தந்ததாகத் தெரிகிறது.

மற்ற ஆன்மீக வியாபாரிகளோடு ஒப்பிடுகையில் தன்னிடம் உள்ள குறையான வசீகரமான பேச்சு இல்லாததை வேறு வகையில் சரி செய்தார் ஜக்கி. ஆசையே துன்பத்திற்கு காரணம் என்று சொன்ன உலகின் மூத்த தத்துவ ஞானிக்கு நேர் முரணாக. "அத்தனைக்கும் ஆசைப்படு" என்ற வாதத்தை முன்வைத்தார். வழக்கமான ஆன்மீக குருக்கள் ஒரு நீண்ட அங்கியைப் போட்டுக் கொண்டு அருள் வாக்கு கொடுப்பதைப் பார்த்து பழக்கப்பட்ட மக்களுக்கு, ஜீன்ஸ் பான்டும், கூலிங் கிளாஸ்"ம் அணிந்து ஹம்மர் காரிலும், ஹோண்டா பைக்கிலும் வலம் வந்து கொண்டு, தத்துவமும் அருள்வாக்கும் அளிக்கும் சாமியாரைப் பார்க்க வித்தியாசமாக இருந்தது.

இந்தத் தொடர் ஜெகதீஷ் என்கிற ஜக்கி வாசுதேவ் என்கிற நபரை சத்குருவாக மாற்றியது. ஜெயா ப்ளஸ் தொலைக்காட்சியில் அதிருஷ்டக் கல் விற்கும் நபர் எப்படி பின்னாளில் கோடீஸ்வரராகிறாரோ அதே போல, ஜக்கியும் கோடீஸ்வர சாமியாராக பணக்காரர்கள் க்ளப்பில் இடம்பிடித்தார்.

ஆனந்த விகடன் தொடருக்குப் பிறகு, இவரின் மதிப்பு தங்கத்தை விட பல மடங்கு கூடுகிறது. ஆனந்த விகடன் போன்ற இதழ்களுக்கு சமூகத்தில் இருக்கும் மதிப்பும் மரியாதையும், ஜக்கிவாசுதேவின் ஆன்மிக வியாபாரத்தை, பல மடங்கு உயர்த்தின. இவ்வாறு வளர்ந்த அந்த வியாபாரத்தின் ஒரு பகுதிதான் இந்தியா முழுக்க, குறிப்பாக தமிழகமெங்கும் நடத்தப்படும் ஈஷா யோகா தியான வகுப்புகள். கடந்த மாதம் இப்படியான ஒரு தியான வகுப்புக்கு நண்பரின் வற்புறுத்துதலால் செல்ல நேர்ந்தது.

இவர்கள் சொல்லித் தரும் யோகா பயிற்சிகள், உண்மையிலேயே உடலுக்கு நன்மை பயப்பவை. ஆனால் வெறும் யோகப்பயிற்சிகளை மட்டும் சொல்லித்தந்தால், ஜக்கியின் சாம்ராஜ்யம் இப்படி விரிவடைந்திருக்காது. முதல் இரண்டு நாட்கள் பயிற்சியைச் சொல்லித் தந்து விட்டு, மூன்றாம் நாள் முக்கிய யோகப்பயிற்சி செய்வதற்கான பூஜை என்று தொடங்குவார்கள். அந்த பூஜையின் போது, ஜக்கி வாசுதேவின் பெரிய படத்தை வைத்து, அரை மணி நேரம் பூஜை செய்வார்கள். இந்த இடத்திலிருந்துதான் தொடங்குகிறது மூளைச்சலவை. இதற்குப் பிறகு, உருத்திராட்ச மாலை அணிவதால் ஏற்படும் பயன்கள் என்னென்ன என்று சொல்லி விட்டு, இந்த உருத்திராட்ச மாலைகள் வெளியில் கிடைக்காது என்று சொல்லுவார்கள். வகுப்பு முடிந்ததும் பார்த்தால் 1000 ரூபா முதல் 1500 ரூபா வரை விலையிருக்கும் உருத்திராட்ச மாலைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும்.

(17ஆம் பக்கம் பார்க்க)

## இராஜதந்திர சேவையில் அதிரடி மீளாய்வு

(கொழும்பு)

இலங்கையின் கடல்கடந்த இராஜதந்திர சேவையில் ஈடுபட்டுள்ள உயர் அதிகாரிகளின் பதவிகளில் திடீர் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளது.

மத்திய கிழக்கு மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் கடயைமாற்றி வரும் அதிகாரிகளின் பதவிகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட உள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளினால் பிரயோகிக்கப்பட்டு வரும் அழுத்தங்களை வெற்றிகரமாக எதிர்நோக்கும் நோக்கில் இவ்வாறு மாற்றங்கள் செய்யப்படவுள்ளன. எதிர்வரும் இரண்டு மூன்று மாதங்களில் முக்கிய பதவிகளில் பாரியளவு மாற்றங்கள் செய்யப்படவுள்ளன.

# இந்து சமுத்திர கூட்டுக் கண்காணிப்பு அமுலாக்கம் இப்போது தீவிரம்

(கொழும்பு)

இந்து சமுத்திர பிராந்தியத்தில் கூட்டுக் கடல் கண்காணிப்பு நடவடிக்கைகளை இலங்கை - இந்திய அரசுகள் தீவிரப் படுத்தியுள்ளன.

இதன் முதற்கட்டமாக இந்திய யுத்தக் கப்பல்களில் இலங்கைக் கடற்படை வீரர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதிகாரிகள் தரத்தில் உள்ள கடற்படையினருக்கே இந்த விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கை - இந்திய கூட்டுத் கடற்கண்காணிப்பை மேற்கொள்ளும் இரு நாடுகளுக்குமிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின்படியே இந்தப் பயிற்சிகள் வழங்கப்படுகிறன.

இந்த ஒப்பந்தம் இந்த ஆண்டு ஜனவரி முதல் தீவிரமாக அமுல் செய்யப்படுகிறது. இதன் ஒரு கட்டமாக இலங்கையின் கடற்படை அதிகாரிகள் 250 பேருக்கு இந்தியக் கப்பல்களில் தற்போது பயிற்சிகளைப் பெற்று வருவதாக இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்தா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் புலப்படாத சக்தி வாய்ந்த உறவு இன்னும் நீடிக்கின்றது. இந்த உறவு பழங்காலத்தில் இருந்து காணப்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக் கடற்படையினருக்கு வழங்கப்பட்ட பயிற்சிகளில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# தப்பியோடிய ஊடகக்காரர் மீண்டும் நாடு திரும்பலாம்

(கொழும்பு)

உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதாகத் தெரிவித்து நாட்டை விட்டு வெளியேறிய ஊடகவியலாளர்கள் மீளவும் நாடு திரும்பமுடியும் என ஊடக அமைச்சின் செயலாளர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது எவ்வித அச்சுறுத்தல்களும் கிடையாது எனவும், இதனால் ஊடகவியலாளர்கள் நாடு திரும்பமுடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கருத்துக்களை வெளியிட்ட ஊடகவியலாளர்கள் நாடு திரும்பக்கூடிய சூழ்நிலையே காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தவோ அழுத்தங்களைப் பிரயோகிக்கவோ இல்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எந்தவொரு ஊடகவியலாளரையும் அரசாங்கம் கறுப்புப் பட்டியலிடவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடக நிறுவனங்களோ ஊடகவியலாளர்களோ அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி வருவதாக தமக்கு இது வரையில் தகவல்கள் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களில் உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதாகத் தெரிவித்து இரண்டு ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இதேவேளை, ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யக்கூடிய நிலையில் ஊடக அமைச்சு இல்லை என சுதந்திர ஊடக அமைப்பின் அழைப்பாளர் சுனில் ஜயசேகர தெரிவித்துள்ளார்.

சுனந்த தேசப்பிரிய, உபாலி தென்னக்கோன், போத்தல ஜயந்த, பிரசன்ன பொன்சேகா மற்றும் சனத் பாலசூரிய போன்ற ஊடகவியலாளர்கள் உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறிச் சென்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வெறும் வார்த்தைகளுக்கு மட்டும் இந்த உறுதி மொழி வழங்காது ஊடகவியலளார்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டால் நாட்டைவிட்டு வெளியேறிய ஊடகவியலாளர்கள் நாடு திரும்புவார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.



கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 17 ஆவது பட்டமளிப்பு விழா கடந்த சனிக்கிழமை காலை கிழக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெற்றபோது...

# இலங்கையர் மீது உளவியல் யுத்தம்

தமிழகத்தில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகள்மீது ஒரு உளவியல் யுத்தம் நீண்டகாலமாக நடாத்தப்பட்டு வருகிறது.

அவர்களின் நாளாந்தக் கருமங்களின் போது அவர்களை 'அகதிகள்' என்று பொது இடங்களில் அழைப்பது எங்களைப் பொறுத்த வரையில் உளவியல் யுத்தம் ஒன்றை எதிர்கொள்வது போல் உள்ளதாக அவர்கள மனம் நொந்து கொள்கின்றனர்.

இதனால், தமிழகத்தில் தங்கியிருக்கும் மேற்படி அகதிகள் இந்தியக் குடியுரிமை கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தமிழகத்தின் அய்யனூர் முகாமில் தங்கியுள்ள அகதிகளே இவ்வாறு கோரியுள்ளனர்.

கடந்த இரண்டு தசாப்த காலமாக வாழ்ந்து வருவதாகவும், தொடர்ந்தும் தம்மை அகதிகள் எனக் குறிப்பிடுவதனை விரும்பவிலலை எனவும் தெரிவித்துள்ளனர். பாடசாலைகளில் சிறிய குற்றங்களைச் செய்தாலும், அவர்கள் அகதிகள் என தூற்றப்படுவதாக குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த 23 ஆண்டுகளாக இந்தியாவில் வாழ்ந்து வருவதாகவும் மீண்டும் நாடு திரும்பும் திட்டம் கிடையாது எனவும் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். அகதி என்ற முத்திரை குத்தப்பட்ட காரணத்தினால் தாம் பல்வேறு வழிகளில் துன்புறுத்தப்படுவதாகத் தெரிவித்துள்ளனர்.

# சட்டத்தின் ஆட்சி வேண்டும் சட்டத்தரணிகள் சங்கம் களத்தில்

(கொழும்பு)

நாட்டில் நீதித்துறையின் சுதந்திரத்துக்கும் சட்டத்தின் ஆட்சிக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் படியாக இடம் பெறும் சம்பவங்கள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நிலையியற் குழு வொன்றை நியமித்துள்ளது.

நாடு முழுவதிலும் நடக்கின்ற இவ்வாறான சம்பவங்கள் பற்றி அந்தந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த தமது பிரதிநிதிகள் ஊடாகவும் பொதுமக்கள் ஊடாகவும் தகவல்களைப் பெற்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவுக்கு அறிவிக்கப்படும் என்று நிலையியற் குழுவின் தலைவர் மூத்த சட்டத்தரணி லால் விஜேநாயக்க தெரிவித்தார்.

நீதித்துறையின் சுதந்திரத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் கேள்விக்குட்படுத்தும் விதத்தில் அண்மைக் காலங்களில் பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக சட்டத்தரணி லால் விஜேநாயக்க கூறினார்.

அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் சம்பந்தப்பட்ட வழக்கில் ஏற்பட்ட திருப்பமும், நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கெதிரான வழக்கொன்று வாபஸ் பெறப்பட்டதும், அண்மையில் பெப்பிலியான பகுதியில் முஸ்லிம் உரிமையாளருக்குச் சொந்தமான துணிக்கடை மீதான தாக்குதல் சம்பவம் நீதிமன்றத்துக்கு வெளியே இணக்கப்பாடு மூலம் தீர்த்துக் கொள்ளப்பட்டதும் நீதித்துறையின் சுதந்திரத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் கேள்விக் குட்படுத்திவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தமது நிலையியற் குழுவால் ஆராயப்பட்டு அறிக்கையிடப்படும் சம்பவங்கள் தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு தக்க நடவடிக்கை எடுக்கும் என்றும் சட்டத்தரணி விஜேநாயக்க கூறினார்.

இலங்கை நீதிமன்றங்களூடாக பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது போகின்ற சந்தர்ப்பத்தில் அவை சர்வதேச மட்டத்துக்கு கொண்டுசெல்லப்படும் என்றும் சட்டத்தரணிக்ள் சங்கத்தின் நிலையியற் குழுத் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, ஷிராணி பண்டாரநாயக்கவை தலைமை நீதியரசர் பதவியிலிருந்து நீக்கியதன் மூலம் கேள்விக்குள்ளாகியுள்ள நீதித்துறைச் சுதந்திரத்தை மீட்டெடுக்கும் தமது பிரதான போராட்டம் வெற்றி காணும்வரை தொடரும் என்றும் லால் விஜேநாயக்க கூறினார்.

பாகிஸ்தானில் முன்னாள் அதிபர் முஷாரப், எத்தனை ஆண்டுகளுக்குப் பின்னர் பிடிபட்டுள்ளார் என்று பாருங்கள், அவர் நீதிபதிகளை விரட்டி ஏதேச்சாதிகாரியாக செயற்பட்டதற்கு இன்று பொறுப்புக் கூற நேர்ந்துள்ளது என்பதை கருத்தில் எடுக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# முன்னாள் ஜனாதிபதியைச் சுற்றி சதிவலை பின்னப்படுகிறதா?

## கண்காணிப்புகள் தீவிரம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுடன் இணைந்து செயற்படும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் குறித்து கண்காணிப்பு தீவிரப் படுத்தப்பட்டிருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்கவுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்களையும், அவர்களின் இரகசிய செயற்பாடுகளையும் ஆராய அரசாங்கம் விசேட குழுவொனறை அமைத்துள்ளதாக தெரியவருகிறது.

அரசாங்கத்தில் உள்ள இளம அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றே இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களின் சிரேஷ்ட உறுப்பினர்களின் ஆலோசனையின் பேரில் செயற்படவுள்ளதாகவும் அரசாங்கத்தின் நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ் தர்கள் பலர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கவுடன் இரகசிய சந்திப்புக்களை மேற்கொண்டிருந்ததாகவும், அதனடிப்படையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேரதலில் முன்னாள் ஜனாதிபதியைக் கள மிறக்கவுள்ளதாகவும் அண்மைக் காலமாக செய்திகள் வெளி யாகியிருந்தன.

இந்த நிலையிலேயே அவர்கள் பற்றி ஆராய விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவானது குறித்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து அது தொடர்பாக அறிக்கையொன்றினை அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களைக் கொணட குழுவொன்றிடம் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

# எமது அரசியல் பயணம் யதார்த்தமானது

## மக்களின் உயர்வுக்கு அது வழிகாட்டும்



(யாழ்ப்பாணம்)

பொறுப்பு வாய்ந்த அரசியல் கட்சி என்ற வகையில் நாம் தமிழ் மக்களிற்கு யதார்த்தமான வழியில் செயலாற்றி வருகின்றோம் என ஈ.பி.டி.பி.யின் யாழ் மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கோண்டாவில் குட்டிச்சுட்டி மகிழ் நிலைக் கல்வி நிலையத்தின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகளும், பரிசளிப்பு நிகழ்வும் கல்விநிலைய நிர்வாகி வதனராஜ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது பாதை - எமது கடமை மக்களுக்கானது. நாம் எமது மக்களின் எதிர்கால நல்வாழ்விற்காகவே செயற்பட்டு வருகின்றோம். புலம்பெயர் நாடுகளிலுள்ள தமிழ்மக்களை ஜெனிவாவில் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ளச் செய்வதற்காக நபரொருவருக்கு 2000 டொலர் வீதம் கொடுத்து அழைத்துச் செல்கின்றனர்.

இப்பணத்தை தமிழ் மக்களின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக பயன்படுத்த முடியும். ஆனால், சுய இலாப அரசியல்வாதிகள் மக்களை தவறான பாதைக்கே இட்டுச் செல்கின்றார்கள். எமது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். எமது கலாசாரம், வாழ்க்கை முறைமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். ஆனால், அவற்றைப் பெற சாத்தியமான வழியிலேயே முயலவேண்டும்.

கல்வி நிலையங்கள் கற்றல் செயற்பாடுகளுடன் மட்டும் தமது பணியினை மட்டுப்படுத்திக் கொள்கின்றன. ஆனால் குட்டிச்சுட்டி கல்வி நிலையத்தினர் கற்றல் செயற்பாடுகளுடன், மெய்வன்மையினையும் வளர்த்தெடுக்கும் செயற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளமை பாராட்டிற்குரியது. என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேச இணைப்பாளர் ரவீந்திரதாசன், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் மாணிக்கராசா, இலங்கை வங்கியின் சங்கானை கிளை முகாமையாளர் பாஸ்கரன் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் விலைமதிப்புத் திணைக்களத்தினால் சட்ட அலுவலர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

தகைமைகளாக மேல் நீதிமன்ற சட்டத்தரணி அல்லது பல்கலைக்கழகத்தில் சட்டத் துறையில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

வயது 21 தொடக்கம் 35 இற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். மேலதிக தகைமைகள் சேவை நிபந்தனைகள், சம்பளம், ஆளடையாளம் போன்ற விபரங்களை ஏப்ரல் 19 ஆம் திகதி வர்த்தமானியில் பார்வையிடலாம். (105)

# விரையமாகும் குடிநீர்; நடவடிக்கை அவசியம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட ஈச்சமோட்டை கிராமத்தின் பால்குளம் வயல் வெளி கொய்யாத்தோட்டம், ஈச்சமோட்டை கிராமங்களினை இணைக்கும் வீதிக்கு அருகாமையில் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக குடிநீர் விநியோகிக்கும் தண்ணீர்ப் பைப் உடைந்த நிலையில் குடிநீர் விரையமாகி வாய்க்கால் வழியே ஓடிக் குளத்தினை அடைகின்றது.

இதனை அவதானித்த சமூக நலன் விரும்பிகள் இது தொடர்பாக யாழ்.மாநகரசபை நீர் விநியோகப் பகுதிக்குச் சென்று முறைப்பாடு தெரிவித்தும் இது வரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என சம்பந்தப்பட்ட சமூக நலன் விரும்பிகள் மனக்கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

மேலும், காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுக்கவேண்டும் என சமூக நலன் விரும்பிகள் எதிர்பார்க்கின்றனர். (42)

# பாம்புக்கடிக்கு இலக்கான இருவர் வைத்தியசாலையில்


(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் பாம்புக்கடிக்கு இலக்காகிய இருவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அச்சுவேலிப்பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் பாம்புக்கடி சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த இ.குணராசா (வயது - 55) என்பவர் அங்கு வயல்ப் பகுதியில் மாடு கட்டிவிட்டுத் திரும்பும் போது பாம்பினால் கடியுண்ட நிலையில் அசசுவேலி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, நீர்வேலிப் பகுதியில் மற்றுமொரு சம்பவத்தில் அந்தப்பகுதியில் உள்ள கடை ஒன்றின அலுமாரியின் மேல் பதுங்கியிருந்த பாம்பு ஒன்று அலுமாரியைத் திறக்க முற்பட்ட கே.யதுசன் (வயது 22) என்ற இளைஞரின் கை விரலில் கடித்துள்ளது.

இதனை அடுத்து அவர் கோப்பாய் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (பா)



நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய சூழலில் புதிதாக அமைக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்ட 'கோ'சாலையை காணலாம். (21)

# யாழ்.காட்டுக்கந்தோர் வீதி மாநகரசபையால் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதான வீதியினையும், ஏ - 9 வீதியினையும் இணைக்கும் வீதியான யாழ் காட்டுக்கந்தோர் வீதி தற்போது புனரமைக்கப்பட்டுவருகிறது.

யாழ்.செயலகத்திற்கு முன்பாக உள்ள இவ்வீதியில் பல நிறுவனங்களின் செயலகங்கள் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வீதி பல வருடங்களாக சீர் செய்யப்படாமல் குண்டும் குழியுமாக இருப்பதனை அவதானித்த யாழ்.மாநகரசபையினர் தமது நிதியின் மூலம் இவ் வீதியினை புனரமைக்க ஆரம்பித்துள்ளனர். இதனை அவதானித்த பாதசாரிகள் யாழ்.மாநகர சபையினருக்கு நன்றியினைத்தெரிவித்துக் கொள்கின்றனர். (42)

# முரசின் இன்றைய பலன்

**(22.04.2013 – திங்கட்கிழமை)**


**விஜய வருஷம் சித்திரை மாதம் 09 ஆம் திகதி.**
**நட்சத்திரம் பூரம் மாலை 6.24 வரை [illegible]. திதி ஏகாதசி.**
**காலை 06.24 வரை. இராகுகாலம் 07.31 - 09.01 வரை.**
**சுபநேரம் 12.01 - 01.31 வரை.**

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| **மேடம்** | பெரியவர்களின் வழிகாட்டுதலை ஏற்று நடப்பீர்கள். வாழ்வில் வளம்பெற அனுகூல சூழ்நிலை உருவாகும். தொழில் வளர்ச்சிக்கு புதிய யுக்திகளை பின்பற்றுவீர்கள். ஆதாய பணவரவு. விருந்து, விசேஷத்தில் கலந்து கொள்வீர்கள். |
| **ரிஷபம்** | நடந்த இனிய சம்பவம் ஒன்றை, நண்பரிடம் சொல்வர்கள். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில, லாபம் அதிகளவில் கிடைக்கும். உபரி பணவரவில் சேமிப்பீர்கள். விரும்பிய உணவுண்டு மகிழ்வீர்கள். குடும்ப சந்தோஷம். |
| **மிதுனம்** | வெளி வட்டார தொடர்பு தொந்தரவு தரலாம். பொறுமை தேவைப்படும். தாமதமான பணியை முடிப்பதால் நன்மை கிடைக்கும். தொழில், தாமத கதியில் இயங்கும். சுமாரான பணவரவு. உடல்நலத்திற்கு உணவில் கவனம். அரச உதவி கிடைக்கும். |
| **கடகம்** | முக்கியமான செயல் தாமதமாகலாம். சோதனை வரலாம். மன விரக்தியை வெளிப்படுத்த வேண்டாம். தொழில், சில சீர்திருத்தம் செய்வது நல்லது. சேமிப்பு செலவுக்கு பயன்படும். மருத்துவ சிகிச்சை ஏற்படலாம். இல்லறத்துணை ஆதரவு. |
| **சிம்மம்** | மனதில் இருந்த திட்டம் செயல் வடிவமாகும். வெற்றி பெறும் நம்பிக்கை. சந்தோஷம் உருவாகும்.. தொழில், அபரிமிதமான வளர்ச்சி. ஆதாய பணவரவு. தாயின் தேவை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தர்களுக்கு சலுகையும் உயர்வும். |
| **கன்னி** | கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றுவதில், சிரமம் உருவாகும். அவப்பெயர் வராமல் நடந்துகொள்க. தொழிலில் அதிக உழைப்பால், சிரம நிலை விலகும். வரவு அதிகரிக்கும். பயணத்திட்டத்தில் மாறுதல். பிள்ளைகளால் பெருமை வரும். |
| **துலாம்** | செயலில் குளறுபடி ஏற்படலாம். உதவி கேட்டு ஏமாற வேண்டாம். தொழில், நடைமுறை சுமாரான அளவில். வேலையின்போது தகுந்த பாதுகாப்பு அவசியம். புதிய இனங்களில் பணச்செலவு அதிகரிக்கும். வெளியூரிலிருந்து மகிழ்வுச் செய்தி. |
| **விருச்சிகம்** | செயல் நல்லபடி நிறைவேற, கூடுதல் முயற்சி வேண்டும். பிறரிடம் தேவையற்று பேச வேண்டாம். தொழில், நடைமுறை சராசரி அளவில். வரவும் செலவும் சரியாகும். வாகன பயணத்தில், கவனம். எதிர்காலத் திட்டமிட நண்பர் உதவுவர். |
| **தனுசு** | உங்களின் நல்ல செயலை சிலர் தவறாக விமர்சிப்பர். சமூக நிகழ்வுகளில் ஒதுங்கி இருப்பது, சிரமம் தவிர்க்க உதவும். தொழிலில் நிலுவைப் பணி நிறைவேற்றுவீர்கள். அளவான பணவரவு. கவனக்குறைவால் கஷ்டமடைய நேரிடலாம். |
| **மகரம்** | நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். அணுகுமுறையில் புதிய மாற்றம் பின்பற்றுவீர்கள். திறமைமிகு பணியால், தொழிலில் அபரிமிதமான வளர்ச்சி. கடனில், ஒரு பகுதியை செலுத்துவீர்கள். பொறுப்பான பதவி கிடைக்க அனுகூலம் உண்டு. |
| **கும்பம்** | மனதில் அன்பும், கருணையும். சார்ந்தவர்களுக்கு, இயன்ற அளவில் உதவுவீர்கள். கூடுதல் உழைப்பால் தொழில், இலக்கு நிறைவேறும். பணவரவு திருப்திகரமாகும். உத்தியோகத்தர் பாராட்டு, வெகுமதி பெறுவர். நற்செய்தி வரும். |
| **மீனம்** | புதிதாக வந்த பணியை திறம்பட நிறைவேற்றுவீர்கள். நற்பெயரும், புகழும் கிடைக்கும். தொழில், அபிவிருத்தி உண்டாகும். தாராள பணவரவு. வீட்டுப் பொருள் வாங்குவீர்கள். பிள்ளைகள் முன்னேற்றச் செய்தி. உறவினர் வருகையால் மகிழ்வு. |

# பாலியல் கொடுமையை கண்டித்து ஆர்ப்பாட்டம்

## டில்லியில் பதற்றமான சூழல் நீடிக்கிறது




கிழக்கு டில்லி காந்தி நகரில் உள்ள குடியிருப்பில் 5 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து, டில்லியின் முக்கிய இடங்களில் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர். டில்லி பொலிஸ் தலைமையகத்தையும், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி இல்லத்தையும், மத்திய உள்துறை அமைச்சர் சுஷீல் குமார் ஷிண்டேவின் இல்லத்தையும் முற்றுகையிட்டு அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். போராட்டத்தின் எதிரொலியாக இந்தியா கேட் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பொதுமக்கள் நடமாட்டத்துக்கு 144 தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இந்தியா கேட்டை இணைக்கும் முக்கிய சாலை சந்திப்புகளில், மற்றும் பல்வேறு இடங்களிலும் பொலிஸாரும் துணை இராணுவப் படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர். எய்ம்ஸ் மருத்துவமனை முன்பும் நூற்றுக்கணக்கான சமூக ஆர்வலர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஐ.டி.ஓ சந்திப்பு அருகே பாரதிய ஜனதா கட்சி, ஆம் ஆத்மி கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இந்திய மாணவர் சங்கம், அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத் ஆகிய மாணவர் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் நண்பகல் 12.30 மணியளவில் திரண்டனர்.

டில்லி அரசையும், பொலிஸையும் கண்டித்து கோஷமிட்டபடி சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக போராட்டத்தில் ஈடுபட்டனர். அதையடுத்து, அப்பகுதியில் டில்லி ஆயுதப்படை பொலிஸார் பெருமளவில் குவிக்கப்பட்டனர். போராட்டம் காரணமாக டில்லி ஐ.டி.ஓ சந்திப்பில் இருந்து ராஜ் காட்வரை செல்லும் சாலைகளில் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டது. மாற்று வழியில் வாகனங்கள் செல்ல நேர்ந்ததால் தீன் தயாள் உபாத்யாய மார்க், பகதூரஷா ஜாபர் மார்க் சாலைகளில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

போராட்டத்தில் பங்கேற்றவர்களில் ஒரு பிரிவினர் கிருஷ்ண மேனன் மார்கில் உள்ள மத்திய உள்துறை அமைச்சர் சுஷீல் குமார் ஷிண்டேவின் வீட்டுக்கு முன்பாக சென்று கோஷமிட்டனர். அவர்களைக் கலைந்து செல்லும்படி பொலிஸார் கேட்டுக் கொண்டனர். அதையடுத்து, அவர்கள் அனைவரும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் இல்லத்துக்கு பேரணியாகச் சென்றனர். ஜன்பத் சாலையில் அமைந்துள்ள சோனியா காந்தியின் இல்லத்துக்கு பார்வையாளர்கள் செல்ல அனுமதிக்கப்படும் அக்பர் சாலை நுழை வாயில் பகுதி அருகே திரண்டு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து டில்லியின் பல்வேறு பகுதிகளிலும் போராட்டங்கள் வெடித்துள்ளதால், பதற்றமான சூழல் நீடிக்கிறது. அதனால், பொலிஸ் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியச் செய்திகள்

## கருணாநிதி - விஜயகாந்த் தடீர் சந்திப்பால் பரபரப்பு



தி.மு.க தலைவர் கருணாநிதியுடன் தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் திடீரென்று சந்தித்துப் பேசியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தினத்தந்தி அதிபர் சிவந்தி ஆதித்தன் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக போயஸ் கார்டனில் உள்ள அவரது வீட்டுக்கு தி.மு. க தலைவர் கருணாநிதி நேற்றுக் காலை சென்றார்.

அஞ்சலி செலுத்திவிட்டு காரில் புறப்பட்டார். அப்போது தே.மு.தி.க தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான விஜயகாந்த் வந்தார். கருணாநிதி வந்திருப்பது தெரிந்ததும், அவரது கார் அருகே சென்ற விஜயகாந்த், அவருக்கு வணக்கம் தெரிவித்தார். இருவரும் ஒருவருக்கொருவர் நலம் விசாரித்துக் கொண்டனர். இந்தச் சந்திப்பு அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சிறைத் தண்டனையை எதிர்த்து

## நடிகர் சஞ்சய்தத் மனு தாக்கல்



மும்பைக் குண்டு வெடிப்பில் சட்ட விரோதமாக ஆயுதம் வைத்திருந்த வழக்கில் நடிகர் சஞ்சய்தத்துக்கு நீதிமன்றம் 6 ஆண்டு சிறைத் தண்டனை விதித்தது.

இதை எதிர்த்து சஞ்சய்தத் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார். இந்த அப்பீல் மனு மீது உச்ச நீதிமன்றம் கடந்த மாதம் 21ஆம் திகதி தீர்ப்பு வழங்கியது.

சஞ்சய்தத்துக்கு விதிக்கப்பட்ட 6 ஆண்டு சிறைத் தண்டனையை 5 ஆண்டாகக் குறைத்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. சஞ்சய்தத் ஏற்கனவே 18 மாதம் சிறைத் தண்டனை அனுபவித்து விட்டார். மீதி காலமான 3.5 ஆண்டுகள் அவர் சிறைத் தண்டனை பெறவேண்டும். உச்ச நீதிமன்ற தீர்ப்புப்படி அவர் கடந்த 18ஆம் திகதி நீதிமன்றத்தில் சரணடைய வேண்டும்.

ஆனால், சரணடைய அவர் 6 வார காலம் அவகாசம் கேட்டு இருந்தார். அதன்படி உச்ச நீதிமன்றம் கடந்த 17ஆம் திகதி சஞ்சய்தத்துக்கு 4 வாரம் அவகாசம் அளித்தது.

இந்த நிலையில் தனக்கு விதிக்கப்பட்ட 5 ஆண்டு சிறை தண்டனையை எதிர்த்து சஞ்சய்தத் உச்ச நீதி மன்றத்தில் மறு ஆய்வு மனுவை தாக்கல் செய்துள்ளார். டில்லியில் உள்ள சட்ட நிபுணர்கள் குழு சஞ்சய்தத் சார்பில் இந்த மறு ஆய்வு மனுவை சனியன்று தாக்கல் செய்தது.

இந்த மறு ஆய்வு மனு அடுத்த வாரம் விசாரணைக்கு வரும் என்று தெரிகிறது. இந்த மறு ஆய்வு மனு தள்ளுபடி செய்யப்பட்டால் சஞ்சய்தத் மே 18ஆம் திகதி நீதிமன்றத்தில் சரணடைய வேண்டும்.

## இந்திய எல்லைக்குள் சீனப் படைகள் கொடிநாள் கூட்டத்திற்கு பதில் இல்லை



இந்திய சீன எல்லையான காஷ்மீரில் உள்ள லடாக் பகுதிக்குள் சீனப் படைகள் அத்துமீறி சுமார் 8 கிலோ மீற்றர் தூரம் உள்ளே நுழைந்துள்ளன. இதனை அறிந்த இந்திய இராணுவமும் அங்கு சென்றுள்ளதால், அப்பகுதியில் பதற்றம் நிலவுகிறது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ள லடாக் பகுதியினுள் சுமார் 8 கிலோ மீற்றர் வரை ஊடுருவிய சீனப் படைகள், அங்கு கூடாரம் அமைத்து தங்கியுள்ளன. கடல் மட்டத்தில் இருந்து சுமார் 17 ஆயிரம் அடி உயரத்தில் உள்ள இப்பகுதிக்குள் கடந்த 15 ஆம் திகதி இரவு 8 கிலோ மீற்றர் வரை ஊடுருவிய சீன மக்கள் விடுதலை இராணுவத்தைச் சேர்ந்த சுமார் 50 வீரர்கள் இங்கு கூடாரம் அமைத்து தங்கியுள்ளனர். இந்த ஊடுருவல் பற்றிய தகவல் அறிந்த இந்திய இராணுவத்தின் லடாக் ஸ்கவுட்ஸ் வீரர்கள் அப்பகுதிக்கு விரைந்து சென்றதால் பதற்றம் நிலவுகிறது. இச்சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த உதம்பூர் வடக்கு இராணுவ பிரிவின் செய்தி தொடர்பாளர், இதைப் போன்ற ஊடுருவல்கள் கொடிநாள் கூட்டங்களின் மூலம் சரி செய்யப்படுவது வழக்கம்தான் என கூறினார். எனினும், இந்த புதிய ஊடுருவல் தொடர்பாக கொடிநாள் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யும்படி சீன இராணுவ அதிகாரிகளுக்கு தகவல் அளிக்கப்பட்டும், சீன தரப்பில் இருந்து சரியான பதில் அளிக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

### அத்தனைக்கும்...

(5ஆம் பக்கத்தொடர்ச்சி...)

அதற்கு அடுத்தபடியாக வகுப்பு முடிந்ததும் சத்துமாவுக் கஞ்சி தயாரித்து அருந்துவதற்கு தருவார்கள். தரும்போதே, இந்த சத்துமாவு ஈஷா மையத்தால் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு உள்ளது என்று கூறுவார்கள். நான்கு நாட்கள் வகுப்பு முடித்தவர்கள் உங்களின் அனுபவங்களைக் கூறுங்கள் என்று பேசச் சொல்லுவார்கள். ஏற்கனவே வீ கேன் நிறுவனத்தின் மல்டி லெவல் மார்க்கெடிங் நடந்தது அல்லவா... அதேபோல வகுப்பில் வந்தவர்களும் பேசுவார்கள். நான்கு நாட்கள் யோகா பயிற்சி செய்து முடித்ததும், எனக்கு உலகமே புதிதாகத் தெரிகிறது... அனைவர் மீதும் அன்பு செலுத்துகிறேன்.. சிகரெட் பிடிப்பதை குறைத்திருக்கிறேன்... மனைவியோடு சண்டை போடுவதில்லை என்று கூறுவார்கள். அப்படியெல்லாம் எதுவும் நமக்குத் தோன்றாவிட்டாலும், இத்தனை பேர் சொல்லும்போது, நமக்கு எதுவும் தோன்றவில்லை என்று எப்படிச் சொல்லுவது என்று யோசித்துக் கொண்டு, நாமும் "எனக்கு நான்கு நாட்களாக" உலகமே பளிச்சென்று நன்றாகத் தெரிகிறது... என்று ஏதாவது உளறி விட்டு வருவோம்.

தற்போது இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டவர்கள், இதற்கான அடுத்த கட்ட பயிற்சியில் கலந்து கொள்ளுங்கள்.

அதற்காக பதிவு செய்பவர்கள் பெயரைக் கொடுக்கலாம் என்று கூறுவார்கள். ஈஷா மையம், பல்வேறு ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகளைச் செய்கிறது என்று கூறுவார்கள். இலவச அம்புலன்ஸ் சேவைகள், இலவச மருத்துவமனைகள் போன்றவற்றை சத்குரு செய்து வருகிறார் என்பார்கள். இதற்கான நன்கொடைகளை நீங்கள் வழங்கினால், மேலும் பல்வேறு ஏழைகள் பயன்பெறுவார்கள், அவர்களுக்கு சத்குருவால் மேலும் பல சேவைகளைச் செய்ய முடியும் என்று கூறுவார்கள்... யோகா வகுப்புக்கு வந்த அடிமைகளுக்குத்தான் உலகமே புதிதாகத் தெரிகிறதே... முதலில் தங்களை வாலண்டியராகப் பதிவு செய்துவிட்டு, ஒரு பராரிக் குழந்தையை சத்குரு கட்டிப்பிடிக்கும் வீடியோவைப் பார்த்து விட்டு அந்தக் குழந்தைக்கு சத்குரு மூலமாக உதவலாம் என்று உடனே செக் எழுதித் தருவார்கள்.

ஏழைக் குழந்தைகளுக்காக உங்களின் ஒரு நாள் உணவைத தியாகம் செய்யுங்கள் என்று கூறுகிறார் சத்குரு.

நீங்கள் ஒரு நாள் உணவைத தியாகம் செய்வதால் வரும் தொகையை அப்படியே ஈஷா மையத்துக்கு நன்கொடையாக வழங்கினீர்கள் என்றால், அதனால் மேலும் பல ஏழைகளுக்கு சத்குரு உதவுவார் என்று அதே வகுப்பின் இறுதியில் உங்களுக்கு ஓதப்படும்.

உங்களை ஒரு நாள் உணவைத் தியாகம் செய்து நன்கொடை தாருங்கள் என்று வற்புறுத்தும் சத்குரு வைத்திருக்கும் ஹம்மர் வாகனத்தின் விலை என்ன தெரியுமா? 40 இலட்சம்.

சத்குரு சொந்தமாக வைத்திருக்கும் R22 வகை ஹெலிகொப்டரின் விலை என்ன தெரியுமா? 14 கோடி.





வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# கிண்ணம் வென்றது துறையூர் ஐயனார்





(வேலணை)

வேலணை - செட்டிபுலம் ஐயனார் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட ஆண்டு நிறைவு கால்பந்துத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை துறையூர் ஐயனார் அணி கைப்பற்றிக் கொண்டது. செட்டிபுலம் ஐயனார் சனசமூக நிலையத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு தீவக கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் மாபெரும் கால்பந்தாட்டப் போட்டித் தொடரை நடாத்தியது. இதில் தீவகத்தைச் சேர்ந்த 36 அணிகள் பங்குகொண்டன.

விலகல் முறையில் நடத்தப்பட்ட இப்போட்டித் தொடரில் 36 அணிகளும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் இடம்பெற்றன. இரண்டு பிரிவிலும் முதலிடத்தைப் பிடித்த அணிகள் இறுதிப் போட்டியில் மோதின. இந்த வகையில் கடந்த 19ஆம் திகதி செட்டிபுலம் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் துறையூர் ஐயனார் அணியும், புங்குடுதீவு நண்பர்கள் அணியும் மோதின.

வேலணை பிரதேசத்தில் வெல்லப்பட முடியாத அணியாக வலம் வரும் துறையூர் ஐயனார் அணி, தீவகத்திலும் தமது முத்திரையைப் பதிக்கும் நோக்கில் களமிறங்கியது. புங்குடுதீவு நண்பர்கள் பல வெற்றிக் கிண்ணங்களைக் கைப்பற்றிக்கொண்ட அணி என்ற சிறப்பைக் கொண்டிருந்ததுடன், இப்போட்டியிலும் கிண்ணம் வெல்வது உறுதி என்ற முனைப்புடன் களமிறங்கியது. இரு அணிகளும் தமது வியூகங்களுக்கு அமைய ஆடி கோல்களைப்பெற்றுக் கொள்ளும் முனைப்பில் போட்டிக் களத்தில் செயற்பட்டன. துறையூர் ஐயனார் அணியின் பந்துப் பரிமாற்றம் இரசிகர்கள் நெஞ்சங்களைக் கவர்ந்திழுத்தது.கோல் அடிக்கும் பல வாய்ப்புகள் துறையூர் ஐயனார் அணிக்கு ஏற்பட்ட போதும் இறுதி நேரத்தில் கைநழுவிப் போயின. இந்நிலையில் முற்பாதி ஆட்டம் இரு அணிகளாலும் கோல் பெற்றுக் கொள்ளப்படாத நிலையில் நிறைவுக்கு வந்தது.

பிற்பாதி ஆட்டம் ஆரம்பமாக முதல் இரண்டு, மூன்று நிமிடங்கள் இரு அணிகளும் சிறப்புற தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தன. இருப்பினும் புங்குடுதீவு நண்பர்களின் ஆட்டம் நேரத்தை நீளச் செய்து தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும் நிலைக்கு இட்டுச் செல்லும் வகையில் ஆட முற்பட்டதை அவதானிக்கமுடிந்தது. இதன் காரணமாக காலில் சிக்கிக் கொள்ளும் பந்துகள் அனைந்தும் உயரப் பறக்கவும், வெளியில் பறக்கவும் செய்தன. போட்டித் தன்மை தணிந்து பந்து மேல் நோக்கிச் சீறியது. பந்தைக்கட்டுப்படுத்தி,சீரான ஆட்டமுறை வெளிப்படுத்த முனைந்த துறையூர் ஐயனார் அணியின் முயற்சி அனைத்தும் முறியடிக்கப்பட்டது. இறுதியில் பிற்பாதி ஆட்டம் கோல்கள் பெற்றுக்கொள்ளப்படாத நிலையில் நிறைவுக்கு வந்தது.

இந்நிலையில், தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் முதல் ஐந்து சந்தர்ப்பங்களிலும் இரு அணிகளும் சிறப்பான முறையில் செயற்பட்டனர். நான்கு உதைகள் கோலாக்கப்பட்டதுடன் ஒன்று வெளியில் அடிக்கப்பட்டது. இதன் காரணமாக 4-4 என்ற கணக்கில் மீண்டும் போட்டி சமநிலையானது. தொடர்ந்து ஒரு உதை வழங்கப்பட்டது. இதிலும் இரு அணிகளும் சிறப்பான முறையில் செயற்பட 1-1 என்று சமநிலையானது. வெற்றியைத் தீர்மானிக்க மேலுமொரு உதை வழங்கப்பட்டது. இதில் துறையூர் ஐயனார் அணி சிறப்புறச் செயற்பட்டு கோலாக்கியது. இந்த வாய்ப்பைக்கோட்டைவிட்ட புங்குடுதீவுநண்பர்கள் அணி கிண்ணம் வெல்லும்கனவையும் கோட்டை விட்டது. இறுதியில் துறையூர் ஐயனார் அணி 6-5 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுக் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டியின் சிறந்த வீரர்களாக ஐயனார் அணியைச் சேர்ந்த சதீசன், அசோக் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இதில் நரேஸின் ஆட்டம் இரசிகர்களின் பாராட்டப்பெறும் அளவிற்கு அமைந்திருந்தமை குறிப்பிடத் தக்கது. இப்போட்டி நிகழ்வில் வேலணைப் பிரதேச சபைத் தலைவர், பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான எஸ்.சிவராசா (போல்) கலந்து கொண்டு கிண்ணத்தை வழங்கினார். (21)

விளையாட்டுச் செய்திகள்

## துரையப்பாவில் நாளை வலய மெய்வல்லுநர்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையிலான வலய மட்ட மெய்வல்லுநர் போட்டி நாளைய தினம் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

புதிய சுற்று நிருபத்திற்கு அமையவாக இடம் பெறவுள்ள இப்போட்டி நிகழ்வில் எதிர்வரும் 25ஆம் திகதி வரை நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் 15,17, 19, 21 வயதுப் பிரிவு வீர, வீராங்கனைகளுக்கு இடையில் போட்டிகள் இடம்பெறும் என்றும், இதில் வெற்றியீட்டுவோர் நேரடியாக மாகாண மட்டப் போட்டிக்குத் தகுதி பெறுவார்கள் என்றும், மாவட்ட மட்டப் போட்டிகள் இடம்பெறமாட்டாது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (42)

## விரைவில் மாவட்ட கரப்பந்து

(யாழ்ப்பாணம்)

இளைஞர் கழகங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட கரப்பந்தாட்டப் போட்டி அடுத்த மாதம் ஐந்தாம் திகதி நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரதேச ரீதியில் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளதாகவும் இதில் வெற்றியீட்டிய அணிகளே மாவட்ட மட்டப் போட்டியில் மோதவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் , தெரிவித்துள்ளனர்.

ஆண், பெண் என இருபாலாருக்கு மிடையில் இடம்பெறவுள்ள இப் போட்டி ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலய மைதானத்தில் நடத்தப்பட வுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளைஞர் கழகங்களைச் சேர்ந்த வீர,வீராங்கனைகளின்போட்டித் திறனை வளர்த்துக் கொள்ளும் நோக்குடனும், இலைமறை காயாக உள்ள வீரர்களை வெளிக்கொணரும் வகையிலுமே இப்போட்டிகள் நடத்தப்படுகின்றன எனவும், இதன் மூலம் யாழ். மாவட்டத்தில் கரப்பந்தாட்டம் அடுத்த தளத்திற்கு செல்லக்கூடிய வாய்ப்பு உருவாகும் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் போட்டி அமைப்பாளர்கள் மேலும் தெரிவித்தனர். (118)

# கலிஸ்ரன் தாக்குதல் ஆட்டம்

## மின்னொளியில் ஜொலித்தது சென். அன்ரனீஸ்

(நெல்லியடி)

கலிஸ்ரனின் தாக்குதல் ஆட்டத்தின் மூலம் பாஷையூர் சென். அன்ரனீஸ் அணி மின்னொளியில் ஜொலித்து கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. டான் தொலைக்காட்சி நிறுவனத்தின் அனுசரணையுடனும், யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் அனுமதியுடனும் நடாத்தப்பட்ட யாழ். மாவட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்துத் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றது.


இதில் பாஷையூர் சென். அன்ரனீஸ் அணியும், குருநகர் பாடுமீன் அணியும் இறுதிப் போட்டியில் மோதின. யாழ். மாவட்டத்தில் கால்பந்தில் தனித்துவம் மிக்க அணிகளாக உள்ள அணிகள் என்பதாலும், ஆட்டம் மின்னொளியில் இடம்பெற்றமையாலும் இரசிகர்கள் கூட்டம் அலைமோதியது.

ஆட்டம் தொடங்கியதும் இரு அணிகளும் ஆக்ரோஷத்துடன் களத்தில் செயற்பட்டன. பந்து அங்குமிங்குமாக பறந்தது. இதில் பாஷையூர் சென். அன்ரனீஸ் அணி நிதானமான முறையில் பந்துப் பரிமாற்றத்தைச் செய்து கோல் போடும் முனைப்பைக் கூர்மைப்படுத்தியது. இதில் குறிப்பாக, கலிஸ்ரனின் ஆட்டம் பார்வையாளர்கள் கண்களைக் கவர்ந்திருந்தது. முற்பாதி ஆட்டத்தின் 12ஆவதுநிமிடத்தில் அதிரடியான முறையில் கோல் ஒன்றைப் பெற்றுக்கொடுத்த கலிஸ்ரன், தொடர்ந்து அதே வேகத்தில் 16ஆவது நிடமிட்த்திலும் மேலுமொரு கோலைக் பெற்றுக்



கொடுத்து அணியை முன்னிலைப்படுத்தினார். தொடர்ந்தும் இரு அணிகளும் விரைந்து செயற்பட்ட வேளை முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது. இதில் 2 – 0 என்ற கணக்கில் சென். அன்ரனீஸ் முன்னிலை பெற்றிருந்தது. பிற்பாதி ஆட்டத்தில் தமது ஆட்டமுறையை மாற்றியமைத்து புதிய களவியூகத்துடன் குருநகர் பாடுமீன் அணி களமிறங்கியது. இருப்பினும் பாடுமீன் அணியின் எந்த வியூகத்தாலும் சென். அன்ரனீஸ் அணியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆக்ரோஷமாக இரு அணிகளும் ஆடி கோலைப் பெற்றுக்கொள்ளும் முனைப்புடன் தீவிரமாகச் செயற்பட்டன. இதன் காரணமாக விதியை மீறும் நிலையும் உருவாகியது. 12ஆவது நிமிடத்தில் ஆக்ரோஷமாகச் செயற்பட்ட பாடுமீன் வீரர் ஞானப்பிரகாஸ் நடுவரால் மஞ்சள் அட்டை காட்டப்பட்டு எச்சரிக்கப்பட்டார். தொடர்ந்து விரைந்து செயற்பட்ட சென். அன்ரனீஸ் அணி 20ஆவது நிமிடத்தில் மூன்றாவது கோலைப் பெற்றுக்கொண்டு அணியின் ஸ்திரத்தன்மையைப் பலப்படுத்தியது. இந்தக் கோலை மதுசன் பெற்றுக்கொடுத்தார். தொடர்ந்து அசத்திய கலிஸ்ரன் 24ஆவது நிமிடத்தில் மேலுமொரு கோலைப்பெற்றுக்கொடுக்க சென். அன்ரனீஸின் வெற்றி உறுதி செய்யப்பட்டது. தொடர்ந்து இரு அணிகளும் கோல் போடும் வீச்சுடன் செயற்பட்டபோது ஆட்டம் நிறைவுக்கு வந்தது. இறுதியில் பாஷையூர் சென். அன்ரனீஸ் அணி 4 – 0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இதில் கலிஸ்ரனின் ஆட்டம் அனைத்து இரசிகர்களாலும் பாராட்டப்பட்டது. இப்போட்டி நிகழ்வில் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி ஹத்துருசிங்க சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார். (12)







# வட மாகாண சபைத் தேர்தல் அரசாங்கத்திற்கு நெருக்கடியாகுமா?

**- எம்.எம்.எம். ஹன்சீர் கட்டுரையிலிருந்து.**

இவ் வருடம் ஜுன் அல்லது செப்ரெம்பர் மாதமளவில் நடைபெற வுள்ளதாகக் கூறப்படும் வட மாகாண சபைத் தேர்தல் இலங்கை அரசியலில் முக்கிய திருப்புமுனையாக அமைய லாம். யுத்தத்திற்குப் பின்னரான மீளக் குடியேற்றம், கண்ணிவெடி அகற்றல் போன்றவையைக் காரணம்காட்டி அரசாங்கம் வடமாகாண சபைத் தேர்தலைப் பிற்போட்டுக் கொண்டே வந்தது. வடமாகாணத் தேர்தலை நடத்துவதில் அரசுக்கு ஆர்வமும், விருப்பமும் இல்லை என்பது ஒன்றும் இரகசியம் இல்லை. எனினும் இலங்கையில் முழுமையான ஜனநாய கப்படுத்தல் என்பது வடமாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் முற்றுப் பெறாது என்பதையும் அரசாங்கம் உணர்கின்றது. தற்போதுள்ள நிலையில் சர்வதேச நெருக்கடிகளைத் தணிப் பதற்கான உபாயமும் இதுவொன்றே.

வட மாகாண சபைத் தேர்தலில் அரசுக்கு எதிரான போக்குடைய பிரதானமாக தமிழ் தேசியக்கூட்டமைப் பும், ஏனையவர்களும் வெற்றி பெற லாம் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. எவ்வளவுதான் மிகப்பாரிய அபிவிருத் திகளை மேற்கொண்டாலும் தமிழ் மக்கள் அரசுக்கெதிராகவே வாக்களிப் பர் என்கின்ற பிரமை கொழும்பிலும், தெற்கிலும் பரவலாக உள்ளது.

இது ஒரு தவறான பிரமையாகும். இன்றைய காலப்பகுதியில் நடுத்தர, படித்த, பெரும்பாலான உள்நாட்டில் வசிக்கின்ற தமிழர்கள் புலிகளின் நேர்மையற்ற, கொடூரமான போராட் டத்தை விமர்சிக்கின்றனர். யுத்தம் நடைபெற்ற பொழுது ஆயுதத்திற்கு அஞ்சி மறுக்கப்பட்டிருந்த கருத்துச் சுதந்திரம் இப்போது பரவலாக தமிழர் பகுதிகளில் உள்ளது. புலிகளின் கட்டாய ஆட்சேர்ப்பு, மனிதாபிமானமற்ற வன்முறைகள் தான் அவர்களின் தோல்விக்கான காரணங்களின் முக்கியமானவை என்ற விமர்சனமும் பரவலாக முன்வைக்கப்படுகின்றது. புலிகள் தமிழ் மக்களுக்காக போராடுவதை விட தமது இறுக்கமான, அதிகாரமிக்க தலைமைக்காகவே போராடினர் என்று சாதாரணமக்களும் எண்ணுகின்றனர்.

யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அரசாங்கம் சிறுபான்மை மக்களின் அரசியல்தீர்வு விடயத்தில் எந்தளவு நியாயமாக நடந்தது? என்பதுதான் அரசுக்கு எதிராகவுள்ள முக்கிய விடயமாகும். யுத்தத்தை வென்றதைப் போல தமிழ் மக்களை தேசியம் என்றழைக்கப் படுகின்ற மாயையில் இருந்தும் மீட்டெடுப்பதற்கான அரிய சந்தர்ப்பம் இருந்தது. ஆனால் அரசாங்கம் அதனைத் தட்டிக்கழித்தது.

கொடுமையான போரை வெற்றி கொண்டு நாட்டை மீட்டெடுத்தனர் என்று தென்னிலங்கை மக்களால் இன்றைய ஆட்சியாளர்கள் கொண்டாடப்பட்ட அதேவேளை தமிழர்கள் செறிந்து வாழ்கின்ற வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் ஒருமித்த கருத்து அரசியல்கட்சிகள், அமைப்புக்களிடம் காணப்படவில்லை.

பழமை வாய்ந்த தமிழரசுக் கட்சியை பிரதானமாகக் கொண்ட தமிழ் தேசிய கூட்டமைப்பினுள்ளும் இது தொடர்பில் பலத்த முரண்பாடுகள் காணப்பட்டன. தமிழரசுக் கட்சி சம்'டி அரசியல் முறைமை தேவை என்றது. ஆனால் எம்மாதிரியான, எவ்வகையான அதிகாரக் கட்டமைப்பு கொண்ட சமஷ்டி என்பதை அதனால் தெளிவாக வரையறுக்கவோ, மக்களி டம் பகிரங்கப்படுத்தவோ முடியவில் லை. இன்னும் சில கடும் போக்கு அமைப்புக்கள் தன்னாட்சி முறைமை வேண்டும் என்பர். இன்னும் சிலர் இந்திய சார்பு அதிகாரப் பகிர்வு முறைமையையும், சிலர் கனடா, சுவிஸ் போன்ற முறைமைகளையும் கோரினர்.

மறுபுறம் அரசுடன் இணைந்திருந்த யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட ஈ.பி.டி.பி.யும் கிழக்கை தளமாகக் கொண்ட ரி.எம்.வி.பி. யும் இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலான 13ஆவது அரசியல் அதிகாரங்களை அமுல்படுத்தும்படி கோரிநின்றனர்.

அரசாங்கம் புத்திசாதூரியமான முறையில் இன்றைய அரசியலமைப் புக்கு உட்பட்ட 13ஆவது அரசியல் அதிகாரங்களை(பொலிஸ் அதிகாரம் தவிர்ந்து) வழங்கி அபிவிருத்தியையும் வழங்கியிருந்தால் தேசியத்தின் காவலர்கள் எனக் கூறப்படுவோர் ஒதுக்கப்பட்டிருப்பர்.

இன்றைய அரசாங்கத்தின் புரிந்து கொள்ள முடியாத தந்திரோபாயம் என்னவெனில் தம்முடன் இருப்ப வர்களை பலப்படுத் தாமல் எதிரணியில் உள்ளவர்களின் வாக்கு வங்கியை தமிழ் மக்களிடம் தொடர்ந்தும் அபகரிப்பது தான். வெறும் அபிவிருத்தித் திட்டங்கள் மாத்திரம் தமிழ் மக்களின் ஏக்கங்களைப் பூர்த்தி செய்யாது என்பதை இன்றைய ஆட்சியாளர்கள் எப்போது புரிவார்கள் என்றுதெரியவில்லை.

வழமை போன்று அரசாங்கம் இன்னொரு அருமையான சந்தர்ப்பத் தையும் தவறவிடுகின்றது. அது TNA .யின் உள்முரண்பாடுகள். TNAயில் தமிழரசுக்கட்சியின் ஆதிக்கத்தை மட்டுப்படுத்த TNAஐ அரசியல்கட்சி யாக பதிய வேண்டும் என அதிலுள்ள ஏனைய தமிழ் கட்சிகள் வலியுறுத்து கின்றன. இம்முரண்பாட்டின் அளவானது தமது கோரிக்கையை தமிழரசுக்கட்சி ஏற்காவிட்டால் ஏனைய கட்சிகள் ஒன்றிணைந்து கட்சியாக பதிவு செய்யும் என்ற அளவிற்குச் சென்றது. ஆனால் வட மாகாண சபைத் தேர்தல் அறிவிப்பானது இவ் உள் முரண்பாடுகளை தற்காலிகமாக தள்ளி வைப்பதுடன் மீண்டும் தமிழரசுக் கட்சியின் ஆதிக்கத்தை அதிகரிக்கச் செய்யும்.

---

# பி.பி.ஸ்ரீனிவாஸ்



**- எம்.டி.முத்துக்குமாரசாமி -**

ஸ்ரீனிவாஸின் குரலை, அவர் பாடிய திரைப்படப்பாடல்களை அவை நம் பண்பாட்டுக்கு அளித்திருக்கும் கொடையை எப்படி புரிந்து கொள்வது? மென்மையான ரொமாண்டிக் குரல் பி.பி.ஸ்ரீனிவாஸு டையது என்பதில் இரண்டு கருத்து இருக்க முடியாது. கள்ளமும், கபடமும் இல்லாத குரலும் கூட. சி.எஸ்.ஜெயராமனின் குரலைப் போல anarchy - இன் துள்ளல்களும் கரடுமுரடும், பிசிறுகளின் அழகும் இல்லாத குரல். 'நிலவுக்கு என் மேல் என்னடி கோபம்? நெருப்பாய் எரிகிறது' என்ற பாடலைக் கேட்டே எதிரே நிற்பது நிலவல்ல நிலவென உருவகிக்கப்படும் பெண்தான் என்று உடனடியாக யூகித்து விடலாம். கோபம் கொண்ட பெண்ணை சமாதானம் செய்யும் தொனியிலேயே அந்த முழுப்பாட்டையும் பாடியிருப்பார் ஸ்ரீனிவாஸ். துளியும் அதில் ஒரு சீண்டல் இருக்காது. ஸ்ரீனிவாஸின் இன்னொரு நிலவுப் பாடலான 'நிலவே என்னிடம் நெருங்காதே நீ நினைக்கும் இடத்தில் நான் இல்லை' சோகமும் சிருங்காரமும் கலந்த பாடல். இரண்டு பாடல்களிலுமே சோகம் கட்டுக்கு மீறி 'சட்டி சுட்டதடா கை விட்டதடா' பாடல் போலவோ அல்லது 'எங்கே நிம்மதி?' பாடல் போலவோ கண்ணீரும் கம்பலையுமாய் தறி கெட்டு விடுவதில்லை. ஸ்ரீனிவாஸின் குரல் ஏராளமான நாடக பாவங்களையும் உணர்ச்சிகளையும் கொட்டுவதில்லை; அது ஒரு சீரான உரையாடல் தன்மையுடையதாய் அளவானதாய் இருக்கிறது. 'ரோஜா மலரே ராஜகுமாரி' என்ற குதூகலத்தன்மை கொண்ட பாடலாய் இருந்தாலும் சரி 'தென்னங்கீற்று ஊஞ்சலிலே' என்ற பாடலாய் இருந்தாலும் சரி உணர்ச்சி மிகுவதில்லை; வார்த்தைகள் சிதைவதில்லை; அதன் ஓட்டம் தடைப்படுவதில்லை. உணர்ச்சிகளின் நுண் தளங்கள் மென்மையாகச் சுட்டப்படுகின்றன விரிக்கப்படுவதில்லை.

பி.பி.ஸ்ரீனிவாஸின் அடிக்குரல் கனத்ததாய் வெளிப்பட வாய்ப்பிருந்தாலும் அவர் அதனை அபூர்வமாயும் பயன்படுத்தியதில்லை. 'கண்ணாலே பேசிப் பேசிக் கொல்லாதே' பாடல் கனத்த குரலுக்கான சிறந்த சந்தர்ப்பம். கண்டசாலாவோ ஏன் ஏ.எம்.ராஜாவோ கூட அதை நழுவ விட்டிருக்க மாட்டார்கள். ஆனால் நன்றாக உற்றுக் கேட்டால் கனத்த குரலைப் பயன்படுத்தாத கலைக்கட்டுப்பாடு ஸ்ரீனிவாஸிடம் எந்த அளவுக்கு கலை முழுமையடைய உதவுகிறது என்பது தெரிய வரும். அவருடைய இதர பாடல்களைக் கேட்கும்போது இது இன்னும் நுட்பமாக தெரியவரும். 'காலங்களில் அவள் வசந்தம்' பாடல் மென்மையும் கட்டுப்பாடும் அழகின் மெருகுகள் என்பதை உணர்த்தும். 'என்னருகே நீயிருந்தால்' பாடல் ஸ்ரீனிவாஸினால் மட்டும்தான் அணுக்கத்தின் குதூ கலத்தை வெளிப்படுத்தும் பாடலாகிறது என்று அடித்துச் சொல்லலாம். 'அனுபவம் புதுமை' பாடலை அவரைத் தவிர வேறு யார் பாடியிருந்தாலும் பாடல் விரசமாகியிருக்கும்.

'நெஞ்சம் மறப்பதில்லை', 'நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை', 'மயக்கமா கலக்கமா' ஆகிய பாடல்கள் நெஞ்சு வெடித்து கதறி அழத் தகுந்த பாடல்கள். ஸ்ரீனிவாஸ் அந்த உணர்ச்சிப் பெருக்கினை ஒரு ஆற்றொழுக்கிற்குக் கொண்டு வந்திருப்பார்.

பி.பி.ஸ்ரீனிவாஸின் கலையின் கலாசார மூலங்கள் யாவை சமிக்ஞைகள் யாவை என்பதினை அறிய அவர் பாடியுள்ள இதர பக்தி பாடல்களையும் கேட்க வேண்டும். குறிப்பாக பி.பி.ஸ்ரீனிவாஸ் பாடிய முகுந்த மாலை, ஸ்ரீ மல்லிகார்ஜுன ஸ்தோத்திரம் ஆகியனவற்றைக் கேட்கவேண்டும். குலசேகராழ்வார் இயற்றிய முகுந்த மாலையை ஸ்ரீனிவாஸ் 'பாடியிருக்கிறார்' என்று விவரிப்பது தவறானது ஓதுதலுக்கும், உச்சாடனத்திற்கும், பேசுவதற்கும் இடைப்பட்ட ஒன்று அது. அதிலும் 'நாமாமி நாரயண பாத பங்கஜம், கரோமி நாராயண பூஜனம் சதா, வதாமி நாரயண நாமம் நிர்மலம், ஸ்மாராணி நாரயண தத்வம் அவ்யயம்' என்ற முகுந்த மாலையின் புகழ் பெற்ற பத்தியினை ஸ்ரீனிவாஸ் 'பாடுவதை' கேட்பவர்களுக்கு அவருக்கு உணர்ச்சியை கட்டுக்கோப்புடன் கையாளும் திறன் வைணவ பக்தி மரபிலிருந்து வருவது புலப்படும். பக்தியின் உச்சத்தில் ஆவேசத்தில் சாமியாடிவிடுகின்ற பக்தியல்ல இது. பரம்பொருளுடன் இணைவதற்கான தாபம் உள்ளார்ந்த ஆற்றொழுக்காய் மாறிவிட்ட நிலையில் இவ்வுலக அன்பாக, உரையாடலாய் விகசிக்கின்ற பாங்கு, பாவனை, சகஜம். ஸ்வாதித் திருநாளின் கீர்த்தனைகளில் நாம் கேட்கும் கட்டுக்கோப்பான உணர்ச்சியின் வெளிப்பாடு. பதம் பாடுதலின் நீட்சி. 'தாமுகக்கும் தம்கையில் சங்கமே போலாவோ, யாமுகக்கு மெங்கையில் சங்கமு மேந்திழையீர், தீமுகத்து நாகணைமேல் சேரும் திருவரங்கர், ஆமுகத்தை நோக்காரால் அம்மனே அம்மனே' என்று நாச்சியார் திருமொழியில் ஆண்டாள் பாடுவாரே அந்த உணர்ச்சிப் பீறிடல் ஆற்றுப்படுத்தப்பட்டதன் வடிவம். ஏன் பாரதியின் கண்ணம்மா பாடல்களில் உள்ளார்ந்த அமைதியுடன் இருக்கின்ற பக்திஃகாதல் இல்லையா? 'காற்று வெளியிடை கண்ணம்மா' பாடலை ஸ்ரீனிவாஸ் பாடும்போது அது பேரழகுடன் ஒலிக்கவில்லையா?

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், சமஸ்கிருதம் என்று இரண்டாயிரம் பாடல்களுக்கும் மேல் பாடிய, ஆந்திரா காக்கிநாடாவில் பிறந்து, தமிழிலும் தெலுங்கிலும் புகழ் பெற்று சதா கன்னடத்தில் கவிதை எழுதிக்கொண்டிருந்த, வைணவத்தில் தோய்ந்த பி.பி.ஸ்ரீனிவாஸ்!

7 - (3)

# பத்தாண்டுகளின் பத்து இயக்குனர்கள்

சார்லஸ்

## அலெக்ஸான்ரோ கோன்ஸெலஸ் இனாரிட்டு



2006 ஆம் ஆண்டு வெளியான "பாபேல்" திரைப்படம், முன்னணி நடிகர்களான பிராட் பிட், கேட் பிளான்செட் போன்றவர்கள் நடித்திருந்தாலும் இயக்குனரின் முந்தைய இரு படங்கள் பெற்ற வரவேற்பு காரணமாகவும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி யிருந்தது. கடந்த 5 ஆண்டுகளில் உலக சினிமாவில் ஆர்வம் கொண்டவர்கள் அனை வரும் பார்த்திருக்கக் கூடிய ஒருசில படங்களில் இதுவும் ஒன்று. ஆனால் என்னைப் பொறுத்தவரை இயக்குனரின் முந்தைய படங்களை விட இது சுமாரானதே. திரைக்கதையில் குறைகளும் தர்க்கப் பிழைகளும் இருந்தாலும், மையமாக எடுத்துக்கொண்ட விஷயம் அற்புதமானது. அதுவே இந்தப் படத்தை முக்கியமான ஒன்றாக்குகிறது.

"பாபேல்" என்பதற்கு "பல புரியாத பேச்சுக்கள் சேர்ந்து குழப்பமாக ஒலிப்பது" என்று அகராதி அர்த்தம் சொல்லும். பைபிள் படித்தவர்கள் "பாபேல் கோபுரம்" பற்றி அறிந்திருப்பார்கள். மனிதர்கள் ஒரே இடத்தில் வாழாமல் உலகம் முழுவதும் பரவவேண்டும் என்று விரும்பிய கடவுள், அவர்களுக்குள் பலவித மொழிகளைத் தோற்றுவித்துப் பிரித்து வெவ்வேறு பகுதிகளுக்குச் சிதறச்செய்ததாக வரும் பகுதி அது. "பாபேல்" திரைப்படமும் மனிதர்களுக்குள் இருக்கும் தொடர்பு இடைவெளி பற்றியதே. வெளிப்படையாகப் பேச முடியாமை, மற்றவர் சொல்வதைக் கவனிக்கவும் புரிந்துகொள்ளவும் முயலாமை, உண்மையை மறைத்துப் பேசுவது, சகமனித நம்பிக்கையின்மையால் தொடர்பு கொள்வதில் ஏற்படும் சிக்கல்கள் போன்றவற்றைப் பற்றியே இந்தப்படம் பேசுகிறது.

ஒரு துப்பாக்கிச் சூட்டோடு நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புள்ள 4 தனித்தனிக் கதையோட்டங்களைக் கொண்டிருக்கிறது திரைக்கதை. இரு சிறுவர்கள் தங்கள் விளையாட்டுத் தனத்தால் துப்பாக்கியை வெடித்து அது பிரச்சினையாகியதும், தங்கள் அப்பாவிடம் உண்மையைச் சொல்லாமல் மறைத்துவிடுகிறார்கள். மொரோக்கோ பயங்கரவாதிகள் ஒரு அமெரிக்க சுற்றுலாப் பயணியைச் சுட்டுவிட்டதாக உலகமெங்கும் அது செய்தியாகிவிடுகிறது. இறுதியில் உண்மையை மறைத்ததற்கான தண்டனையை சிறுவர்கள் அடைகிறார்கள்.

ஒரு குழந்தையின் இறப்பினால் கணவன் மனைவிக்குள் உருவாகும் விரிசல் பேசித்தீர்க்கப்பட முடியாமல் இருவருக்கு நடுவிலும் பாறைபோல நின்றிருக்க, சுற்றுலா சென்ற இடத்தில் மனைவி குண்டடிபட, அந்தக் களேபரத்தின் உச்சத்தில் இருவரும் ஒருவரையொருவர் புரிந்துகொள்கிறார்கள்.

அந்தக் கணவன், வீட்டில் தனது இரு குழந்தைகளைக் கவனித்துக்கொள்ளும் வேலைக்காரப் பெண்மணிக்கு போன்செய்து, தன் சூழ்நிலை காரணமாக, அவள் கேட்டிருந்த விடுப்பை கொடுக்கமுடியாது என்கிறான். ஆனால் அவள் விடுப்பு கேட்டிருந்ததோ தனது மகனின் திருமணத்தில் கலந்து கொள்வதற்காக. அது அவள் வாழ்வில் மிக முக்கியமான ஒன்று என்பதைப் புரிந்துகொள்ளாமல், அவள் சொல்ல வருவதைக் கேட்காமல், தன்னுடைய பிரச்சினையை மட்டுமே பெரிதாக நினைத்து போனை வைத்துவிடுகிறான் கணவன். அந்தப் பெண்மணி இரு குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு சாலை வழியாக நாடுவிட்டு நாடு சென்று, தன் மகன் திருமணத்தில் கலந்துகொண்டுவிட்டு திரும்பும் வழியில், பரந்த பாலை நிலத்தில் குழந்தைகளைத் தொலைத்துவிடுகிறாள்.

முதல் கதையில் வெடித்த அந்தத் துப்பாக்கியை மொரோக்கோகாரனுக்கு விற்றது ஒரு ஜப்பானிய ஆள். அவருடைய, காது கேளாத வாய்பேச முடியாத மகள், தன் அம்மா தற்கொலைசெய்து செத்துப்போனதை சிறுவயதில் நேரில் பார்த்திருக்கிறாள். அந்த அதிர்ச்சியை யாரிடமும் பகிர்ந்துகொள்ள முடியாமல் மனதில் தேக்கிவைத்திருக்கிறாள். அந்த அழுத்தம் இளம்பெண்ணான பிறகு விபரீதமான பாலுறவு வேட்கையாக அவளிடம் வெளிப்படுகிறது. இறுதியில் அவள் மனம்விட்டு அழுது தன் துக்கத்தை அப்பாவிடம் முதன்முறையாக வெளிப்படுத்துகிறாள் என்பதோடு படம் நிறைவடைகிறது.

மொழிப்பிரச்சினை, சக மனிதர்களிடம் அக்கறையின்மை, நெருங்கிய உறவினர்களிடம் கூட வெளிப்படையாகப் பேசமுடியாமலாக்கும் மனத்தடை உட்பட, மனிதருக்கிடையே உண்டாகும் தொடர்பு இடைவெளியின் எல்லா அம்சங்கள் பற்றியும் படம்நெடுகிலும் பல்வேறு பாத்திரங்கள் மற்றும் கதைச் சூழல்கள் வழி காட்டப்பட்டிருக்கிறது. அதே சமயம் மனிதனின் அகம் எந்தச் சூழ்நிலையிலும் தனக்கு இணக்கமான இன்னொரு மனித மனத்தை எளிதில் இனங்கண்டு புரிந்துகொள்கிறது என்பதும் படத்தில் காட்டப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு, மொரோக்கோவின் குக்கிராமமொன்றில் இருக்கும் படிப்பறிவில்லாத மூதாட்டியும், குண்டடிபட்ட அமெரிக்கப் பெண்ணும் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்கிறார்கள். மொழி உட்பட எந்தப் புற வழியிலும் தொடர்பில்லாத அவர்கள் இருவருக்குள்ளும் சட்டென்று உண்டாகிவிடும் புரிதலைக் காட்டியிருக்கும் விதம் இந்தப் படத்தின் சிறந்த தருணங்களில் ஒன்று.






# கடைசிக்கால அமைதி!

**பை**ரஸ் என்ற கிரேக்கப் பேரரசன் ஒருமுறை பெரும்படையுடன் போருக்குப் புறப்பட்டான்.

அப்போது அங்கு வந்த தத்துவஞானி கிளியாஸ் அரசரிடம், "அரசே! இந்தப் போர் எந்த நாட்டின் மீது?" என்று கேட்டார்.

"ரோமாபுரியின் மீது" என்றான் அரசன்.

"இத்துடன் போரை முடித்துக் கொள்வீர்களா?"

"இல்லையில்லை... எனது அடுத்த இலக்கு இத்தாலியின் மீது"

"அப்புறம்...?"

"ஒவ்வொரு நாட்டின் மீதும் படையெடுத்து வெற்றிக் கொடி நாட்டுவேன்"

"எல்லா நாடுகளையும் வென்றுவிட்ட பிறகு...?"

"நாட்டிற்கு வந்து எனது கடைசிக் காலத்தை அமைதியாகக் கழிப்பேன்"

பைரசைப் பார்த்து தத்துவஞானி கேட்டார். "அரசே! சற்று சிந்தியுங்கள்! உங்கள் கடைசிக் காலத்தில் கழிக்கப் போவதாகச் சொன்ன அந்த அமைதியை நீங்கள் இப்போதே மேற்கொண்டால் தாங்கள் போர் தொடுப்பதால் ஏற்படும் அவலங்கள் எத்தனை எத்தனையோ மிஞ்சும். எத்தனை எத்தனையோ உயிர்கள் உயிரோடு இருக்கும். போர் வேண்டுமா? உலகம் அழியத்தான் வேண்டுமா? சிந்தியுங்கள்!"

கிளியாசின் வார்த்தைகளைக் கேட்ட பைரஸ் மனம் மாறினார். "நீங்கள் சொல்வது சரிதான். இன்றிலிருந்து போர் தொடுக்கும் எனது முடிவினை மாற்றிக் கொள்கிறேன்" என்றார் பைரஸ்.

# பலூன்!

- 1794ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாடு முதன்முறையாக பலூன்களை யுத்தத்தில் பயன்படுத்தியது.
- 1797ஆம் ஆண்டில் பலூனில் பறந்து சென்று முதன்முதலாகப் பராசூட் மூலம் கீழே குதித்தார் ஆந்ரே கார்னெரின் என்ற பிரெஞ்ச்காரர்.
- 1836ஆம் ஆண்டில் இங்கிலாந்திலிருந்து ஜேர்மனிக்கு பலூன் மூலம் முதன்முதலாகப் பறந்து வந்தார் சாள்ஸ் க்ரீன் என்ற ஆங்கிலேயர். இவர் பயணம் செய்த தூரம் 750 கி.மீ. அதற்காக அவர் செலவிட்டது 18 மணி நேரம்.
- 1906ஆம் ஆண்டில் சர்வதேச பலூன் பந்தயம் முதன்முதலாக பிரான்சில் நடைபெற்றது. அன்றிலிருந்து இரண்டாம் உலகப் போர் ஆரம்பிப்பதற்கு முன்பு வரை ஆண்டுதோறும் சர்வதேசத் தொலைதூர பலூன் பந்தயம் நடைபெற்று வந்தது.
- 1910ஆம் ஆண்டில் பலூனில் ஆல்ப்ஸ் மலையைக் கடந்தார் எட்வேர்ட் ஸ்வைசர் என்பவர். இதைத் தொடர்ந்து பலூனில் ஆல்ப்ஸ் மலையைக் கடக்கும் விளையாட்டு ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. ஸ்விட்சர்லாந்தில் உள்ள மியூரன் என்ற இடத்தில் பலூன் வீரர்கள் கூடி தங்கள் சாகசங்களை நிகழ்த்திக் காட்டுகின்றனர்.





# அது அப்படித்தான்

**– ஒளிப்பதிவாளர் நல்லுசாமி**

**நான்** சேலம் மாவட்டத்தில் ஒரு கிராமத்தைச் சேர்ந்தவன். சென்னை அடையார் பிலிம் இன்ஸ்டிட்டில் 1972 இல் சேர்ந்தேன். 1975இல் படிப்பை முடித்தேன். ருத்ரய்யா என் வகுப்புத் தோழர். அவர் எங்கள் ஊருக்கு அருகில் தலைவாசலைச் சேர்ந்தவர். அவரது டிப்ளமோ படத்துக்கு நான்தான் கமரா. படிப்பை முடித்த பின் சென்னை தூர்தர்ஷனில் சேர்ந்தேன். ருத்ரய்யாவும். அங்கே பணியாற்றினார். 78இல் சேலத்தில் இருந்து ஒரு தயாரிப்பாளர் வந்திருந்தார்.

ருத்ரய்யாதான் அவள் அப்படித்தான் படத்துக்கான கருவினைச் சொன்னார். சோம சுந்தேரேஷ்வர் (ராஜேஷ்வர்) என்கிற எங்கள் திரைப்படக் கல்லூரி நண்பர் அதற்கு ஒன்லைன் தயார செய்தார். அதை அனந்துவிடம் கொடுததோம். திரைக்கதையை ராஜேஷ்வர் எழுத பெரும்பாலும் வசனங்களை அனந்து எழுதினார். மீதியை வண்ண நிலவன் எழுதினார். பாடல்களையும் அவரையே எழுதச் சொன்னோம். அவர மறுத்துவிட்டார்.

அப்போது வளர்ந்து வரும் நடிகையாக இருந்த படாபட் ஜெயலட்சுமியை தெரிவு செய்தோம். அவரும் ஒப்புக் கொண்டார். ஆனால், கமல் பிஸியாக இருந்தார். அவர் எப்போது ஓய்வாக இருக்கிறாரோ அப்போது தான் நாங்கள் படமெடுக்க முடியும் என்கிற நிலை. எங்களால் திகதிகளைக் கூற முடியாததால் படாபட் ஜெயலட்சுமியை நடிக்க வைக்க முடியவில்லை.


ஸ்ரீப்பிரியாவை நடிக்க வைக்கலாம என்று கமல் கூறினார். அப்போது அவரது ஆட்டுக்கார அலமேலு மிகப்பெரிய ஹிட். அவரே போன் செய்து ஸ்ரீப்பிரியாவிடம் எங்களைக் கதைசொல்ல அனுப்பினார். நானும் ருத்ரய்யாவும் சென்றோம். அவர் ஒப்புக்கொண்டார். சம்பளம் எப்படி என்றோம். சொல்லி அனுபபுகிறேன் என்றார். மேடம் ஒருஇலட்ச ரூபாய் வாங்குகிறார். இப்படத்துக்கு 30,000 ரூபாய் கொடுத்தால் போதும் என்று தகவல் வந்தது.

ஒப்புக்கொண்டோம். கமல்தான் இளையராஜாவையும் இப்படத்துக்கு புக் செய்தார். இது மட்டுமல்ல படத்துக்காக பல விஷயங்களை கமல்தான் செய்தார்.

இப்படத்துக்கு கமலுடன் ரஜினியையும் சேர்த்தால் நன்றாக இருக்கும் என்று அனந்து சொன்னார். அனந்து, கமல் ரஜினியுடன் நினைத்தாலே இனிக்கும் படப்பிடிப்புக்காக சிங்கப்பூர் சென றார். அங்கேயே பேசி ரஜினியும் சம்மதித்தார். யாருக்கும் நாங்கள் அட்வான்ஸ் கொடுக்கவில்லை. பூஜை போட்டோம். அப்போதெல்லாம் இசையமைப்பாளர்கள் பட அலுவலகத்துக்கே வருவார்கள். ஆழ்வார்ப் பேட்டையில் அலுவலகம் போட்டிருந்தோம். எங்கள் அலுவலகத்தில் மின்விசிறி கிடையாது. மறுநாள் இளையராஜா வரப்போகிறார் என்பதால் முதல் நாள் மாலையே வாங்கி மாட்டினோம். ஆனால், இளையராஜா வந்தபோது மின்சாரம் இல்லாமல் போய்விட்டது.

மூன்று பாடல்கள் கம்போசிங். கண்ணதாசனை வைத்து பாடல்கள் எழுதலாம் என்று தீர்மானித்தோம். எங்கள் அலுவலகத்துக்கு அருகே கண்ணதாசன் நடத்திய கவிதா ஹோட்டல். அங்குதான் கவிஞர் இருப்பார். இசையமைப்பாளர்கள் அங்கே செல்வார்கள். அங்கே இளையராஜா வேறு ஒரு பாடல் கம்போசிங்கிற்காக வருகிறேன். அங்கேயே வந்து விடுங்கள் என்றார். நடந்தே சென்றோம்.

பிரம்பு நாற்காலியில் பனியன் போட்டுக் கொண்டு கவிஞர் அமர்ந்திருந்தார். அவரிடம் வசந்தகாலக் கோலங்கள்.. வானில் விழுந்த கோடுகள் பாட்டு போல எங்களுக்கு வேண்டும் என்றோம். அவர் ஒரு 20 பல்லவிகளை எங்களுக்குச் சொன்னார். எதுவுமே



அடுத்து ஸ்ரீப்பிரியா படப் பிடிப்பு. அவர் முதல் நாள் நாற்காலி கொண்டு வந்திருந்தார். ஆனால் எங்கள் படப் பிடிப்பு விதமோ வழக்கத்தில் இருந்து வேறுபட்டு இருந்தது. அங்கே யாருக்கும் நாற்காலி இல்லை. அவர் புரிந்து கொண்டு மறுநாள் முதல் நாற்காலி கொண்டு வரவில்லை. எங்களுடனே அவரும் தரையில் அமர்ந்து கொண்டார். ரஜினியும் கமலும் என்ன ஆடை அணிந்து படப்பிடிப்புக்கு வருகிறார்களோ அதுதான் அவர்களுக்கு அன்று ஆடை. ஆடை வடிவமைப்பாளர் என்று யாரும் இல்லை. மேக்கப்பும் இல்லை. எங்களுக்கு எப்போது என்ன எடுப்போம் என்றே தெரியாது.... படம் முடிந்து விநியோகஸ்தர்களுக்கு போட்டுக் காட்டினோம். அன்று தான் வாழ்க்கையிலேயே மறக்க முடியாத நாள். படம் பார்த்தவுடன் அனைவர் முகத்திலும் சவக்களை!

பிடிக்கவில்லை. எங்களுக்கு முழு திருப்தி இல்லையென்றாலும் 'வாழ்க்கை ஓடம் செல்ல' பல்லவியைத் தேர்ந்தெடுததோம். பாட்டெழுதிக் கொடுத்தார். படம் வெளியாகி ப்ளாப் ஆனதும் இப்படி ஒரு அபசகுனமான பாட்டை முதலில் எழுதினால் இப்படித்தான் ஆகும் என்று கூடச் சொன்னார்கள்.

சோவின் தம்பி அம்பியின் பள்ளியில் முதல் இரண்டு நாட்கள் இந்தப் பாட்டை எடுத்தோம். அடுத்து ஸ்ரீப்பிரியா படப்பிடிப்பு. அவர் முதல் நாள் நாற்காலி கொண்டு வந்திருந்தார். ஆனால் எங்கள் படப் பிடிப்பு விதமோ வழக்கத்தில் இருந்து வேறுபட்டு இருந்தது. அங்கே யாருக்கும் நாற்காலி இல்லை. அவர் புரிந்து கொண்டு மறுநாள் முதல நாற்காலி கொண்டு வரவில்லை. எங்களுடனே அவரும் தரையில் அமர்ந்து கொண்டார். சாப்பாடும் நாங்கள் ஆழ்வார்ப் பேட்டையில் ஒரு மெஸ்ஸில் சாப்பிடுவோம். அங்கிருந்து தான் உணவு வரும். லோ பட்ஜெட் படம். சுமாரான சாப்பாடு தான். அதைத் தான் கமல் உள்பட எல்லோரும் சாப்பிட்டார்கள்.

ரஜினியும் கமலும் என்ன ஆடை அணிந்து படப்பிடிப்புக்கு வருகிறார்களோ அதுதான் அவர்களுக்கு அன்று ஆடை. ஆடை வடிவமைப்பாளர் என்று யாரும் இல்லை. மேக்கப்பும் இல்லை. எங்களுக்கு எப்போது என்ன எடுப்போம் என்றே தெரியாது. திடீரென்று போன் வரும். இன்றைக்கு கமல் ப்ரீயாக இருக்கிறார். எதாவது காட்சி எடுக்கலாமே என்று. உடனே மற்ற நடிகர்கள் யார் ப்ரீயாக இருக்கிறார்கள் என்று பார்த்து அவர்களை அழைத்து அனந்துசாரிடம் டயலாக் வாங்கி, லொகேஷன் பார்த்துப் படம் எடுப்போம். கமல்சார் வீடு, எங்கள் அலுவலகம், ஸ்ரீப்பிரியா வீடு இப்படித்தான் படம் எடுத்தோம்.

நானும் சரி, ருத்ரய்யாவும் சரி யாரிடமும் உதவி இயக்குநர்களாக பணியாற்றியிருக்கவில்லை. இளங்கன்று பயமறியாது என்பது போல துணிச்சலாக எடுத்தோம். நேரம் மிகவும் குறைவு. ட்ரைபோடில் வைத்துப் படம் பிடிக்க நேரம் ஆகும் என்பதால் பல காட்சிகளை நான் கமராவை கையில வைத்தே எடுத்தேன். நேரம் சேமிப்பதற்காக கட் பண்ணி எடுக்க வேண்டிய பல சீன்களை ஒரே ஷொட்டில் எடுத்தோம் ஸ்ரீப்பிரியா, கமல் இருவருமே ரீடேக்கே போகமாட்டார்கள். ஒரே டேக்கில் நடித்துக் கொடுத்து விடுவார்கள். மொத்த படமுமே 27000 அடியில் எடுத்தோம். கமலோ, ஸ்ரீப்பிரியாவோ டப்பிங்கில் கூட ஒரே ஒரு முறை லூப்பைப் பார்ப்பார்கள். அப்படியே பேசிவிடுவார்கள்.

படம் முடிந்து விநியோகஸ்தர்களுக்கு போட்டுக் காட்டினோம். அன்று தான் வாழ்க்கையிலேயே மறக்க முடியாத நாள். படம் பார்த்தவுடன் அனைவர் முகத்திலும் சவக்களை! ரேட் குறைவாகத்தான் விற்றிருந்தோம். எனவே அனைவரும் பிரிண்ட்களை வாங்கிக் கொண்டார்கள். 1978 தீபாவளிக்கு ரிலீஸ். அன்று 12 படங்கள் ரிலீசாகின. கமலுக்கு மூன்று படம். ரஜினிக்கு மூன்று படம். ஆனந்தவிகடன் விமர்சனத்தில் எங்கள் படத்துக்குத்தான் குறைவான மார்க். நூற்றுக்கு 28 மார்க்.

படம் வெளியானதும் மோசமான எதிர்வினை. சில இடங்களில் தியேட்டர் நாற்காலிகளை இரசிகர்கள் உடைத்ததாகத் தகவல். இரண்டே வாரத்தில் தமிழ்நாடு முழுக்க படம் தியேட்டர்களை விட்டு எடுக்கப்பட்டு விட்டது. படம் ஓடவில்லை. நாங்கள் தோற்றுவிட்டோம் என்று நினைத்த போது ஓர் அதிசயம் நடந்தது. புகழ்பெற்ற இயக்குநர் மிருணாள்சென் சென்னைக்கு வந்து தங்கினார். ஓர் இரவு ஏதாவது படம் பார்க்கலாமே என்று அவள் அப்படித்தான் படத்தை தியேட்டரில் பார்த்திருக்கிறார். மறுநாளே அவர் தான் தங்கியிருந்த ஹோட்டலுக்கு பத்திரிகையாளர்களை வரவழைத்து படம் மிகவும் அற்புதமாக உள்ளது. ஏன் நீங்கள் நல்ல படத்தை ஆதரிப்பதில்லை என்று புகழ்ந்து பேட்டி கொடுத்தார். பத்திரிகைகள் அவர் பேட்டியை வெளியிட்டதுடன் ரஜினி, கமல், ஸ்ரீப்பிரியா, ருத்ரய்யா பேட்டிகளையும் வெளியிட்டன.

படம் ஓட ஆரம்பித்துவிட்டது. சென்னை, கோவை, திருச்சி, மதுரை போன்ற இடங்களில் 100 நாள் ஓடியது. இதற்கு தமிழகஅரசின் மூன்று விருதுகள் கிடைத்தன. எனக்குச் சிறந்த ஒளிப்பதிவுக்கான விருதும் கிடைத்தது. இதன் பின்னணியில் ஒரு சுவாரசியம் உள்ளது. அது 20 ஆண்டுகள் கழித்துத்தான் எனக்குத் தெரிந்தது. அந்த விருதுக் குழுவில் இடம் பெற்றிருந்த சாருஹாசன் என்னிடம் சொன்னார். அப்போது கறுப்பு வெள்ளைப் படமாக இருந்ததால் ஒளிப்பதிவுக்கான சிறந்த படங்களைத் தேர்வு செய்யும் நடுவரான மார்கஸ் பாட்லேயிடம் அவள் அப்படித்தான் படத்தைப் போட்டுக் காட்டவில்லையாம். வண்ணப் படங்களை மட்டும் திரையிட்டுக் காட்டி ஸ்ரீதரின் அழகே உன்னை ஆராதிக்கிறேன் படத்தை அவர் தெரிவு செய்துவிட்டார். சிறந்த இயக்கத்துக்கான படங்களைத் தேர்வு செய்யும் போது எதேச்சையாக மார்க்ஸ் பாட்லே வந்திருக்கிறார். அப்போது எங்கள் படத்தைப் பார்த்திருக்கிறார். அதில் ஒளிப்பதிவு அவருக்குப் பிடித்துப் போய்விட்டது. இதற்குத்தான் சிறந்த ஒளிப்பதிவுக்கான விருது கொடுக்க வேண்டும் என்று கூறிவிட்டார். ஏற்கெனவே ஒருவரைத் தெரிவு செய்து விட்டதால் அந்த ஆண்டு முதல் முதலாக இரண்டு விருது கொடுத்தார்கள். ஒன்று சிறந்த வண்ணப்பட ஒளிப்பதிவுக்காக இன்னொன்று கறுப்பு வெள்ளைக்காக எனக்கு.

# வவுனியாவில் இரண்டாம் கட்டமாக தற்செயல் நிவாரணக் கொடுப்பனவு

(வவுனியா)

வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் தற்செயல் அனர்த்தங்களால் பாதிப்படைந்த 11 பேருக்கு இரண்டாம் கட்டமாக தற்செயல் நிவார்ணக்கொடுப்பனவுகள் வழங்குவதற்கு வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ். ஸ்ரீனிவாசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,


இவ் ஆண்டு வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் பல்வேறு அனர்த்தத்தால் பாதிப்படைந்தவர்களுக்கு இரண்டாம் கட்டமாக தற்செயல் நிவாரணம் வழங்குவதற்கு 93 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இவற்றுள் மூவருக்கு 5 ஆயிரம் ரூபா வீதமும் ஒருவருக்கு 8 ஆயிரம் ரூபாவும் ஏனைய 7 பேருக்கும் தலா 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளதாகவும் இதனடிப்படையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் வவுனியா பிரதேச செயலகத்தில் சமூக சேவைகள் உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு தமக்கான உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் தெரிவித்தார்.

தற்செயல் நிவாரணம் கிடைக்கப்பெற்றவர்கள் விபரம் வருமாறு,

சுப்பிரமணியம் தமிழ்ச்செல்வன் (பூவரசங்குளம்) 5 ஆயிரம் ரூபா, பொன்னுத்துரை புலேந்திரராசா, (ஆசிகுளம் வவுனியா) 5 ஆயிரம் ரூபா, இராமன் உதயகுமார் (இல 73 மணிபுரம், வீட்டுத் திட்டம், வவுனியா) 8 ஆயிரம் ரூபா, கண்ணப்பன் செல்லம்மா (தவசியாகுளம், சாஸ்திரி கூழாங்குளம் வவுனியா) 10 ஆயிரம் ரூபா, இராசேந்திரம் கேதீஸ்வரன் (கோவில்குஞ்சுக்குளம், பாலமோட்டை) 10 ஆயிரம் ரூபா, சுப்பிரமணியம் ரெங்கசாமி (மணிப்புரம் வீட்டுத் திட்டம், வவுனியா) 10 ஆயிரம் ரூபா, பொறைக்கிழான் சேவகன் (90, விநாயகர் வித்தியாலய வீதி, சமயபுரம்) 10 ஆயிரம் ரூபா, மனன்லாகே ஜெயந்த (இல 313, தேக்கம் தோட்டம், வவுனியா) 10 ஆயிரம் ரூபா, மாஜயப்பன் வீரையா (மணிப்புரம், வவுனியா) 10 ஆயிரம் ரூபா, இரத்தினகுமார் அமராவதி (கந்தன்குளம், பூவரசங்குளம்) 10 ஆயிரம் ரூபா, பதுார்தீன் சியாமளா (இல 20, 4 ஆம் ஒழுங்கை, வேப்பங்குளம) 5 ஆயிரம் ரூபா. (160)

# யாழ்.மத்தியகல்லூரி மைதானம் பழைய மாணவர்களால் புனரமைப்பு



யாழ்.மத்திய கல்லூரியின் விளையாட்டு மைதானப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இந்த மைதானத்தில் பார்வையாளர் அரங்கம் ஒன்றும் நிர்மாணிக்கப்படவுள்ளதாக அந்தக் கல்லூரியின் அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தெரிவித்துள்ளார்.

இந்தக்கல்லூரியின் பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளினால் வழங்கப்பட்ட நிதியில் இருந்தே இந்த மைதானத்தின் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், அவர் குறிப்பிட்டார்.

விரைவாக இந்தப் பணிகள் முடிவடையும் விதத்தில் இந்தப் புனரமைப்புப் பணிகள் திட்டமிடப்பட்டிருப்பதுடன், இதற்கான தொடக்க நிகழ்வு கடந்த பெப்ரவரி 2 ஆம் திகதி நடைபெற்றதனை அடுத்து வேலைகள் கடந்த 17 ஆம் திகதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

நான்கு கட்டங்களாக மேற்கொள்ளப்படவுள்ள இந்தப் புனரமைப்புப் பணிகளில் மைதானப் பகுதி கனரக இயந்திரங்களின் உதவியுடன் ஆழமாக்கப்பட்டு சமச்சீராக்கப்பட்டு புற்கள் பதிக்கப்படுவதுடன், நீர் வடிகால்களும் அமைக்கப்படவுள்ளது. அத்துடன் புற்றரைகளுக்கு நீர்ப்பாசன வசதிகளும் ஏற்படுத்தப்படவுள்ளன.

இவற்றுக்கு மேலாக பார்வையாளர் அரங்கம் ஒன்றும் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (பா)

# பூநகரி கோட்டமட்ட தமிழ்த்தினப்போட்டி முடிவுகள்

(முழங்காவில்)

பூநகரி கல்விக் கோட்டப்பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு. (நேற்றைய தொடர்ச்சி)

சிறுகதையாக்கம்

பிரிவு - 1

சு.கிருசாந்தினி (கிளி/முட்கொம்பன் அ.த.க.பாடசாலை), து.துசிதா (கிளி/நல்லூர் மகா வித்தியாலயம்), ஏ.யுக்சினா (கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்)

பிரிவு - 5

க.வேணுகா (கிளி/பூநகரி மகா வித்தியாலயம்) த.அனுசாந்தினி (கிளி/வேரவில் இ.மகா வித்தியாலயம்), வி.மிருசாந் (கிளி/நல்லூர் மகா வித்தியாலம்),

இலக்கணப்போட்டி

பிரிவு - 4

ர.துவாரகன் (கிளி/முட்கொம்பன் அ.த.க. பாடசாலை), ர.சிவலக்சன் (கிளி/கறுக்காய்தீவு மகா வித்தியாலயம்), வி.நிம்சி (கிளி/ஜெயபுரம் மகா வித்தியாலயம்),

பிரிவு - 5

சு.நிலந்தினி (கிளி/கறுக்காய்தீவு மகா வித்தியாலயம்), அ.சியாமளதேவி (கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்), வி.சரண்யா (கிளி/பூநகரி மகா வித்தியாலயம்)

கவிதையாக்கம்

பிரிவு - 04

செ.டனுசா (கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்), நீ.கயந்தினி (கிளி/வேரவில் மகா வித்தியாலயம்), வா.சுலக்சனா (கிளி/பூநகரி மகா வித்தியாலயம்).

பிரிவு - 05

கு.சக்தீனா (கிளி/வேரவில் இ. மகா வித்தியாலயம்), தி.சதீஸ் (கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்), ம.மேரியெஸ்ரீனா (கிளி/பூநகரி மகா வித்தியாலயம்).

திறனாய்வுப்போட்டி

பிரிவு - 05

ப.கௌசிகா (கிளி/பூநகரி மகா வித்தியாலயம்), செ.சுபாசினி (கிளி/கறுக்காய்த்தீவு மகா வித்தியாலயம்), சி.திவ்யா (கிளி/வேரவில் மகா வித்தியாலயம்.)

கட்டுரை

பிரிவு - 05

தி.மிதுலா (கிளி/கறுக்காய்த்தீவு மகா வித்தியாலயம்), த.ஜெலானி (கிளி/வேரவில் இ.மகா வித்தியாலயம்), பு.விதுஜா (கிளி/நல்லூர் மகா வித்தியாலயம்). (தொடரும்...)

(112)



# வேலை வாய்ப்புச் செய்திகள்

வயது முதிர்ந்த பெண் ஒருவரை வீட்டில் தங்கிநின்று பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும். தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்: 077 845 3450.

---

கணனியில் தமிழ், ஆங்கில ரைப்பிங் செய்யக்கூடிய பெண் பிள்ளைகள் உடன்தேவை. மற்றும் டிஜிற்றல் போட்டோப் பிரதியாக்கம் செய்யக்கூடியவர்களும், பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்: 075 4985 445, 078 5030774, 077 223 1147.

---

25,000, 35,000, 40,000 வரையான சம்பளத்திற்கு தனியார் துறைமுகத்தில் கப்பல் வேலைக்கு 18 தொடக்கம் 55 வரையான ஆண்கள் தேவை. உணவு, தங்குமிட வசதிகள் வழங்கப்படும். தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்: 077 303 3803.

---

25,000 ரூபா சம்பளத்திற்கு எமது க்ளவுஸ் உற்பத்தி செய்யும் கம்பனிக்கு 16 தொடக்கம் 55 வயதிற்கு இடைப்பட்ட ஆண், பெண் தேவை. தங்குமிட வசதி உண்டு. தொடர்புகளுக்கு: அனுராதபுரம் 077 303 2004.

---

அச்சகத்துக்கு புத்தகம் கட்டுனர் (Book Binding) அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்புகளுக்கு: 077 814 1219.

---

யாழ்.நகரில் இயங்கிவரும் கூல்பார் ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை. சம்பளம் 600 ரூபா. தொடர்புகளுக்கு: 077 859 4798.

---

வைத்திய நிலையத்திற்கு (யாழ்ப்பாணம், வன்னி) போன்ற மாவட்டங்களுக்கு வைத்தியர்கள் தேவைப்படுகின்றனர். தகுதிகள் MBBS, MD, RMP, RMO. மற்றும் தாதியர்களும் தேவைப்படுகின்றனர். ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். தொடர்புகளுக்கு: 077 775 0391.

---

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள கோல்டன் இராசையா மோட்டோர் விற்பனை நிலையத்திற்கு ஆண், பெண், வேலையாட்கள் தேவை. தொடர்புகளுக்கு: 077 614 1928.

---

பிரசித்திவாய்ந்த நிறுவனத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன. விரும்புபவர்கள் விண்ணப்பிக்கலாம். இயந்திர இயக்குநர்கள் (Ryobi, Davidsan) முகாமையாளர்கள் (பெண்கள்), கணனி இயக்குநர்கள் (ஆண் பெண் இருபாலாரும்). அலுவலக உதவியாளர்கள். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 021 222 4143.

---

பிரபல பேக்கரிக்கு சேவையாளர்கள் தேவை. பேக்கரி சமையற்காரர், கிச்சின், ஹெல்பார், கவுண்டர், பேக்கரி, ஹெல்பர்கள். உயர்ந்த ஊதியத்துடன் சகல வசதிகளும் உண்டு. தொடர்புகளுக்கு: 077 366 1330.

---

பிரபல தனியார் நிறுவனம் ஒன்றிற்கு க.பொ.த உயர் தரத்தில் 3பாடம் சித்தியடைந்தவர்கள் வெளிக்கள உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம். தொடர்புக்கு 077 233 4206.

---

வவுனியாவில் அமைந்துள்ள லங்கா ரைல்ஸ் காட்சியறைக்கு தகுதியானவர் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம். முகாமையாளர், களஞ்சியப் பொறுப்பாளர், விற்பனை உதவியாளர்,10 தினங்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: லங்கா ரைல்ஸ் காட்சியறை 58 யாழ். வீதி, வவுனியா.

# கிழக்கு அரசியலில்

# அல்கைதா கலப்படம்

## — முஸ்லிம் காங்கிரஸ் போர்க்கொடி —

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்புக்கு முஸ்லிம்கள் பெரும் அச்சுறுத்தலாக உள்ளனர் என்ற தோற்றத்தை உருவாக்கவே அல்கைதா கட்டுக்கதை உருவாக்கப்பட்டிருப்பதாக சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

உலமா சபையின் ஊடாக அல்கைதா பயங்கரவாதிகள் இலங்கைக்குள் ஊடுருவி வருகின்றனர் என பொதுபலசேனா தெரிவித்துள்ள கருத்துக்கு சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது கண்டனத்தை இவ்வாறு வெளியிட்டுள்ளனது.

பாதுகாப்பு தொடர்பான விடயத்தில் முஸ்லிம்களையும், உலமா சபையையும் சீண்டி முஸ்லிம்களைத் தனிமைப்படுத்த முயற்சிப்பதானது, மீண்டும் ஓர் இனவாத மோதலுக்கே வழிசெய்யும் எனவும் முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது

இது தொடர்பில் அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸன் அலி கூறியதாவது,

உலமா சபையின் ஊடாக அல்கைதா பயங்கரவாதிகள் இலங்கைக்குள் ஊடுருவுகின்றனர் என்று பொதுபலசேனா கூறியிருப்பதை சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது,

பொதுபலசேனாவின் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதப் பிரசாரங்கள் கட்டுக்கடங்காமல் தங்குதடையின்றிப் போகின்றன. இவை மிகவும் வேதனையையும், கவலையையும் தருகின்றன

உலமா சபையானது இந்த நாட்டு முஸ்லிம்களால் மதிக்கப்படுகின்ற ஓர் உயரிய சபையாகும். அந்தச் சபையைக் கொச்சைப்படுத்தும் வகையில் பயங்கரவாதிகளை நாட்டுக்குள் இறக்குமதி செய்யும் ஓர் அமைப்பாக பொதுபலசேனா சித்தரிக்கின்றது. இது இலங்கை முஸ்லிம்கள் அனைவரையும் பயங்கரவாதிகளாகக் காட்டும் முயற்சியாகும் அது மாத்திரமன்றி, நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் ஒரு சமூகமாக முஸ்லிம்களைக் காட்ட பொதுபலசேனா முயற்சிசெய்கின்றது.

பொதுபலசேனாவின் இவ்வாறான கீழ்த்தரமான இனவாதப் பிரசாரத்தைக் கண்டும் காணாமல் இருந்துவிட்டு வெறும் மேல்பூச்சைப் பூசும் அணுகுமுறையை சம்பந்தப்பட்டவர்கள் கைவிடவேண்டும

பாதுகாப்புத் தொடர்பான விடயத்தில் முஸ்லிம்களையும், உலமா சபையையும் சீண்டி முஸ்லிம்களைத் தனிமைப்படுத்த முயற்சிப்பதானது, மீண்டும் ஓர் இனவாத மோதலுக்கே வழிசெய்யும

அரசிலும், எதிர்க்கட்சியிலும் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் அனைவரும் தமது அரசியல் வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு பொதுபலசேனாவுக்கு எதிரான விடயத்தில் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

ஹலால் சான்றிதழ் தொடர்பான முடிவுகளைக் கிடப்பில் போட்டுள்ளதால் இந்த இயக்கம் ஊக்கமடைந்துள்ளது. முஸ்லிம் அரசியல்வாதிகள் இது விடயத்தில் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸன் அலி தெரிவித்தார்.

# நாட்டைத் துண்டு போட

# ஒரு போதும் நான் கோரவில்லை

(கொழும்பு)

நாட்டைப் பிளவுபடுத்த வேண்டுமென தான் ஒருபோதும் கோரியதில்லை என மன்னார் பேராயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு காத்திரமான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எவ்வித் மாற்றமும் கிடையாது எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் சில ஊடகங்களில் நாட்டை பிளவுபடுத்த கோரியதாக தகவல்கள் வெளியாகியிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து இடைக்கால நிர்வாக சபையொன்றை அமைக்க இந்தியா ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனக் கோரியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.எனினும், இவ்வாறான எந்தவொரு கோரிக்கையையும் தான் முன்வைக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.


தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் சில ஊடகங்களில் இவ்வாறான கருத்துக்கள் வெளியிடப்பட்டிருந்ததாகவும், இந்தத் தகவல்களில் உண்மையில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# விவசாயிகளுக்கு கடன்

(கோப்பாய்)

அச்சுவேலி இலங்கை வங்கியினால் சிறுபோகச் செய்கைக்கு கடன் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே விவசாயக் கடன்கள் பெற்று ஒழுங்காகக்கட்டியவர்களுக்கே கடன் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (08)




# இப்படியும் ஒரு சமுர்த்தி அலுவலர்

புது வருடத்தை முன்னிட்டு கடந்த 11, 12, 13 ஆகிய திகதிகளில் சமுர்த்திப் பயனாளிகளுக்கான பணக் கொடுப்பனவு வழங்கப்படுமென யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன்படி வலி. வடக்கிலுள்ள சமுர்த்தி அலுவலகத்திலும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டு இயலாத நிலையில் மீளவும் கடந்த 11ஆம் திகதி வழங்கப்பட்டது. அங்கு மூன்று பெண் பணியாளர்களும் சமுர்த்தி முகாமையாளர் எனக் கூறப்படும் ஆண் பணியாளரும் பணிபுரிந்தனர். சமுர்த்திப் பயனாளிகளின் புத்தகங்களை வாங்கி பெண்பணியாளர் அடுக்கி அவர்களது கணக்கை சரிபார்த்து முகாமையாளரின் மேசையில் ஒன்றுக்கு மேல் ஒன்றாக வைக்கின்றார். இதன் போது முகாமையாளரும் மேலுள்ள பைல்களை எடுத்து பணத்தைக் கொடுத்துக் கொண்டிருக்க அடியில் அடுக்கப்பட்ட பைலுக்குரிய சமுர்த்திப் பயனாளிகளில் சிலர் நீண்ட நேரமாக காத்து நிற்கின்றனர். அவர்களைப் பற்றியோ, அவர்களது பைல் அடியில் உள்ளதைப் பற்றியோ பெண் ஊழியரும் அக்கறை எடுக்கவில்லை. சமுர்த்தி முகாமையாளரும் கவனமெடுக்கவில்லை.

இதன் போது நீண்ட நேரமாக நின்ற இளைஞனொருவன் சமுர்த்தி முகாமையாளரிடம் சென்று நீண்டநேரமாக 'நிற்கின்றேன் எனக்குப் பின் வந்தவர்கள் எல்லோரும் செல்கின்றார்கள் எந்த ஒழுங்கின் படி பணத்தை வழங்குகின்றீர்கள் என்றுதான் கோட்டார். உடனடியாகவே சமுர்த்தி முகாமையாளரின் முகத்தில் எள்ளும், கொள்ளும் வெடித்தது. இங்கு எமது பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளது. உங்களது புத்தகங்களை அடுக்குவது அல்ல எங்கள் வேலை கனக்கக் கதைத்தால் பணம் வழங்குவதை நிறுத்தி விடுவோம் என எச்சரிக்கைத் தொனியில் தெரிவித்தார்.

எப்படியிருக்கிறது அரச ஊழியரின் பணிவான பேச்சு புத்தகங்களை அடுக்குவது உங்களது வேலை இல்லையென்றால் சமுர்த்திப் பயனாளிகளை ஒருவர் பின் ஒருவராக வரிசையில் நிறுத்தி ஒழுங்கின் படி பணத்தை வழங்கியிருக்கலாமே? இதை விடுத்து ஏன் அவர்களை புத்தகம் அடுக்குமாறு கூறினீர்கள் அவ்வாறு அவர்கள் புத்தகங்களை அடுக்கினால் ஒழுங்கான முறையில் பணத்தைக் கொடுப்பது உங்களின் பணியே தவிர சமுர்த்திப் பயனாளிகளின் பணி அல்ல.

புதுவருடத்தை முன்னிட்டு இந்தப் பணத்தைப் பெறலாமென அறிவித்த போதே மக்கள் அலுவலகங்களில் கூடுவார்கள் என்பது உங்களுக்கு தெரிந்திருக்க வேண்டுமல்லவா? இதற்கேற்ற வகையில் அலுவலகத்தில் பணியாற்றும் ஏனைய பணியாளர்களையும் இணைத்து இந்தப் பணியை முன்னுரிமை அடிப்படையில் செய்ய வேண்டியது யார் பொறுப்பு? இதற்கெல்லாம் பணியாளர்கள் இல்லை கனக்க கதைத்தால் பணக் கொடுப்பவை நிறுத்திவிடுவேன் என வெருட்டும் பாணியில் கதை பேசுவது அழகல்ல.

மக்களுக்காகவே அரச ஊழியர்கள் சேவைபுரிகின்றார்களே ஒழிய அரச ஊழியருக்காக மக்கள் அல்ல என்பதனை முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். பெரும்பாலான அரச அலுவலகங்களில் இது தான் நடக்கிறது. எசமான போக்கை கைவிடுங்கள். மக்களுடன் அன்பாகப் பழகுங்கள் பொறுப்புகளில் இருந்தால் பிரச்சினைகள் வரத்தான் செய்யும். அதனை எதிர்கொள்வதற்கு பதிலாக மக்களுடன் பாய்ந்து விழாதீர்கள். (இ.லோகினி)

# இரயில் மோதி ஒருவர் பலி

(கொழும்பு)

ரம்புக்கன பொலிஸ் பிரிவில் காலி வீதி இரயில் கடவைக்கு அருகில் ஓடும் இரயிலில் பாய்ந்த ஒருவர் மரணமடைந்துள்ளார்.

மாத்தறையில் இருந்து கண்டி நோக்கிச் சென்ற இரயிலில் மோதுண்டே குறித்த நபர் நேற்றுமுன்தினம் இரவு 7.50 மணி அளவில் உயிரிழந்துள்ளார். 39 வயதுடைய மொஹ மட்ரில்வான் என்பவரே மரணமடைந்துள்ளார். சடலம் கேகாலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# பொதுக்கூட்டம்

(வேலணை)

வேலணை வடக்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமானது எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் வேலணை மத்திய முன்பள்ளி சிறுவர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கிராம அபிவிருத்திச்சங்கத்தின் தலைவர் இ.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் புதுவருடத்திற்கான நிர்வாகிகள் தெரிவும் நடைபெறவுள்ளது. (05)


# நடமாடும் சேவை

(கைதடி)

கைதடி மேற்கு பராசக்தி மாதர் சங்கத்தின் நடமாடும் சேவை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை முதல் மதியம் வரை நடைபெற்றது. இச்சேவையில் பிறப்பு, இறப்பு சான்றிதழ், அடையாள அட்டைக்கான விண்ணப்பம், உள்ளிட்ட பல சேவைகள் மக்களுக்காக வழங்கப்பட்டன.

இதில் கைதடி மேற்கு, கைதடி தெற்கு பிரதேச மக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# பரமர் சங்கமம்



'கோபுர தரிசனம் கோடி பெறும்' என்றால் அதனுடைய அருமையும். பெருமையும். பழமொழியினூடாகத் தெரிய வேண்டும்.

இன்றைக்கு யாழ்ப்பாணத்தில் எங்கை பாத்தாலும் நான்கு மாடி. ஐந்து மாடியென எழுந்து காணப்படுகின்றன.

எனக்குத் தெரிந்த வரையில் எண்பதுகளில் குருநகர் பகுதியில் அரசால் கட்டப்பட்ட ஐந்து தொடர்மாடி வீடுகளே முதன் முதலில் எழுந்ததாக ஞாபகம். அதுவும் சில காலம் குடியிருப்புக்கு வழங்க முன்பாக படைமுகாமாக விளங்கியது.

இப்பொழுதும் ஐந்து மாடிகளுக்குக் கூட யாழ்ப்பாணப் பகுதிகளில் மாடிக்கட்டடம் அமைக்க அனுமதியில்லை எனச் சொல்லப்படுகிறது.

அதுகளெல்லாம் கோபுரங்களாகுமா? கோவில் கோபுர தரிசனங்களே கோடி பெறுமெனச் சொல்லப்பட்டுள்ளது. அதுவும் கூட இப்போ மலிந்து விட்டது.

ஐம்பதுகளுக்கு முன்பாக யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற கோவில்களில் கோபுரங்கள் இருக்கவில்லை தென் இந்திய திருத்தல யாத்திரிகை செய்தே கோபுரங்களைத் தரிசித்து வந்தனர்.

இங்கே நிறுவப்பட்ட கோபுரங்களில் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் கோபுரமே அதிக உயரமாக உள்ளதென எனது ஊகம். ஐந்து ஏழு, ஒன்பது, பதினொன்று என்னும் ஒற்றை விழும் கலசங்களைக் கொண்டே ஆலயக் கோபுரங்கள் நிறுவப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்ற அதிகமான கோபுரங்கள் ஐந்து கலசங்களை உடைய கோபுரங்களாகவே அமைந்துள்ளன. மாவிட்டபுரம், நகுலேஸ்வரம் ஆலயங்களில் ஒன்பது கலசங்கள் அமைந்திருக்க வேண்டும்.

கோபுரம் என்றதும் பரமருடைய சிந்தனை எங்கெங்கோ சென்று மீண்டுள்ளன. உண்மையில் யாழ்.மணிக்கூட்டுக் கோபுரம் பற்றியே பேச வெளிக்கிட்டது.

இதுவும் ஒரு ஐந்து மாடி உயரம் இருக்கும். பிரிட்டிஷார் எம்மைக் கட்டி ஆண்டதை நினைவூட்டிக் கொண்டிருக்கிறது. இந்த மணிக்கூட்டுக் கோபுரம். அவர்களாலே நிர்மாணிக்கப்பட்டதென வரலாறு கூறுகின்றது.

1995 ஒக்ரோபரில் பாரிய இடம்பெயர்வால் திரும்பிய பின்பாக யாழ்.மாநகர சபை முதல்வராக கந்தையன் செல்லையன் இருக்கையில் போரில் பழுதடைந்து கிடந்த மணிக்கூட்டுக் கோபுரத்தை பிரிட்டிஷ் இளவரசர் நிதியால் பழுது பார்க்கப்பட்டு அவரே வந்தும் திறந்து வைத்தார்.

அதற்குப் பின்பாகவும் நடந்தேறிய குண்டு வீச்சுக்களால் பழுதடைந்த கோபுர மணிக்கூடுகள் பலதடவை திருத்தப்பட்டன. பழுதடைந்தன யாழ்ப்பாணப்பகுதிகளில் நிறுவப்பட்ட கோபுர மணிக்கூடுகள் பழுதடைந்தே இருந்து வந்துள்ளன.

மருதனார்மடம் சந்தியிலும் இவ்விதம் ஒன்று காணப்படுகிறது. கடந்த 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் யாழ்.மாநகர சபை நிதியில் இருந்து 9 இலட்சத்து 27 ஆயிரம் ரூபா செலவில் மீண்டும் புனரமைக்கப்பட்டு பொலிவோடு காணப்படுகிறது நமது மணிக்கூட்டுக் கோபுரம்.

இந்தக் கோபுர மணிக்கூடுகளின் சரியான நேரதரிசனமே அயலிலுள்ள பாடசாலைகள், நீதிமன்றம், வைத்தியசாலை, நூலகம், அரச செயலகங்களின் ஒழுங்கான இயங்கியலை நேரப்படி கொண்டு நடத்த போகின்றது. இல்லையே பின்னை...

13) பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

01. ஒரு வண்டியில் 365 பேர் பிரயாணம் செய்தார்கள். முதலாவது நிலையத்தில் 98 பேர் இறங்க 48 பேர் ஏறினார்கள். இப்போது புகைவண்டியினுள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?

..........

02. ஒரு தோடம்பழத்தின் விலை ரூபா 8.50 எனின், நான்கு தோடம்பழங்களின் விலை யாது?

..........

14) பொலித்தீன் பையொன்றில் 25 கிராம் வீதம் ஒன்றரைக் கிலோகிராம் தேயிலையை எத்தனை பொலித்தீன் பைகளில் அடைக்கலாம்?

..........

15) ஒரு பேனாவின் விலை 12.50 படி, ரவி ரூபா 200 ஐக் கொடுத்து 12 பேனாக்கள் வாங்கினான் எனின், கடைக்காரர் ரவிக்குக் கொடுத்த மிகுதிப் பணம் எவ்வளவு?

..........

16) ஒரு பாடசாலையில் கற்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 3000 ஆகும். அதில் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை 2/3 பங்காகும். மிகுதி சிங்கள மாணவர்களாகும். பாடசாலையில் கற்கும் தமிழ் மாணவர்களின் எணிக்கையையும், சிங்கள மாணவர்களின் எண்ணிக்கையையும் தருக.

..........

17) ஒரு குளிர்பானப் போத்தல் ஒன்றின் விலை ரூபா 18.50 எனின், 12 குளிர்பானப் போத்தல்களின் விலை யாது?

..........

18) 1463 ரூபாவை 7 பேருக்குச் சமமாகப் பங்கிடும் போது ஒருவர் பெறும் பணம் எவ்வளவு?


..........

19) விமல் 4 லீற்றர் 850 மில்லிலீற்றர் பெற்றோலையும் கார்த்திக் அதன் 1/2 பங்கு பெற்றோலையும் வாங்கினர். இருவரும் வாங்கிய பெற்றோலின் அளவு யாது?

..........

20) சுருட்டுக. 1/3 + 5/6 ..........

21) ஒரு பலகையில் இடைத்தூரம் 2 cm ஆக இருக்குமாறு ஆணிகள் இறுக்கப்பட்டுள்ளன. ஆணிகளைச் சுற்றி அனுப்பப்படும் றப்பர் பட்டியினால் அமைக்கப்படும் வடிவம் உருவில் காட்டப்பட்டுள்ளது. அவ்வடிவத்தின் பரப்பளவு யாது?



..........

22) 915 புத்தகங்கள் மூன்று பெட்டிகளில் சம எண்ணிக்கையில் அடுக்கப்பட்டுள்ளன. ஒரு பெட்டியில் இருக்கும் புத்தகங்களின் எண்ணிக்கை யாது?

..........

23) “நான் புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கையில் முதலாம் இடத்தைப் பெற வேண்டுமெனப் படித்துக் கொண்டிருக்கின்றேன். நேற்றுப் பாடசாலை விட்டு வீட்டிற்கு வந்த போது எனக்கு ஒரு அதிசயம் காத்திருந்தது. எனது மாமா வெளிநாட்டில் இருந்து வந்திருந்தார்”. தொடர்ந்து கதையை எழுவாய், பயனிலை திருத்தமாக அமைத்து நான்கு சொற்களுக்குக் குறையாத 6 வசனங்கள் எழுதுக:

### கடந்த வெள்ளிக்கிழமை வெளியான பயிற்சி வினாத்தாள் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. 2 | 09. 2 | 15. 3 | 23. 3 | 31. 4 | 39. 3 |
| 02. 1 | 10. 4 | 16. 1 | 24. 1 | 32. 9 | 40. 2 |
| 03. 6 | 11. 2 | 17. 3 | 25. 2 | 33. 25 | |
| 04. 5 | 12. 3 | 18. 3 | 26. 1 | 34. ரூபா 4 | |
| 05. மஞ்சள் | 13. அண்ணன் பிறந்த போது நான் பிறந்திருக்க மாட்டேன். | 19. 1 | 27. 3 | 35. 3 | |
| 06. 3 | | 20. 3 | 28. 3 | 36. 3 | |
| 07. 3 | 14. முக்கோணத்திற்கு நான்கு முகங்கள் இல்லை. | 21. 4 | 29. 4 | 37. 3 | |
| 08. 3 | | 22. 2 | 30. 3 | 38. 4 | |





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - II

1 மணி 15 நிமிட

# கல்வி முரசு



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

01) பின்வரும் விபரணத்தை வாசித்துக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையெழுதுக.

நான் ஒரு மின்னணுச் சாதனம். மனிதனது தேவைகளை நிறைவு செய்ய உருவாக்கப்பட்டவன். நான் நானாக இயங்காது, பிறர் கட்டளைகளுக்கேற்பவே செயற்படுவேன். நான் எவரையும் ஏமாற்றுவதில்லை. ஏளனமாகச் சிரிப்பதில்லை. எனக்குப் பேராசை கிடையாது. எனது பணிகளை நிறைவாகச் செய்வேன். நேரத்தை வீண் விரயமாக்கமாட்டேன். நான் இன்று கல்வி, வணிகம், வங்கி போன்ற பல துறைகளில் முக்கிய பங்காற்றுகின்றேன். நான் உங்களுக்குச் சிறந்த ஆசிரியன். பிறருடைய வேகத்திற்குத் தகுந்தபடி மெதுவாகவும், துரிதமாகவும் கற்றுக்கொள்ள வழிகாட்டுவேன்.

01. பணிகளை நிறைவாகச் செய்வேன் என்ற வாக்கியத்தின் எழுவாய் எது?

..........

02. இங்கு “விரயமாக்குதல்” என்ற சொல்லின் பொருள் யாது?

..........

03. “நிறைவு” என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

..........

04. “கட்டளை” என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

..........

05. “பங்காற்றுகின்றேன்” என்பதை இறந்த காலத்தில் எழுதுக.

..........

06. “ஆசிரியன்” என்பதற்குரிய பெண்பாற் சொல்லை எழுதுக.

..........

07. தன்மை, ஒருமைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக.

..........

08. “ஏமாற்றுவதில்லை” என்பதைப் பிரித்து எழுதுக.

..........

09. “சிரிப்பதில்லை” என்பதன் உடன்பாட்டு வடிவம் யாது?

..........

10. மின்னணுச் சாதனம் பங்காற்றும் முக்கிய துறையினை எழுதுக.

..........

02) பொருத்தமான சொல்லை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து எழுதுக.

01. நாங்கள்..........சென்றோம்.
(சரணலயம், சரணாலயம், சரணாலயம், சரணாழயம்)

02. மக்கள் அக்கிராமத்தை..........கிராமம் என்று அழைத்தனர்.
(பூச்சோலைக், பூஞ்சோலைக், பூஞ்சேலைக், பூஞ்சோளைக்)

03) பின்வரும் தொடர்புகளால் உணர்த்தப்படும் கருத்தினை எழுதுக.

01. கைகொடுத்தல் ..........

02. கிணற்றுத் தவளை போல ..........

**04) பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களில்) எழுதுக.**

1. புத்தகம் .................................... 2. பேனை ....................................

3. ஐந்து .................................... 4. பச்சை ....................................

**05) பின்வரும் தொடர்களின் கருத்தினைத் தமிழில் எழுதுக.**

1. Silence please.................................... 2. Come in....................................

3. Thank you.................................... 4. What is this....................................

**06) பின்வரும் தமிழ்ச் சொற்களின் கருத்தினை சிங்களத்தில் எழுதுக.**

1. அம்மா .................................... 2. கதிரை ....................................

3. மாம்பழம் .................................... 4. அதிபர் ....................................

**07) பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தினை தமிழில் எழுதுக.**

1. பாசல .................................... 2. சதுபா(ட்)ட ....................................

3. கிரி .................................... 4. குருத்துமி ....................................

**08) சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

1. பொருட்களின் அதிர்வினால் உண்டாவது,
   1. வெப்பம் 2. ஒளி 3. ஒலி 4. மின்

2. பனிக்கட்டி நீராக மாறும்போது நடைபெறுவது;
   1. ஆவியாதல் 2. கரைதல் 3. ஒடுங்குதல் 4. உறைதல்

3. இரைமீட்கும் விலங்கு எது?
   1. கிளி 2. பூனை 3. புலி 4. மாடு

4. பறக்கும் பாலூட்டி எது?
   1. வௌவால் 2. கழுகு 3. காகம் 4. பருந்து

5. பக்கவேர்களில் உணவு சேமிக்கும் தாவரம்
   1. கரும்பு 2. கரட் 3. கச்சான் 4. கத்தரி

6. நீரின் மூலம் பரவும் வித்து
   1. முருங்கை 2. தேங்காய் 3. பனை 4. எருக்கலை

7. வெப்பத்தினால் விரிவடையக் கூடியது.
   1. இரும்பு 2. இறப்பர் 3. கல் 4. மண்

8. எமது நாட்டின் பெருந்தோட்டப் பயிர்களில் ஒன்று
   1. கறுவா 2. தேயிலை 3. ஏலம் 4. கராம்பு

9. அண்மையில் நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்ட நாடு?
   1. இலங்கை 2. இங்கிலாந்து 3. இந்தியா 4. பாகிஸ்தான்

10. நிறைபுரத உணவு வகை.
   1. பால் 2. கருவாடு 3. பாண் 4. சோறு

**09) பின்வரும் வீதிக் குறிகள் வெளிப்படுத்துவது யாது என்பதனை அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து அதன் இலக்கத்தை வீதிக் குறிக்கு எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**

 (..........................................)

 (..........................................)

 (..........................................)

 (..........................................)

 (..........................................)

1) வாகனங்கள் நிறுத்துமிடம்
2) சிறுவர்கள் கடக்கும் இடம் முன்னால்
3) பாதசாரிகள் கடக்கும் இடம்
4) ஒலி எழுப்பத் தடை
5) பாதசாரிகள் கடக்குமிடம் முன்னால்
6) பஸ் தரிப்பிடம்



**10) பின்வருவன சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அருகேயுள்ள கூட்டினுள் எழுதுக.**

01. உலகிலேயே மிக நீளமான சுரங்கப்பாதை ஜப்பானில் உள்ளது. ( )

02. உலகில் அதிகமான மக்கள் ஆங்கில மொழியையே பேசுகின்றனர் ( )

03. ஒன்பதாவது உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ளன. ( )

04. முதலில் காகிதத்தை உபயோகித்தவர்கள் சீனர்கள் ( )

05. திமிங்கிலத்தின் வாயில் சுவை நரம்புகள் இல்லை ( )

**11) பின்வரும் சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

(மின்பாரம் தூக்கி, மின்தூக்கி, பாரம்சாம்பி, லூயிபாஸ்டர், குறுக்குத்தையல், சோம்தையல், கிறுக்கல் சித்திரம், கொலாஜ் சித்திரம்)

01. இரேகைகளைப் பயன்படுத்தி எழுந்தமானமாக வரையப்படும் கலைத்துவப் படைப்புக்கள்.................................... எனப்படும்.

02. இரு துணித்துண்டுகளை ஒன்றன் மீது ஒன்று வைத்துத் தைப்பதற்கு எது உதவக் கூடியது. ஆரம்பத் தையல் முறைகளில் ஒன்றாகக் கருதக்கூடியதுமான தையல்....................................தையல் ஆகும்.

03. உயரமான கட்டடங்களிலுள்ள அறைகளுக்குச் செல்ல.................................... உதவும்.

04. பாரமான பொருட்களை உயர்த்துவதற்கு / மேலே கொண்டு செல்வதற்கு / கிணற்றில் இருந்து நீர் இறைக்க .................................... உதவும்.

05. விசர்நாய்க்கடித் தடுப்பு மருந்தைக் கண்டு பிடித்தவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த.................................... ஆவார்.

**12) ஒரு பாடசாலையில் 5A, 5B, 5C எனும் மூன்று வகுப்புக்களில் உள்ள எல்லா மாணவர்களும் 2006 ஆம் ஆண்டு 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றினர். அதற்கான விபரங்கள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. அதன்படி வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

| தரங்கள் | சித்தியடைந்தோர் | | சித்தியடையாதோர் | |
|---|---|---|---|---|
| | ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் | பெண்கள் |
| 5A | 13 | 11 | 9 | 15 |
| 5B | 9 | 8 | 10 | 11 |
| 5C | 15 | 7 | 12 | 9 |

01. மிகக் கூடுதலான பிள்ளைகள் இருந்த வகுப்பு யாது?
....................................

02. 5B வகுப்பில் உள்ள மொத்தப் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?
....................................

03. 5C வகுப்பில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
....................................

04. 2006ஆம் ஆண்டு அந்தப் பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
....................................

ஒரு பாடசாலையில் 4A, 4B, 4C எனும் வகுப்புக்களில் இருந்த பிள்ளைகளின் எண்ணிக்கைகள் முறையே 45, 34, 38 ஆக இருந்தது. மூன்று வகுப்புக்களிலும் இருக்கும் மாணவர்களின் எண்ணிகை ஒரே சமமாக இருப்பதற்கு,

05. 4A வகுப்பில் இருந்து, 4B வகுப்புக்கு எத்தனை பிள்ளைகள் செல்ல வேண்டும்?
....................................

06. 4A வகுப்பில் இருந்து, 4C வகுப்புக்கு எத்தனை பிள்ளைகள் செல்ல வேண்டும்?
....................................

# கௌரவம்



(சிட்னி)

சச்சின் டெண்டுல்கரின் 40ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, அவரது மெழுகுச் சிலை அவுஸ்ரேலியாவின் சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் நேற்று முன்தினம் திறக்கப்பட்டது.

ஒரு நாள் போட்டியில் சதமடித்தபின், இரசிகர்களை நோக்கி துடுப்பை உயர்த்தி காண்பிப்பது போல சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியைக் காண சச்சினின் இரசிகர்கள் மைதானத்துக்கு வந்திருந்தனர். சிலை திறப்பின்போது ரசிகர்கள் கரகோஷம் எழுப்பி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

சச்சின்தனது 40ஆவதுபிறந்த நாளை,நாளை மறுதினம் புதன்கிழமை கொண்டாடவுள்ளார். சிட்னியில் திறக்கப்பட்ட சிலையின் மாதிரி வடிவம் லண்டனின் மேடம் டுசாட்ஸில் உள்ள அருங்காட்சியகத்தில், பிரட்மன் மற்றும் ஷேன் வோர்ன் ஆகியோரின் மெழுகுச் சிலைகளுக்கு அருகே வைக்கப்படவுள்ளது.

# சிம்பாப்வே பெரு வெற்றி



பங்களாதேஷ் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் சிம்பாப்வே அணி 335 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இப்போட்டி சிம்பாப்வேயின் ஹராரே நகரில் நடைபெற்றது. இதில் சிம்பாப்வே அணி முதல் இனிங்ஸில் 152.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 389 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கப்டன் பிரென்டன் டெய்லர் 171 ஓட்டங்களைப் பெற்றார். தொடர்ந்து முதல் இனிங்ஸிற்காக ஆடிய பங்களாதேஷ் அணி 54.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 134 ஓட்டங்களுக்குள் சுருண்டது. பின்னர் 2ஆவது இனிங்ஸிற்காக ஆடிய சிம்பாப்வே அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 227 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இதில் இரண்டாவது இனிங்ஸிலும் கப்டன் டெய்லர் ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களை விளாசினார்.

பதிலுக்கு 482 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சிம்பாப்வே அணி, இரண்டாவது இனிங்ஸிலும் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் சிம்பாப்வே அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 147 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக இரு இனிங்ஸிலும் சதம் பெற்ற சிம்பாப்வே கப்டன் டெய்லர் தெரிவானார்.

# இறுதியில் நடால், ஜோகோவிச்

மொனாக்கோ நாட்டில் நடைபெறும் மான்டி கார்லோ மாஸ்டர்ஸ் ஏடிபி ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டிக்கு நடப்பு சம்பியன் ரபேல் நடால் மற்றும் முதல்நிலை வீரர் ஜோகோவிச் ஆகியோர் தகுதிபெற்றுள்ளனர். மான்டி கார்லோ தொடரில் 2005ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக 8 முறை சம்பியன் பட்டம் வென்று ஆதிக்கம் செலுத்தி வரும் நடால், அரை இறுதியில் பிரான்ஸ் வீரர் ஜோ வில்பிரைட் சோங்காவுடன் நேற்று முன்தினம் மோதினார். இதில் நடால் 6-3, 7-6 (7-3) என்ற நேர் செட்களில் வென்று 9ஆவது முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மற்றொரு அரையிறுதியில் முதல்நிலை வீரர் ஜோகோவிச் இத்தாலியின் பேபியோ பாக்னினியுடன் மோதினார். இதில் ஜோகோவிச் 6-2, 6-1 என்ற நேர் செட்களில் மிக எளிதாக வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

# ஐ.பி.எல். துளிகள்



கொல்கத்தா அணிக்கெதிரானபோட்டியில் நாங்கள்சரியாகத் துடுப்பாடவில்லை. துடுப்பாட்டத்தில் நாங்கள் தொடர்ந்து நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும். எங்களது பந்து வீச்சும், களத்தடுப்பும் நன்றாக இருந்தது. கொல்கத்தா நைட் ரைடர்ஸின் தொடக்கம் (முதல் 6 ஓவர்களில்) அருமையாக அமைந்தாலும், பின்னர் சரிந்த சில விக்கெட்டுகளும், ரன்அவுட்டும் ஆட்டத்தை எங்கள் பக்கம் கொண்டு வந்தது. அத்துடன் ஜடேஜா போட்டியில் திருப்புமுனையை ஏற்படுத்த பேருதவி புரிந்தார் என சென்னை சூப்பர் கிங்ஸ் அணி கப்டன் டோனி தெரிவித்தார்.



சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கெதிரான ஆட்டத்தில் தோல்வி ஏமாற்றம் மிக்கது. உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் பாடசாலை மாணவர்கள்போன்று சில அற்ப தவறுகளை செய்து விட்டோம். மின்னொளியின் கீழ் இந்த ஆடுகளத்தில் ஆடுவது சிறப்பாக இருக்கும்சேனநாயக்கவும்,சுனில்நரைனும் தங்கள் பணிய்யசிறப்பாகச் செய்தனர். என்றாலும் இது போன்ற ஆடுகளத்தில் 119 ஓட்டங்களை எடுத்துக் கொண்டு, அதை வைத்து பந்து வீச்சாளர்கள் வெற்றி தேடித்தருவார்கள் என்றுஎதிர்பார்க்க முடியாது. எங்களைக் குறைந்த ஓட்டங்களில் கட்டுப்படுத்திய சென்னை பந்து வீச்சாளர்களுக்கு எல்லாப் பெருமையும் சேரும் என கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக் கப்டன் கம்பீர் தெரிவித்தார்.



ஜடேஜாவின் ஆட்டத்தில் மிகுந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அவர் சிறந்த மட்ச் வின்னராக உருவாகி வருகிறார். அவர் மீதான நம்பிக்கை அதிகரித்துள்ளது. நம்பிக்கை அளிக்கக் கூடிய வீரராக அவர் உள்ளார். கொல்கத்தாவுக்கு எதிரான இந்த ஆட்டத்தில் திருப்புமுனையை ஏற்படுத்தினார் என சென்னை அணியின் பயிற்சியாளர் ஸ்ரீபன் பிளமிங் தெரிவித்தார்.

# மாற்றம்?

6ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் சென்னையில் நடைபெறும் ஆட்டங்களில் இலங்கை வீரர்கள் பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இலங்கை தமிழர் பிரச்சினையால் எழுந்த எதிர்ப்பைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டது. இலங்கை வீரர்களுக்கு சென்னையில் தடை விதிக்கப்பட்டிருப்பதால் தங்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதாகவும், இதனால் பிளே ஓப் சுற்று ஆட்டங்களை (மே 21, 22) சென்னையில் இருந்து வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என்றும் சில அணியின்உரிமையாளர்கள், ஐ.பி.எல். நிர்வாகத்தை வற்புறுத்தி வருகிறார்கள். இந்த நிலையில் ஐ.பி.எல். ஆட்சிமன்றக் குழுக் கூட்டம் சென்னையில் இன்று நடைபெறவுள்ளது. இதில் பிளேஓப் சுற்று ஆட்டங்களை சென்னையில் இருந்து மாற்றுவது குறித்து ஆலோசித்து முடிவு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. பெரும்பாலும் பிளேஓப் சுற்று ஆட்டங்கள் சென்னையில் இருந்து வேறு இடத்துக்கு மாற்றம் செய்யப்படும் என்று தெரிகிறது.



டில்லி டேர்டெவில்ஸ் அணியின் தூதுவராக மேற்கிந்தியத்தீவின் கிரிக்கெட் ஜாம்பவான் விவியன் ரிச்சர்ட்ஸ் நியமிக்கப்பட்டார். டில்லி டேர்டெவில்ஸ் அணியின் தொப்பி அதன் உரிமையாளரால் நேற்று விவியன் ரிச்சர்ட்ஸுக்கு வழங்கப்படுவதைக் காணலாம்.




சென்னை சூப்பர் கிங்ஸ் எதிர்
ராஜஸ்தான் றோயல்ஸ்
இடம்: சென்னை
மாலை 8.00 மணி

# சேவாக், மஹேல விஸ்வரூபம்; டில்லிக்கு முதல் வெற்றி



(டில்லி)

சேவாக், கப்டன் மஹேல ஜெயவர்த்தன ஆகியோரின் விஸ்வரூபமான துடுப்பாட்டத்தின் மூலம் டில்லி டேர்டெவில்ஸ் அணி தொடர்ந்து தோல்விக்கு முற்றுப்புள்ளிவைத்து முதல் வெற்றியைப் பதிவாக்கிக்கொண்டது.

ஆறாவது ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் 28ஆவது ஆட்டம் நேற்று டில்லியில் நடைபெற்றது. இதில் மும்பை இந்தியன்ஸ் அணியும், டில்லி டேர்டெவில்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய ஆரம்ப வீரர்களாக சச்சின் டெண்டுல்கர், டி.ஆர். ஸ்மித் ஆகியோர் களமிறங்கினர். இதில் எதிர்பார்க்கப்பட்ட ஸ்மித் எட்டு ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து வந்த தினேஷ் கார்த்திக்கும் வந்தவேகத்திலேயே வெளியேற்றப்பட்டார். இந்நிலையில் மும்பை இந்தியன்ஸ் அணி நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது. தொடர்ந்து மூன்றாவது விக்கெட்டுக்காக களமிறங்கிய ரோகித் சர்மா, சச்சினுடன் இணைந்து பொறுப்புடன் ஆடினார். இந்த ஜோடி நெருக்கடியைத் தணிக்கும் வகையில் ஆடியது. அதிரடியாக ஆடி இந்த ஜோடி பவுண்டரிகள், சிக்ஸர்களை விளாசி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்ததுடன் டில்லி பந்து வீச்சாளர்களையும் புரட்டியெடுத்தது. ஒரு வழியாக 96 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இந்த ஜோடி பிரிக்கப்பட்டது. தொடர்ந்து நான்காவது விக்கெட்டுக்காக களமிறங்கிய போலார்ட் ரோகித் சர்மாவிற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் ஆடினார். மறுமுனையில் அதிரடியில் கலக்கிய ரோகித் சர்மா இரசிகர்களை ஆனந்த மழையில் நனயவைத்தார். இறுதியில் மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரோகித் சர்மா 43 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து சிக்ஸர்கள், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 73, சச்சின் டெண்டுல்கர் 47 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், மூன்று பவுண்டரிகள் அடங்கலாக 54 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது போலார்ட் 10 பந்துகளில் ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரி அடங்கலாக 19 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் உமேஷ் யாதவ் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 162 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் டில்லி டேர்டெவில்ஸ் அணி களமிறங்கியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் கமிறங்கிய கப்டன் மஹேல ஜெயவர்த்தன, சேவாக் ஜோடி முதல் வெற்றியைப் பதிவாக்கும் முனைப்புடன் ஆடியது. தொடர் தோல்விகளால் அவமானப்பட்ட வலியை வெளிப்படுத்தும் வகையில் இந்த ஜோடி களத்தில் பவுண்டரிகளைப் பறக்கவிட்டது. இந்த ஜோடியின் ஆட்டத்தால் திண்டாடிய மும்பை இந்தியன்ஸ் அணிக் கப்டன் பொண்டிங் களவியூகத்தையும் பந்து வீச்சாளர்களையும் மாற்றியமைத்தபோதும் ஓட்டவேகத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தொடர்ந்து அதிரடியில் விஸ்வரூபமெடுத்த இந்த ஜோடி ஆட்டத்தின் போக்கை தமது கையில் எடுத்து அதிரடியில் அசத்தியது. ஒரு வழியாக இந்த ஜோடி 151 ஓட்டங்களை இணை ப்பாட்டமாகப் பெற்றவேளை (மஹேல) மலிங்கவினால் இறுதி நேரத்தில் பிரிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய டேவிட் வோனர் சேவாக்குடன் இணைந்து வெற்றியை உறுதி செய்தார். இறுதியில் டில்லி டேர்டெவில்ஸ் அணி 17 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சேவாக் 57 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், 13 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 95 ஓட்டங்களைப் பெற்றார். இதன் மூலம் ஆறாவது ஐ.பி.எல். தொடரில் ஒரு இனிங்ஸில் அதிக ஓட்ட எண்ணிக்கையைப் பெற்ற வீரர் என்ற சிறப்பை சேவாக் பெற்றுக்கொண்டார். மஹேல ஜெயவர்த்தன 43 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 59 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். ஆட்டநாயகனாக சேவாக் தெரிவானார்.



# குற்றவாளிகளுக்கு மரணதண்டனை; தாய்வானில் நிறைவேற்றம்



கடந்த நான்கு மாதங்களுக்குள் இரண்டாவது முறையாக தாய்வான் அரசு 6 குற்றவாளிகளுக்கு மரண தண்டனை தீர்ப்பளித்து அதனை நிறைவேற்றியுள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டில், தாய்வானின் நீதித் துறை அமைச்சராக செங்யன்க்பூ பதவியேற்றார். அதன் பின்னர் நான்கு முறை மரண தண்டனைகள் மொத்தமாக நிறைவேற்றப்பட்டுள்ளன. மரண தண்டனை அளிக்கப்பட்ட குற்றவாளிகளை சுட்டுக் கொல்வது தாய்வானின் வழக்கமாகும்.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் தாய்வானின் நான்கு நகரங்களின் சிறையில் இருந்த 6 குற்றவாளிகளுக்கு மரணதண்டனை விதித்தார். கடந்த வெள்ளிக்கிழமை அன்று இரவு இத்தண்டனை நிறைவேற்றப்பட்டதாக நீதித்துறை, செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக் குற்றவாளிகள் பல்வேறு கொலைகளில் ஈடுபட்டவர்கள் என்றும், இத்தகைய குற்றங்கள் தடுக்கப்பட வேண்டும் என்ற பொதுமக்களின் வேணடுகோளுக்கு இணங்கியே இந்த முடிவுகள் எடுக்கப்பட்டதாகவும் நீதித்துறையின் துணை அமைச்சர் செங்மிங்டங் தெரிவித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி 6 மரணதண்டனைகள் ஒன்றாக நிறைவேற்றப்பட்டன. தற்போது நான்கு மாதங்களுக்குள் இரண்டாவது முறையாக 6 பேர் ஒன்றாக சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# அணு ஆயுதத்தை கைவிடமாட்டோம்; வடகொரியா திட்டவட்ட அறிவிப்பு



(வடகொரியா)

எந்தச் சூழ்நிலையிலும் அணு ஆயுதத்தைக் கைவிடமாட்டோம், ஆயுதக் குறைப்பு குறித்து வேண்டுமானால் பேச்சு நடத்தத் தயார் என்று வடகொரியா அறிவித்துள்ளது.

தென்கொரியா, அமெரிக்காவுக்கு எதிராக போர் நடத்த வடகொரியா தயாராகி வருவதால் கொரிய தீபகற்பப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவி வருகிறது. ஏற்கெனவே அணு ஆயுதங்களை வைத்துள்ள வடகொரியா சமீபத்தில் மீண்டும் அணு ஆயுத சோதனையை மேற்கொண்டு தனது அணு ஆயுத வலிமையை அதிகரித்துக் கொண்டுள்ளது. அந்நாடு அணு ஆயுதத்தைப் பயன்படுத்தினால் பேரழிவு ஏற்படும் என்ற அச்சமும் நிலவிவருகிறது.

இதனிடையே பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள பேச்சு நடத்த வேண்டுமென்று சீனா உள்ளிட்ட வடகொரியாவின் நட்பு நாடுகள் மூலம் அந்நாட்டிடம் சர்வதேச அளவில் வலியுறுத்தப்பட்டது.

இதையடுத்து, அமெரிக்காவின் வலியுறுத்தலால் தங்கள் நாட்டுக்கு எதிராக ஐ.நா.விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை முற்றிலுமாக நீக்க வேண்டும். தென் கொரியாவும், அமெரிக்காவும் இணைந்து நடத்தும் போர்ப் பயிற்சியை நிறுத்த வேண்டுமென்று வடகொரியா கூறியது. ஆனால் அந்த இரு நாடுகளும் இதனை நிராகரித்தன.

இந்நிலையில் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பாக அந்நாட்டின் முக்கிய நாளிதழ் ஒன்றில் கடந்த சனிக்கிழமை செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அதில், ஆயுதங்களைக் குறைத்துக் கொள்வது தொடர்பாக அமெரிக்காவுடன் எத்தனை முறை வேண்டுமானாலும் பேச வடகொரியா தயாராக இருக்கிறது. ஆனால் அணு ஆயுதங்களை எந்த சூழ்நிலையிலும் கைவிடமாட்டோம்.

இது பற்றி பேசுவதற்கும் முன்வர மாட்டோம். இந்த விடயத்தில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம். உலகத்தில் உள்ள அனைத்து நாடுகளும் எப்போது அணு ஆயுதங்களைக் கைவிடுகின்றனவோ, அப்போது வடகொரியாவும் அணு ஆயுதங்களைக் கைவிடும் என்று வடகொரியா தெரிவித்துள்ளது.

# இத்தாலியின் பிரதமர் தேர்தலில் மீண்டும் நபோலிடானோவே தெரிவு

(றோம்)

இத்தாலியில் அதிபருக்கான தேர்தல் கடந்த பெப்ரவரி மாதம் நடந்தது. இதில் முடிவற்ற நிலை உருவானதையடுத்து அங்கு காபந்து அரசு அமைந்தது.

இந்த அரசியல் நெருக்கடியைத் தொடர்ந்து ஐரோப்பாவின் பொருளாதாரத்தில் மூன்றாவது பெரிய நாடாக விளங்கும் இத்தாலி பெரும் பின்னடைவைச் சந்தித்து வருகிறது.

இந்நிலையில், அதிபரைத் தேர்வு செய்வதற்காக நடைபெற்ற ஐந்து கட்ட வாக்கெடுப்புகள் தோல்வியில் முடிவடைந்தன. அதனைத் தொடர்ந்து நாட்டில் நிலவும் பிரச்சினைகளைச் சமாளிக்க மீண்டும் அதிபராக இடது சாரி ஜனநாயகக் கட்சியின் ஜியார்ஜியோ நபோலிடானோவே (வயது - 85) வர வேண்டும் என்று கட்சிகள் வேண்டுகோள் விடுத்தன.

இதனையடுத்து ஆட்சி அமைப்பதற்குத் தேவையான 504 வாக்குகளைப் பெற்று மீண்டும் அதிபராக ஜியார்ஜியோ நபோலிடானோ தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இத்தாலி வரலாற்றி லேயே ஒருவர் இரண்டாவது முறையாக அதிபராகத் தேர்ந்தெடுப்பது இதுவே முதல் முறையாகும்.



ரோக்கியோ நகரில் நடைபெற்ற விழாவில் பங்கேற்ற ஜப்பான் பிரதமர் ஷின்சோ ஆபே, பொப் இசைக்குழுவினருடன் உற்சாக போஸ் கொடுத்தார்.

# முஷாரப்பை காவலில் வைக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு



பாகிஸ்தான் முன்னாள் அதிபர் முஷாரப்பை 14 நாள் நீதிமன்றக் காவலில் வைக்க,இஸ்லாமாபாத் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

பாகிஸ்தான் அதிபராக இருந்த, பர்வேஷ் முஷாரப், தன் ஆட்சிக் காலத்தில் நெருக்கடி நிலையை பிரகடனம் செய்தார். அப்போது மேல் நீதிமன்ற தலைமை நீதிபதி உட்பட, 60 நீதிபதிகளை பதவி நீக்கம் செய்து, அவர்களை சிறைவைத்தார்.

இந்த வழக்கு, நிலுவையில் இருந்தது. பாகிஸ்தானில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதை அடுத்து கடந்த நான்கு ஆண்டுகளாக வெளிநாடுகளில் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வந்த முஷாரப், சமீபத்தில் நாடு திரும்பினார்.

இந்த நிலையில், நீதிபதிகளை சிறைவைத்த வழக்கில், அவரைக் கைது செய்ய இஸ்லாமாபாத் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதையடுத்து, கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட முஷாரப் வீட்டு சிறையில் அடைக்கப்பட்டார். நேற்று முன்தினம் அவர் இஸ்லாமாபாத்தில் உள்ள பயங்கரவாத எதிர்ப்பு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்.

அப்போது, அவரை, 14 நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனாலும் அவரை சிறையில் அடைக்காமல் இஸ்லாமாபாத்தில் உள்ள அவரது பண்ணை வீட்டிலேயே வீட்டு சிறையில் வைத்துள்ளனர்.

# 1200 ஒளி ஆண்டு தூரத்தில் பூமியைப் போன்ற 2 கிரகங்கள்

பூமியிலிருந்து 1200 ஒளி ஆண்டுகள் தூரத்தில் பூமியைப் போன்ற இரு புதிய கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் மனிதர்கள் வாழ்வதற்கான சாத்தியங்கள் அதிகம் உள்ளதாகத் தெரியவந்துள்ளது. அமெரிக்காவின் நாஸா மையம் விண்வெளி குறித்து ஆய்வு மேற்கொள்ள கெப்லர் 62 எனும் விண் கலத்தை அனுப்பியுள்ளது.

அதில் பொருத்தப்பட்டுள்ள அதிசக்தி வாய்ந்த ரெலஸ்கோப் விண்வெளியைத் துல்லியமாக படம் எடுத்து பூமிக்கு அனுப்பி வருகிறது. இந்த நிலையில் சமீபத்தில் அனுப்பி வைத்துள்ள போட்டோவில் பூமியைப் போன்று 2 கிரகங்கள் உள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அவற்றில் பாறைகள், கடல்கள் மற்றும் ஈரத் தன்மையுள்ள காற்று போன்றவை தெரிய வந்துள்ளது. இந்தக் கிரகங்களில் நீர் இருப்பது கூட தெளிவாகத் தெரிகிறது. எனவே, இவை மனிதர்கள் வாழ முற்றிலும் தகுதியானவை என்ற முடிவுக்கு வந்துள்ளனர் விண்வெளி அறிஞர்கள்.

இந்தக் கிரகங்கள் புதன் கிரகத்தில் இருந்து 3 கோடியே 70 இலட்சம் கி.மீற்றர் தூரத்திலும், வியாழன் கிரகத்தில் இருந்து 6 கோடியே 50 இலட்சம் கி.மீற்றர் தூரத்திலும் உள்ளன. மேலும்,



அங்கு உயிரினங்கள் வாழத் தகுதியுடைய தட்ப வெப்ப நிலை நிலவுவதாகவும் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

சூரியனை விடச் சிறியதாகவும், மங்கலாகவும் அவை காணப்படுகின்றன. இந்த 2 புதிய கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டது குறித்து கெப்லர் விண்கல ஆய்வுத் திட்டத் தலைவர் வில்லியம் போருக்கு மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். கெப்லர் ரெலஸ்கோப் கண்டுபிடித்துள்ள பல கிரகங் களில் இது மிகவும் பயனுள்ளது என்றார்.

# ஆசிரியர் பதவி உயர்வு சுற்றறிக்கை இரத்துச் செய்தது கல்வியமைச்சு

இலங்கை ஆசிரியர் சேவை உள்ளீர்ப்பு மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பான 2010/38 ஆம் இலக்கமிடப்பட்ட சுற்றறிக்கையை கல்வி அமைச்சு இரத்துச் செய்துள்ளதாக அமைச்சின் செயலாளர் எஸ்.எம்.கோதாபய ஜயரட்ன அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக சகல மாகாண, வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

2010/38 ஆம் இலக்க ஆசிரியர் சேவை பதவி உயர்வு தொடர்பாக முன்னாள் கல்விச் செயலாளரால் சுற்றறிக்கை தயாரிக்கப்பட்ட போதும் அதில் சில குறைபாடுகள் காணப்பட்டமையால் அச் சுற்றறிக்கை உத்தியோகபூர்வமாக அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்படவில்லை.

ஆனால், இச் சுற்றறிக்கை அமைச்சுக்குள் இருந்த சிலரால் மோசடியான முறையில் பிரதியாக்கம் பண்ணப்பட்டு கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று பதவி உயர்வு தொடர்பான 2005 04 ஆம் இலக்க சுற்று நிருபத்துக்கான ஆலோசனைக் கோவை 02 எனக் குறிப்பிட்ட கடிதமொன்றும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அவ்வாலோசனைக் கடிதமும் அமைச்சுச் செயலாளரின் ஒப்பமின்றி அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, 2010 38 ஆம் இலக்க சுற்று நிருபம் இரத்துச் செய்யப்படுவதுடன் 2005 04 ஆம் இலக்க சுற்று நிருபத்தை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்ட ஆலோசனைக் கடிதமும் இரத்துச் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இவற்றை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்ட பதவி உயர்வுகளும இரத்துச் செய்யப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஒரு பயணியின் போர்க்காலக் குறிப்புகள் கவிதை நூல் அறிமுக விழா



கவிஞர் கருணாகரனின் "ஒரு பயணியின் போர்க்காலக் குறிப்புகள்" என்ற கவிதை நூல் அறிமுக நிகழ்வு நேற்றுக் காலை 10.30 மணிக்கு இமையாணன் நியூபிறைற் கல்வி நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. மூத்த எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் நூல் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத்துறை விரிவுரையாளர் கந்தையா சிறீகணேசன் நிகழ்த்தினார். நூலின் அறிமுகப் பிரதியை ஆறுமுகத்திற்கு நிலாந்தன் வழங்கினார். சாட்சியுரையை கவிஞர் தானா விஷ்ணுவும், ஏற்புரையை நூலாசிரியர் கவிஞர் கருணாகரனும் நிகழ்த்தினர். கலை இலக்கிய சஞ்சிகையினால் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி நிகழ்வில் நன்றியுரையை கவிஞர் யாத்திரிகன் நிகழ்த்தினார். (17)

# பாம்புக்கடிக்கு இலக்கான குடும்பஸ்தர் வைத்தியசாலையில்

(கரவெட்டி)

கரவெட்டியில் குடும்பஸ்தர் ஒருவர் பாம்பு தீண்டி மயக்க முற்ற நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாரதர் வித்தியாலய வீதி கரவெட்டியைச் சேர்ந்த மனோகரன் (வயது-40) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே பாம்புக்கடிக்கு இலக்கானவராவார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு படுக்கையில் இருந்த இவர் மீது வயிற்றுப் பகுதியில் பாம்பு தீண்டியுள்ளது. உடனடியாக அவர் பாம்பைத் தனது கையால் பிடித்தவேளை அது அவரது கையைத் தீண்டியுள்ளது. உடனடியாக பாம்பை வெளியில் அவர் எறிந்த பின்னர் மயக்கமடைந்துள்ளார்.

உடனடியாகவே அவர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் நேற்றுவரை மயக்கம் தெளியாத நிலையில் காணப்பட்டார். (18)

# அரச இலக்கிய விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

கலாசார திணைக்களத்தினால் வருடந்தோறும் வழங்கப்படும் அரச இலக்கிய விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் தெரிவித்தார்.

இதனடிப்படையில் 2012 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுயநாவல் இலக்கிய நூல்கள், மொழிபெயர்ப்பு நாவல் இலக்கிய நூலகள், சுய சிறுகதை இலக்கிய நூல்கள், மொழிபெயர்ப்பு சிறுகதை இலக்கிய நூல்கள், சுய நானாவித இலக்கிய நூல்கள், மொழிபெயர்ப்பு நானாவித இலக்கிய நூல்கள், சுயநாடக இலக்கிய நூல்கள், மொழிபெயர்ப்பு இலக்கிய நூல்கள், இளையோர் நாவல்கள், சிறுவர் இலக்கியம், கவிதை, கவிதை வடிவ இலக்கியம், அறிவியல் புனைக்கதை போன்ற ஆக்க நூல்கள் விண்ணப்பத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளதுடன் பிரதேச செயலகங்களில் கலாசார உத்தியோகத்தருடன் தொடர்புகொண்டு விண்ணப்பங்களை பூர்த்திசெய்து நூலின் 3 பிரதிகளுடன் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளார். (160)

# கால்பந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டம் இன்று

இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகம் நடாத்தும் 7 பேர கொண்ட கால்பந்தாட்டப் போடடியின் முதலாவது அரையிறுதி ஆட்டம் இன்று மாலை 4.00 மணிக்கு விளையாட்டுக் கழக மைதானத்தில் நவாலி சென்பீற்றர் - உரும்பிராய் திருக்குமரன் அணிகளுக்கு இடையே நடைபெறவுள்ளது. இரண்டாவது ஆட்டம் நாளைய தினம் மாலை 4.00 மணிக்கு உரும்பிராய் உதயசூரியன் - மானிப்பாய் நெட்றேஞ்சர் அணிகளுக்கு இடையே நடைபெறவுள்ளது. (93,120)

## வடக்கில் நில...

களைக்கொண்டு நடத்தவுள்ள தாக முன்னணி அறிவித்திருக்கின்றது. இது தொடர்பில் முன்னணி நேற்று மாலை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

கடந்த மாதம் அரசாங்கத்தின் காணி அமைச்சர் யாழ்ப்பாணத்தில் காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான விசேட அலுவலகம் ஒன்றினை திறந்து வைத்திருந்தார்.

அதன் பின்னராக யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தின் பல்வேறு படையணிகளுக்காக அலுவலகங்களையும், தளங்களையும் நிரந்தரமாக்குவதற்காக தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை சுவீகரிப்பதற்காக காணிச் சுவீகரிப்புச் சட்டத்தில் பிரிவு 2 இன் கீழான அறிவித்தல்கள் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் ஒட்டப்பட்டு வருகின்றது.

இதன் காரணமாக வலிகாமம் வடக்கு உட்பட குடாநாட்டின் பல பகுதிகளிலுமிருந்து கடந்த 20 ஆண்டுகளாக இடம்பெயர்ந்து வாழும 30,000 இற்கும் அதிகமான மக்கள் நிரந்தரமாக தமது வாழ்விடங்களை இழக்கும் நிலை தோன்றியுள்ளது.

மேற்படி காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய அனைத்து மாவட்டங்களிலும் தீவிரமாக நடைபெறுகின்றது. ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டில் இராணுவக் குறைப்பு நடவடிக்கையில் தாம் ஈடுபடுவது போல பாசாங்கு காட்டிவரும் அரசு மறுபுறத்தில் தமிழர்களுக்குச் சொந்தமான நில அபகரிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினால் தமிழ் மக்களுக்கு எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை.

இந் நிலச் சுவீகரிப்பு நடவடிக்கையை உடன் நிறுத்தக் கோரியும், இடம்பெயர்ந்து வாழும் வலி. வடக்கு உட்பட்ட அனைத்து மக்களையும் உடன் மீள் குடியமர அனுமதிக்கக் கோரியும், இவ்விடயத்தில் சர்வதேச கவனத்தை ஈர்க்கும் முகமாகவும் எதிர்ப்புப் போராட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வலி. வடக்கு உள்ளிட்ட பாதிக்கப்பட்ட மக்களது வேண்டுகோளின் அடிப்படையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் மேற்படி போராட்டம் ஏற்பாடு செய்யப்படுகின்றது. இப்போராட்டத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கில்...

அபகரிப்பு, மக்கள் மீதான தாக்குதல்கள், சோதனை நடவடிக்கைகள், ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் இன்னும் முற்றுப்பெறவில்லை. இராணுவத்தின் அராஜகங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன. சிவில் உடையில் வரும் இராணுவக் குண்டர்கள் மக்கள் மீதும், ஊடக நிறுவனங்கள் மீதும் தொடர்ச்சியாகத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். ஒட்டுமொத்தத்தில் வடக்கில் அரசாங்கத்தின் அனுமதியுடன் இராணுவத்தின் காட்டாட்சி நிலவுகின்றது.

இந்நிலையில், இன்னும் சில தினங்களில் தமிழ் மக்களை பிரதேச ரீதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்து விழிப்புணர்வு பிரசாரங்களை முன்னெடுக்கவுள்ளனர். அத்துடன் வடக்கில் இராணுவத்தினரைப் பயன்படுத்தி அரசாங்கம் மேற்கொண்டு வரும் அராஜகங்களைக் கண்டித்து மாபெரும் போராட்டங்களை நடத்துவதற்கு ஏதுவாக ஜனநாயக இயக்கம் ஒன்றை அமைக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கியே இந்த இயக்கம் அமைக்கப்படவுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் அமைக்கப்படும் இந்த இயக்கம் மக்களை அணிதிரட்டி அரசாங்கத்துக்கு எதிராக மாபெரும் ஜனநாயகப் போராட்டங்களை நடத்தும். அத்துடன் அரசாங்கத்தினதும், இராணுவத்தினரதும் அராஜகங்களை இந்த இயக்கமானது சர்வதேசத்தின் கவனத்திற்கும் கொண்டு செல்லும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மேலும் தெரிவித்தார்.

## இலங்கையில்...

நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படவில்லை.

எனினும், இந்த அமர்வுகளை இலங்கையில் நடாத்துவதா இல்லையா என்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

வேறும் விடயங்கள் என்ற வகையீட்டுக்குள் இலங்கை அமர்வு குறித்து கலந்தாலோசிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறெனினும், இலங்கையில் அமர்வுகளை நடாத்தக் கூடாது என இதுவரையில் எந்தவொரு நாடும் உத்தியோகபூர்வமாக கோரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இணையத்தள...

செயற்பட்டால் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான இயலுமை தோன்றும் விமர்சனங்கள் குறித்து அச்சமடையாமல் மனதுக்கு நேர்மையாக மக்களுக்கு சேவையாற்றுங்கள்.

இவ்வாறான விமர்சனங்களை நீங்கள் பொருட்படுத்தாது மக்களுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள் என நான் நம்புகிறேன் எனத் தெரிவித்தார் ஜனாதிபதி.

## ஆஸி. செல்ல...

சிறுவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேலதிக விசாரணைகளுக்காக அவர்கள் காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## நாட்டை...

தகவல்கள் வெளியாகியிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து இடைக்கால நிர்வாக சபையொன்றை அமைக்க இந்தியா ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனக் கோரியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், இவ்வாறான எந்தவொரு கோரிக்கையையும் தாம் முன்வைக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். தமது நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் சில ஊடகங் களில் இவ்வாறான கருத்துக்கள் வெளியிடப்பட்டிருந்ததாகவும், இந்தத் தகவல்களில் உண்மையில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இனந்தெரியாத...

நாசமாகியுள்ளன.

திருமதி செந்தூரன் நிலோஜனா என்ற 27 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் விதவைத் தாயின் வீடும், திருமதி தங்கமணி, திருமதி சுரேஸ்குமார் சுமங்கலி, செல்லத்தம்பி முகுந்தன் ஆகியோரது வீடுகளே எரிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நடைபெற்று வீடுகள் எரிந்தவேளை பொலிஸாரின் அவசர அழைப்பு இலக்கமான 119 என்ற தொலைபேசி இலக்கத்திற்குப் பலமுறை அழைத்தபோதிலும் பொலிஸாரிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதனை அடுத்து சம்பவம் நடைபெற்ற பகுதியில் நேற்றுப் பகல் இரண்டு பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டனர். (04,125)

# சம்பள உயர்விற்குப் போராட்டம்; மனோகணேசன் மீது தாக்குதல்

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை வலியுறுத்தி போராட்டம் நடத்த முற்பட்ட 16 தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் மீது சிலர் நடத்திய தாக்குதலில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் உள்ளிட்ட மூவர் காயமடைந்துள்ளனர்.



கொட்டகலை நகரில் நேற்று முற்பகல் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கான அண்மைய சம்பள ஒப்பந்தத்தை எதிர்த்து, 16 தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு நேற்று போராட்டம் நடத்த நடவடிக்கை எடுத்திருந்தது.

ஆனால் இந்தக் கூட்டமைப்புக்கு எதிராக இன்னொரு குழுவொன்று கொட்டகலை நகரில் போராட்டம் நடத்த முனைந்ததாகவும், அந்தக் குழுவினர் தம் மீது கற்களை வீசித் தாக்குதல் நடத்தியதாகவும் தாக்குதலில் காயமடைந்த தான் உள்ளிட்ட மூன்று பேர் கொட்டகலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளதா கவும் மனோகணேசன் கூறினார்.

இதேவேளை, கொட்டகலையில் நடந்த தாக்குதல் காரணமாக தமது போராட்டம் இறுதியில் பத்தனை நகரில் நடத்தப்பட்டதாகவும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் மேலும் தெரிவித்தார்.

# கிங்ஸ்லெவன் பஞ்சாபிடம் வீழ்ந்தது புனேவாரியர்ஸ்



(மொகாலி)

புனேவாரியர்ஸின் இலக்கை விரட்டிய கிங்ஸ்லெவன் பஞ்சாப் அணி, 19.5 ஓவரில் 7விக்கெட்டுக்களால் "த்ரில்" வெற்றிபெற்றது.

மொகாலியில் நடைபெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிங்ஸ் லெவன் பஞ்சாப் களத்தடுப்பை தீர்மானித்தது. இதனையடுத்து துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய புனேவாரியர்ஸின் உத்தப்பா, பிஞ்ச் இணை, அணிக்கு நல்ல அடித்தளத்தை இட்டது. அணி 83 ஓட்டங்கள் பெற்றிருக்கையில் உத்தப்பா (37) ஆட்டமிழக்க பின்னர் வந்த யுவராஜ் சிறப்பாக விளையாடினார். இறுதியில் புனேவாரியர்ஸ் 4 விக்கெட்டுக்களை இழந்து 185 ஓட்டங்களைக் குவித்து இதில் பிஞ்ச் 64, யுவராஜ் 34, வைற் 34 ஓட்டங்களைப்பெற்றனர்.

பந்து வீச்சில் அசார் மகமூட் 2, ஆவன்னா,கோனி, தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

தொடர்ந்து 186 என்ற வெற்றி இலக்கை துரத்திய பஞ்சாப் இற்கு ஆரம்பமே சறுக்கலாக அமைந்தது. வழக்கம் போல கில்கிறிஸ்ட் 4 ஓட்டங்களுடன் வெறியேற அடுத்து வந்த அசார் மகமூட்டும் டக் அவுட்டானார். எனினும் மன்டீப் சிங்குடன் இணைந்த வோக்ரா சிறப்பாக ஆடியபோதிலும் அவரும் 22 ஓட்டங்களுடன் வெளியேறினார். பின்னர் மன்டீப் சிங்குடன் இணைந்த மில்லர் அதிரடியாக ஆடி அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றார். இறுதியில் பஞ்சாப் அணி 19.5 ஓவரில் 186 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டால் வெற்றி பெற்றது. இதில் ஆட்டமிழக்காமல் மில்லர் 41 பந்தில் 5சிக்ஸர், 5 பவுண்டரி அடங்கலாக 80, மன்டீப்சிங் 58பந்தில்7 பவுண்டரி அடங்கலாக 77 ஓட்டங்களைப்பெற்றனர்.

பந்து வீச்சில் பிரவீன்குமார் மென்டிஸ், யுவராஜ்சிங் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர். ஆட்டநாயகனாக மில்லர் தெரிவானார்.

# இலங்கையில் கதிர்வீச்சு ஆய்வு செய்யும் அதிகாரசபை

இலங்கையின் தரைப்பரப்பில் ஏதாவது கதிர்வீச்சு காணப்படுகின்றதா? என்பது தொடர்பில் அணுமின் சக்தி அதிகாரசபை நாடளாவிய ரீதியில் ஆய்வு ஒன்றை மேற்கொண்டுள்ளது.

கூடங்குளம் அணுசக்தி நிலையத்திலிருந்து கசிவு ஏற்படுமாயின் அதை கண்டுபிடிக்க ஏதுவாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளதாக அதிகார சபையின் தலைவர் கலாநிதி ரஞ்சித் விஜயவர்தன தெரிவித்தார்.

தகவல்களை அறிந்துகொள்ள இது ஒரு முன்னேற்பாடான, செயல் ஏனெனில் கூடங்குளம் அணுமின்சக்தி நிலையத்திலிருந்து கசிவு ஏற்படுவதற்கு வாய்ப்பு இருப்பதாக வெளியான செய்திகளின் படி இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

# மாணவருக்கு பால் வழங்குவதற்கு 40கோடி ஒதுக்கக் கோரிக்கை

கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திசாநாயக்கா, அமைச்சரவைக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்து, பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக பால் வழங்குவதற்காக ரூபா 40 கோடி (40,31,85,600) பணத்தொகையை ஒதுக்குமாறு வேண்டியுள்ளார்.

முதல் கட்டமாக 1,143பாடசாலைகளிலுள்ள 2,23,992 மாணவர்களுக்கு ஆளுக்கு ஒரு பாற்குவளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் பாடசாலை சுகாதார மேம்பாட்டு குழுவினரின் ஒத்துழைப்புடனும் மேற்பார்வையுடனும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும், அதற்காக சுகாதாரப் பிரிவினரின் உதவியும் பெற்றுக் கொள்ளப்படும்.

தெரிவு செய்யப்படுகின்ற பாடசாலைகளிலுள்ள ஒவ்வொரு மாணவருக்கும் தினந்தோறும் 150 மில்லி லீற்றர் பால் வழங்கப்படும். இதற்காக அரசாங்கம் மாணவரொருவருக்கு ரூபா 60 ஐச் செலவிட வேண்டியேற்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

# சவுதியில் நிர்க்கதியானோர் அடுத்த வாரம் இலங்கைக்கு

சவுதி அரேபியாவில் நிர்க்கதிக்குள்ளான இலங்கைப் பணியாளர்களை விரைவில் அழைத்துவரவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

குறித்த பணியாளர்களை இலங்கைக்கு அழைத்துவர சவுதி அரேபிய அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாக பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் மங்கள ரந்தெனிய குறிப்பிட்டார்.

சவுதி அரேபியாவில் நிர்க்கதிக்குள்ளான சுமார் 6000 இலங்கையர்கள் இருக்கின்றமை தெரியவந்துள்ளது.

அவர்களை அடுத்த வாரம் முதற்கட்டமாக இலங்கைக்கு அழைத்துவர உத்தேசித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

தொழில்களை இழந்து அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ள பணியாளர்கள் தொடர்பில் மாத்திரம் விசேட கவனம் செலுத்த பணியகம் தீர்மானித்துள்ளது.

நிர்க்கதிக்குள்ளானவர்கள் தாம் பணியாற்றிய இடத்திலிருந்து தப்பிச்சென்று வேறு தொழில்களில் ஈடுபட்டமையால் சவுதி அரேபியாவில் வாழும் சட்டவிரோத குடியேற்றவாசிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

# அரச மருந்தகங்களில் மட்டும் இருமலுக்கான பாணி மருந்து

போதை மருந்தாகப் பயன்படுத்தப்பட்ட இருமலுக்கான பாணி மருந்து வகைகளை எதிர்காலத்தில் அரச மருந்தகங்களில் மாத்திரம் விநியோகிப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதேவேளை, மருத்துவரின் சிபாரிசுக்கு அமைவாக மாத்திரமே இருமலுக்கான மருந்து வகைகளை விநியோகிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தவறான நோக்கங்களுக்காக இருமல் மருந்துகள் பயன்படுத்தப்பட்டமை குறித்து தகவல்கள் கிடைக்கப்பெற்ற பின்னர் குழுவொன்றினால் இது குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

அவர்களின் தீர்மானத்திற்கமையவே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக வாசனைத் திரவியங்கள் மற்றும் மருந்து ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் டாக்டர் ஹேமந்த பெனரகம குறிப்பிட்டார்.

அண்மையில் பாகிஸ்தானில் ஒருவகை பாணி மருந்தை உட்கொண்டதால் சுமார் 70 பேர் உயிரிழந்தமை மற்றும் உள்நாட்டில் இருவர் உயிரிழந்த சம்பவம் போன்றவற்றைக் கருத்திற்கொண்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒரு சில பாணி மருந்துகளை விநியோகிக்கும் உரிமையை மாத்திரம் வழங்கி ஏனையவற்றை பாவனையிலிருந்து நீக்குவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

# மாரடைப்பு ஏற்படுபவர்கள் அண்மைக்காலமாக அதிகரிப்பு

## – நாள்தோறும் 20 பேர் மரணம்

கடந்த மூன்று,நான்கு மாதங்களில் இலங்கையில் மாரடைப்பு ஏற்படுபவர்களின் தொகை கணிசமான அளவு உயர்ந்துள்ளது என சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கேற்ப, இலங்கையில் மரணத்தை ஏற்படுத்தும் நோய்களுள் முதன்மையான நோயாக மாரடைப்பு உள்ளது எனத்தெரிவிக்கப்படுகின்றது. ஒருநாளைக்கு மாரடைப்புக்காக சிகிச்சை பெற வருபவர்களின் தொகை 620 ஐ எட்டுகின்றது. மாதாந்தம் 18,600 ஆகவும் வருடத்திற்கு இரண்டு இலட்சத்து இருபத்து மூன்றாயிரத்து இருநூறு பேர் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறுவதற்காக வருவதாகவும் தெரியவந்துள்ளது.

இதில், 20பேர் தினந்தோறும் இறக்கின்றனர். மாதத்திற்கு 600 பேர், வருடாந்தம் 7000 இற்கு மேற்பட்டோரின் உயிரைக் காவு கொள்ளக்கூடியதாக மாரடைப்பு முன்னணியில் நிற்கிறது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கேற்ப, இலங்கையரில் அதிகமானோர் மரணத்தைத் தழுவுவதில் முதலிடத்தில் இருப்பது மாரடைப்பாகும்.

இவ்வாறு மரணத்தைத் தழுவுபவர்களில் பெரும்பாலானோர் புகைத்தல், மதுபானம் அருந்துதல் போன்றவற்றில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்பவர்கள் மற்றும் கொலஸ்ட்ரோல் அதிகமாதல், அதிக இரத்தப் போக்குடையவர்கள், நாளைக்கு 5 நிமிடமாவது தேகாப்பியாசம் செய்யாதவர்கள் ஆவர்.

அதிக எண்ணெய், சீனி, மாப்பொருள் ஆகியவற்றை அதிகமாக உட்கொள்பவர்கள் மற்றும் ஒருநாளைக்கு 10,000 அடிகளேனும் நடக்காதவர்கள் ஆகியோர் மிக கவனமாக இருக்க வேண்டியவர்களாவர் என சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன்
இராசேந்திரம் றெக்ஸ்குயின்ரன்
க.பொ.த. (சா.த) 2012
8A,C

மு/சிலாவத்தை தமிழ் வித்தியாலயம் முல்லைத்தீவு

எமது பாடசாலைக்கு சிறந்த பெறுபேற்றை பெற்று
தந்த செல்வன் இ.றெக்ஸ்குயின்ரன்
அவர்களை பாராட்டுகிறோம்
இத்துடன் உயர்தரம் தகுதி பெற்ற மாணவ மாணவிகளையும் வாழ்த்து கிறோம்.
இவரது சகோதரி செல்வி இ.மேரிறெக்சியாவும்
2012 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள்
பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர்

(C/2518)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஏப்ரல் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.